பக்கங்கள் : பதினான்கு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 10.00

www.uthayan.com

சுடர் 21 வள்ளுவர் ஆண்டு 2037 தை 15 சனிக்கிழமை (28.01.2006) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர் :62

## பேச்சுக்கு இணங்கியதை இந்தியா வரவேற்கின்றது

புதுடில்லி, ஜன.28

சமாதானப் பேச்சுகளை மீண்டும் ஆரம்பிப்பதற்கு தமிழீழ விடுதலைப் புலிகளும் இலங்கை அரசும் இணங்கி இருப்பதை இந்தியா வரவேற்கின்றது.

சுவிற்ஸர்லாந்து நாட்டில் பேச்சுகளை ஆரம்பிப்பதற்கு இரண்டு தரப்புகளும் எட்டியுள்ள தீர்மானத்தை இந்தியா வரவேற்கின்றது என்று இந்திய வெளிவிவகார அமைச்சு நேற்று விடுத்த அறிக்கை ஒன்றில் தெரிவித்துள்ளது

நோர்வேயின் விசேட தூதர் எரிக் சொல்ஹெய்ம் நேற்றிரவு இந்திய வெளிவிவகார அமைச்சின் செயலாளர் ஷியாம் சரணைச் சந்தித்தார். தமது இலங்கை விஜயம் தொடர்பாக அவர் இந்திய அதிகாரிகளுக்கு விளக்கினார் என்றும் தெரிவிக்கப்பட்டது.

(ஐ-12)

## இந்தோனேஷியா அருகே கடலில் பெரும் பூகம்பம்!

### ஆழிப்பேரலை அபாயம் இல்லை என அறிவிப்பு

ஜகார்த்தா,ஜன.28

இந்தோனேஷிய தீவுகளுக்கு அருகே கடலின் அடியில் பெரும் நிலநடுக்கம் ஏற்பட்டிருக்கிறது என்று அமெரிக்க புவிச்சரிதவியல் சேவை அறிவித்திருக்கிறது.

இந்தோனேஷியப் பிராந்திய நேரப்படி சனிக்கிழமை அதிகாலை ஒரு மணி 58 நிமிடமளவில் பண்டா(Banda Sea) கடற் பகுதியில் இந்தப் பூகம்பம் ஏற்பட்டது. ரிச்டர் அளவில் 7.7 புள்ளியாகப் பதிவான இந்தப் பாரிய நிலநடுக்கத்தால் சேதங்கள் எதுவும் ஏற்பட்டதாக உடனடியாக அறிவிக்கப்படவில்லை.

கடலின் ஆழத்தில் ஏற்பட்ட இந்த பூகம்பத்தால் ஆழிப்பேரலை அனர்த்தம் ஏற்படு

(14ஆம் பக்கம் பார்க்க)

# தமிழர்களின் தாயகத்தில் உள்ளூராட்சித் தேர்தலை ஒத்திவைக்க அரசு தயார்!

## ஆனால் வேட்புமனு தாக்கலான பின்பே அது சாத்தியமாகும் எனவும் தெரிவிப்பு

கொழும்பு,ஜனவரி28

**அமைதிப் பேச்சுகள் ஆரம்பமாகவிருக்கும் சூழ்நிலையில் வடக்கு - கிழக்கில் உள்ளூராட்சித் தேர்தல்களை நடத்துவது அமைதிப் பேச்சுகளுக்குக் குந்தகத்தை ஏற்படுத்தும் எனத் தமிழர் தரப்பு கருதுமானால் அந்தத் தேர்தல்களை ஒத்திவைப்பதற்கு அரசுத் தலைமை தயாராக இருப்பதாகத் தெரியவருகின்றது.**

**ஆனால், தேர்தல் சட்டங்களின்படி, தேர்தல் ஒன்று உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்பட்டால், அதற்கான வேட்புமனுக்கள் ஏற்றுக்கொள்ளப்பட்ட பின்னரே வாக்களிப்பை ஒத்திவைக்க முடியும். அதற்கமைய, வடக்கு - கிழக்கில் இப்போது உள்ளூராட்சித் தேர்தல்களை ஒத்திவைப்பது என்றால் அதற்கான வேட்பு மனுக்கள் ஏற்றுக்கொள்ளப்பட்ட பின்னரே அப்படிச் செய்யமுடியும் என்றும் அரச வட்டாரங்கள் தெரிவித்தன.**

வடக்கு - கிழக்கு உட்பட நாட்டின் அனைத்துப் பிரதேசங்களிலும் உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தல்களை நடத்துவதற்கான வர்த்தமானி அறிவிப்பு தேர்தல்கள் திணைக்களத்தினால் வெளியிடப்பட்டிருக்கின்றது.

அரசுக்கும் புலிகளுக்கும் இடையிலான சமாதானப் பேச்சுகள் பெப்ரவரி நடுப்பகுதியில் நடைபெறவிருக்கையில் -

அதற்கு முன்னதாக பெப்ரவரி 9ஆம் திகதி முதல் 16ஆம் திகதிவரை இந்தத் தேர்தல்களுக்கான வேட்புமனுக்கள் தாக்கல் செய்யப்படுவதற்கு கால அவகாசம் வழங்கி அறிவிப்பு வெளியிடப்பட்டிருக்கின்றது.

அரசுக்கும் புலிகளுக்கும் இடையில் நேரடிப் பேச்சுகள் ஆரம்பமாகி, ஒரு சுமுகநிலை தோன்றுவதற்கு முன்னர், இத்தகைய தேர்தல்

(14ஆம் பக்கம் பார்க்க)

## அயர்லாந்து பிரதிநிதி வரவேற்பு

லண்டன்,ஜன.28

சுவிற்ஸர்லாந்தில் மிகக் குறுகிய காலத்துக்குள் சமாதானப் பேச்சுகளை ஆரம்பிக்க இலங்கை அரசும் விடுதலைப் புலிகளும் இணங்கி இருப்பதை அயர்லாந்தின் சின் பெயினின் பிரதம அனுசரணையாளர் மார்ட்டின் மககின்னஸ் வரவேற்றிருக்கின்றார்.

பேச்சு நடத்துவதற்கான இடம் உட்பட பல காரணங்களால் இலங்கையின் சமாதான முயற்சிகள் தடைப்பட்டுப் போயிருந்தன என்று தெரிவித்திருக்கும் அவர், இரு தரப்பும் சுவிற்ஸர்லாந்தில் பேச்சு நடத்தச் செல்வதை நாம் மிகவும் மனப்பூர்வமாக வரவேற்கின்றோம் என்று கூறியிருக்கிறார். (ஐ)

## சேதமடைந்த நிலையில் இரு படகுகள் கரை ஒதுங்கின

கிளிநொச்சி,ஜன.28

முல்லைத்தீவுக் கடற்பரப்பில் கடந்த 23ஆம் திகதி கடலுக்குச் சென்ற சமயம் காணாமற் போயினர் எனக் கூறப்படும் இரு மீனவர்களினதும் படகுகள் சூடுபட்டு சேதமடைந்த நிலையில் நேற்றுக் கரையொதுங்கின.

கடந்த நான்கு தினங்களாகக் காணாமற் போன மீனவர்களைத் தேடும் பணிகள் மேற்கொள்ளப்பட்டுவந்தன.

இவர்களது படகுகள் சேதமடைந்த நிலையில் முள்ளிவாய்க்கால் கடற்கரைப் பகுதியில் ஒதுங்கியுள்ளன என்று முல்லை மாவட்ட கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்க சமாசத் தலைவர் மரியராசா தெரிவித்துள்ளார்.

கடற்படையினரால் இரு மீனவர்களும் பிடித்துச் செல்லப்பட்டிருக்கலாம் என்றும்-

படகைக் கொண்டு செல்லமுடியாத நிலையில் படகுகள் சேதப்படுத்தப்பட்டிருக் கலாம்

(14ஆம் பக்கம் பார்க்க)

## பேச்சுக்கான உடன்பாட்டை பிரிட்டனும் வரவேற்கின்றது

லண்டன்,ஜன.28

அமைதிப் பேச்சுகளை முன்னெடுப்பதற்கு இலங்கை அரசாங்கமும், விடுதலைப் புலிகளும் உடன்பாட்டுக்கு வந்திருப்பதை வரவேற்றுப் பாராட்டியிருக்கிறது பிரிட்டன்.

இலங்கையின் அமைதி முயற்சிகள் குறித்து அறிக்கையொன்றை வெளியிட்டிருக்கும் பிரிட்டிஷ் வெளியுறவுத்துறை அமைச்சு, இந்த பேச்சுகள் வன்முறைகளைக் குறைத்து, போர்நிறுத்த புரிந்துணர்வு ஒப்பந்தத்தை செம்மையாக அமுல்படுத்த உதவுமென்றும் நம்பிக்கை வெளியிட்டிருக்கிறது.

இலங்கையின் அமைதி முயற்சிகளில் முக்கியமான தருணம் எழுந்துள்ளதாகச் சுட்டிக்காட்டும் பிரிட்டிஷ் வெளியுறவுத்துறை அமைச்சு, அமைதி முயற்சிகளுக்குத் தனது நாடு முழுமையான ஆதரவை வழங்குவதாகத் தெரிவித்துள்ளதுடன், அனுசரணைப் பணிகளை சிறந்த முறையில் மேற்கொள்வதாக நோர்வேத் தரப்பையும் பாராட்டியிருக்கிறது.

(ஐ-க)

## கொழும்புத் தொடர் குண்டுவெடிப்பு ஆயுதத் தரகர் ஒருவரின் கைவரிசை?

கொழும்பு,ஜன.28

அரசு தனது படைகளுக்கு ஆயுதங்களைக் கொள்வனவு செய்வதற்குத் தரகராகச் செயற்படும் ஒருவரே கடந்த 23ஆம் திகதி இரவு கொழும்பில் பல இடங்களில் அடுத்தடுத்து ஐந்து குண்டுகள் வெடித்த சம்பவத்தின் சூத்திரதாரி என அரச தலைமைப்பீடம் கருதுவதாக நம்பகரமாக அறியவருகின்றது.

மேற்படி ஆயுதத் தரகர், தமது ஆயுத விற்பனை நடவடிக்கைகளை ஒட்டி மாதிரிக்கு வைத்திருந்த குண்டுகளையே இந்தத் தொடர் குண்டு வெடிப்புகளுக்குப் பயன்படுத்தியிருக்கின்றார் என அரசுத் தலைமை சந்தேகிப்பதாகவும் தெரிகின்றது.

கடந்த 23ஆம் திகதி முன்னிரவு 8 மணிக்கும் 9 மணிக்கும் இடையில் இந்தத் தொடர் குண்டு வெடிப்புகள் கொழும்பு நகரில் பல்வேறு இடங்களில் இடம்பெற்றன. ஆனால், எவரும் பாதிக்கப்படவில்லை.

அரசுக்கு எதிரான போரை ஜனவரி 23ஆம் திகதி புலிகள் ஆரம்பிப்பார்கள் என சில அச்சு ஊடகங்களில் முன்னர் ஊகச் செய்தி வெளியாகியிருந்தது.

அதை ஒட்டியே இந்தத் தொடர் குண்டு வெடிப்புக்களும் இடம்பெற்றுள்ளன எனவும் அரசுத் தலைமை கருதுவதாகத் தெரிகின்றது.

இந்தக் குண்டு வெடிப்பு நிகழ்ந்த இடங்களில் பரிசோதனை மற்றும் ஆய்வுகளை நடத்திய நிபுணர்களின் முடிவுகளின்படி, ஆயுதத் தரகர்கள் வைத்திருக்கும் மாதிரிக் குண்டுகளே அங்கு வெடித்துள்ளன என்பது தெரியவந்திருப்பதாகவும் கூறப்படுகின்றது.

(ஐ-க)

## ஹர்த்தாலினால் வவுனியா ஸ்தம்பிதம்

வவுனியா, ஜன.28

வடக்கு - கிழக்கு மாகாணத்தில் மக்களுக்கு எதிராக இராணுவத்தினர் மேற்கொள்ளும் நடவடிக்கைகள் மற்றும் மர்மப் படுகொலைகளைக் கண்டித்து நேற்றைய தினம் மேற்கொள்ளப்பட்ட ஹர்த்தால் மற்றும் கடையடைப்புப் போராட்டத்தினால் வவுனியா மாவட்டம் முற்று முழுதாக ஸ்தம்பிதமடைந்தது.

தமிழ் மாணவர் ஒன்றியம் ஏற்பாடு செய்திருந்த இந்த ஹர்த்தாலுக்கு தனியார் கல்வி நிறுவனங்களின் ஒன்றியம், வவுனியா வர்த்தகர் சங்கம், பொது அமைப்புகள் மற்றும் பாடசாலை மாணவர்கள், பல்கலைக்கழக மாணவர்கள் என அனைத்துத் தரப்பினரும் முழுமையான ஆதரவை வழங்கியிருந்தனர்.

நேற்றைய தினம் வவுனியா மாவட்டத்தில் அரச மற்றும் தனியார் நிறுவனங்கள், வர்த்தக நிலையங்கள் எவையுமே இயங்கவில்லை.


அதேவேளை, உள்ளூர் போக்குவரத்தும் மட்டுப்படுத்தப்பட்டிருந்தது.

மாணவர்களின் வரவின்மையால் பாடசாலைகளும் வெறிச்சோடிக்கிடந்தன. நகர் வெறிச் சோடியிருந்த அதேசமயம் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்காக பொலீஸாரும், இராணுவத்தினரும் ஆங்காங்கே நிறுத்தப்பட்டிருந்தனர்.

(14ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்





வவுனியாவில் நேற்று இடம்பெற்ற ஹர்த்தாலினால் பிரதான சாலைகள் கடைத் தொகுதிகள் என்பன வெறிச்சோடிக் கிடக்கும் காட்சிகள்.

# யாழ்.ஆஸ்பத்திரியில் கடந்த ஆண்டில் சுமார் 3 லட்சம் பேர் சிகிச்சை பெற்றனர்

யாழ்ப்பாணம்,ஜன.28

யாழ்.ஆஸ்பத்திரியில் கடந்த ஆண்டு வெளிநோயாளர் பிரிவில் மட்டும் 2 லட்சத்து 49 ஆயிரத்து 310 பேர் சிகிச்சை பெற்றுள்ளனர் என்பது ஆஸ்பத்திரியின் பதிவேடுகளில் இருந்து தெரியவந்துள்ளது.

இதனைவிட(வார்ட்) விடுதிகளில் 22 ஆயிரத்து 753 பேர் தங்கியிருந்து சிகிச்சை பெற்றுள்ளனர்.

இவர்களில் ஆயிரத்து 391 பேர் உயிரிழந்துள்ளனர்.

விசர் நாய்க்கடிக்கு 16 பேரும் சாதாரண நாய்க்கடிக்கு 282 பேரும் இலக்காகி சிகிச்சை பெற்றுள்ளனர் என்ற தகவலும் தெரியவந்துள்ளது.

சாதாரண காய்ச்சல் நோயினால் ஆயிரத்து 169 பேரும் -

'தைபஸ்' என்னும் ஒரு புதுவிதமான காய்ச்சலினால் 442 பேரும் பீடிக்கப்பட்டு சிகிச்சை பெற்றுள்ளனர்.

மரணங்களில் அதிகமானவை விபத்துகள், தற்கொலை ஆகியவற்றால் ஏற்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்பட்டது. (ஐ-13)

# இளவாலையில் காணாமற்போனோரை தேடும் முயற்சியில் ஆணைக் குழு

யாழ்ப்பாணம்,ஜன.28

இளவாலைப் பகுதியில் அண்மையில் இரவு நேரத்தில் சீருடையினரால் நால்வர் கைதுசெய்யப்பட்டு அழைத்துச் செல்லப்பட்டமை தொடர்பான முறைப்பாட்டை அடுத்து அவர்களைத் தேடும் முயற்சியை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். அலுவலகம் ஆரம்பித்துள்ளது.

கடந்த சில வாரங்களுக்கு முன்னர் இளவாலைப் பகுதியில் சீருடையினரால் நான்கு பேர் இரவு நேரம் அவர்களது வீடுகளில் வைத்துப் பிடித்துச் செல்லப்பட்டிருந்தனர்.

இது தொடர்பாக அவர்களது உறவினர்கள் மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். அலுவலகத்தில் முறைப்பாடுகளைச் செய்திருந்தனர்.

இந்த முறைப்பாட்டை அடுத்து மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ்.அலுவலகம் இந்த நால்வரையும் தேடும் முயற்சியில் முழுவீச்சில் ஈடுபட்டிருக்கின்றது - என்று ஆணைக்குழு அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இளவாலைப் படை முகாம் பொறுப்பதிகாரிகளிடமும் பலாலி படைத் தலைமையகத்திடமும் இந்தச் சம்பவங்கள் தொடர்பாக முழுமையான அறிக்கை தரும்படி மனித உரிமைகள் ஆணைக்குழு கேட்டுள்ளது. (ஐ-7)

# ராசிக் குழு உறுப்பினரின் வீட்டின் மீது கைக்குண்டு வீச்சு!

மட்டக்களப்பு, கல்லடியில் சிறிலங்கா இராணுவத்துடன் சேர்ந்தியங்கும் துணை ஆயுதக் குழுவான ராசிக் குழுவின் உறுப்பினர் ஒருவரின் வீட்டின் மீது நேற்றுமுன்தினம் கைக்குண்டு வீசப்பட்டது.

அடையாளம் தெரியாத நபர்கள் இரவு 9.30 மணிக்கு நடத்திய இந்தத் தாக்குதலில் வீட்டின் ஒரு பகுதி சேதமடைந்தது.

மட்டக்களப்பு நகரிலிருந்து தென்பகுதியில் 3 கிலோமீற்றர் தொலைவில் உள்ள ராசிக் குழு உறுப்பினரான பாஸ்கரன் என்பவரது வீட்டுக்கே குண்டு வீசப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. (த)

# ஜெனீவாவில் புலிகளுடன் பேச்சா? அரசு மீது ஹெல உறுமய பாய்ச்சல்!

தமிழீழ விடுதலைப் புலிகளுடன் ஜெனீவா நகரில் பேச்சுவார்த்தைகளை நடத்துவதற்கு அரசாங்கம் இணங்கியதற்கு ஜாதிக ஹெல உறுமய கடும் கண்டனம் தெரிவித்துள்ளது.

ஜாதிக ஹெல உறுமயவின் நாடாளுமன்றக் குழுத் தலைவர் அத்ரலிய ரத்னதேரர் இது தொடர்பில் கூறியுள்ளதாவது:-

வெளிநாடு ஒன்றில் பேச்சுவார்த்தைகளை நடத்துவதனூடாக ஸ்ரீலங்கா மற்றும் விடுதலைப் புலிகள் அரசு என்று இரண்டு அரசுகள் இலங்கையில் இருப்பதாக சர்வதேச சமூகத்திடம் உறுதிப்படுத்தப்படுகிறது.

அத்துடன் இதன்மூலம் ஐரோப்பிய ஒன்றியம் விடுதலைப் புலிகள் மீது போட்டிருக்கும் கட்டுப்பாடுகள் தளர்வதற்கும் இடமுள்ளது. பேச்சுவார்த்தைகள் தொடங்குவதற்கு முன்னதாக விடுதலைப் புலிகள் அனைத்துப் படுகொலைகள் மற்றும் பயங்கரவாத நடவடிக்கைகளைக் கைவிடுவதற்கு இணங்க வேண்டும்.

வடக்கு - கிழக்கில் தொடர்ச்சியாக படுகொலைகள் நடைபெறுவதானது ஜெனீவா பேச்சுவார்த்தைகளை பலனற்றதாக்கும் என்றார் அவர். (த)

# மனித உரிமை மீறல்கள் தொடர்பாக ஒரு மாத காலத்தில் 208 முறைப்பாடுகள்

யாழ்ப்பாணம்,ஜன.28

குடாநாட்டில் அண்மையில் உருவாகிய நெருக்கடியான சூழ்நிலையின்போது மனித உரிமை மீறல் சம்பவங்கள் பரவலாக அதிக எண்ணிக்கையில் நிகழ்ந்துள்ளன. மனித உரிமைகள் ஆணைக்குழுவின் மதிப்பீட்டின்படி மொத்தம் 208 மீறல் சம்பவங்கள் இடம்பெற்றிருக்கின்றன.

மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ்.அலுவலக அதிகாரி றோஹித பிரியதர்சன இத்தகவலைத் தெரிவித்தார்.

குடாநாட்டில் கடந்த ஆண்டு இறுதிக் காலப் பகுதி முதல் பரவலாக இடம்பெற்று வந்த வன்முறைச் சம்பவங்களின் போது மனித உரிமை மீறல்கள் பல இடம்பெற்றுள்ளன.

இத்தகைய மீறல் சம்பவங்கள் தொடர்பாக மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ்.அலுவலகத்திற்கு கடந்த டிசெம்பர் மாதம் முதலாம் திகதி தொடக்கம் இந்த வருடம் ஜனவரி மாதம் முதலாம் திகதி வரையான காலப் பகுதியில் 208 முறைப்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

படையினரால் தாக்கப்பட்டமை, கைதுகள் மற்றும் காணாமற்போனமை, அடையாள அட்டைகள் பறிப்பு, ஆள்கடத்தல் போன்றன உள்ளிட்ட பல முறைப்பாடுகள் பதியப்பட்டுள்ளன.

இந்த முறைப்பாடுகள் தொடர்பான விசாரணைகளை அரச திணைக்கள விசாரணை அதிகாரி ரி.சுரேந்திரன், காணாமற்போனோர் விசாரணை அதிகாரி செல்வி ரி.மொறின், மனித உரிமைகளுக்கும் அபிவிருத்திக்குமான சட்ட ஆலோசகர் றெமீடியஸ் ஆகியோர் மேற்கொண்டு வருகின்றனர்.

முறைப்பாடுகள் தொடர்பாக விசாரணைகள் பல கோணங்களிலும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

- இவ்வாறு அவர் மேலும் தெரிவித்தார். (ஐ-7)

# சனசமூக நிலையத்தின் புதிய கட்டடம் திறப்பு

தென்மராட்சி,ஜன.28

மட்டுவில் மோகனதாஸ் சனசமூக நிலையத்தில் புதிதாக நிறுவப்பட்ட கட்டடம் கடந்த புதனன்று திறந்துவைக்கப்பட்டது.

2000ஆம் ஆண்டு யுத்த அனர்த்தங்களின் போது முற்றாகச் சேதமடைந்த இக்கட்டடம் சிறுவர் பாதுகாப்பு நிதியத்தின் உதவியுடன் புதிதாக நிர்மாணிக்கப்பட்டது.

சிறுவர் பாதுகாப்பு நிதியத்தின் பிரதிநிதி திருமதி ஞானச்செல்வி சிங்கேஸ்வரன் முதன்மை விருந்தினராகக் கலந்துகொண்டு கட்டடத்தினைத் திறந்துவைத்தார்.

நிலையத் தலைவர் சி.முகுந்தன் தலைமையில் நடைபெற்ற திறப்பு விழாவில் சிறப்பு மலரும் வெளியிடப்பட்டது. (ஐ-117)

# பேச்சுக்குக் கால அட்டவணை விதிக்க அரசு விரும்பவில்லை

## அமைச்சரவைப் பேச்சாளர் தெரிவிப்பு

கொழும்பு ஜன.28

போர்நிறுத்த புரிந்துணர்வு ஒப்பந்தத்தைச் செம்மையாக நடைமுறைப்படுத்துவது பற்றிய பேச்சுகளை உடனடியாக நடத்துவதற்கு நடிவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாகவும், பேச்சுக்கான கால அட்டவணை என்று ஆராய்ந்து காலத்தை இழுத்தடிக்க அரசாங்கம் விரும்பவில்லையென்றும் தகவல் ஊடகத்துறை அமைச்சர் அனுர பிரியதர்ஷன யாப்பா நேற்றுமுன்தினம் தெரிவித் திருக்கிறார்.

அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் செய்தியாளர் மாநாடு அரசாங்கத் தகவல் திணைக்களத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்றபோதே அமைச்சர் அனுர பிரியதர்ஷன யாப்பா மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் கூறியதாவது:-

போர்நிறுத்த புரிந்துணர்வு ஒப்பந்த அமுலாக்கப் பேச்சை உடனடியாக நடத்துவதற்கு [illegible] எடுத்துவருகிறது. பேச்சுகள் குறித்தான கால அட்டவணை பற்றி இப்போது ஆராய்ந்து கொண்டிருக்கத் தேவையில்லை. பேச்சுக்காக புலிகளின் சம்மதத்தைப் பெறுவதே பெரிய விடயமாக இருந்தது. எனவே, இருபது வருட காலப் பிரச்சினை குறித்துப் பேசுவதற்கு கால அட்டவணைகளை வகுத்துக் கொண்டிராமல் உடனடியாகப் பேச்சுகளை நடத்தவேண்டுமென அரசு கருதுகிறது.

பேச்சுக்கான குழுவைத் தெரிவுசெய்வதிலும், பேச்சுக்கான அரச பிரதிநிதிகளை நியமிப்பதிலும் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ மும்முரமான நடவடிக்கைகளை எடுத்துவருகிறார். பேச்சுக்கான அரச குழுவும், பேச்சுக்கான திகதி என்பன குறித்தும் விரைவில் அறிவிக்கப்படும்.

விடுதலைப் புலிகளுடன் பேச்சுகளை இலங்கையில் நடத்துமாறு சில அரசியற் கட்சிகள் கூறுகின்றன. அவற்றின் கருத்துக்களை நாம் மதிக்கிறோம். ஆனால், இந்த விடயத்தில் அரசாங்கம் மட்டும் தனித்து தீர்மானமொன்றை எடுக்க முடியாது. பிரச்சினையுடன் சம்பந்தப்பட்ட இரண்டு தரப்புகளும் மூன்றாவது தரப்பொன்றின் உதவியுடன் கலந்துரையாடித் தீர்மானித்த விடயத்தை வீணே குழப்பிக்கொள்ள நாம் விரும்பவில்லை. முதலாவதாக நாம் பேச்சு மேசையில் உட்காரவேண்டும். அதன் பின்னர் இதர விடயங்களைத் தீர்மானிக்கலாம்.

இவ்வாறு கூறினார் அமைச்சர் அனுர பிரியதர்ஷன யாப்பா (க)

# மும்மொழிகளில் சுவரொட்டிகள்

'சுடர் ஒளி' திருமலைச் செய்தியாளர் எஸ்.சுகிர்தராஜன் சுட்டுப் படுகொலை செய்யப்பட்டமையைக் கண்டித்து அம்பாறை நகரத்தில் தமிழ், ஆங்கிலம், சிங்களம் ஆகிய மொழிகளில் சுவரொட்டிகள் நேற்றுமுன்தினம் ஒட்டப்பட்டிருந்தன.

'அம்பாறை மிக்ஸ் மீடியா போரம்' அமைப்பு இந்த சுவரொட்டிகளை ஒட்டியிருந்தது.

செய்தியாளர் 'எஸ்.எஸ்.ஆர்.' படுகொலை தொடர்பாக உரிய விசாரணை நடத்தி கொலையாளிகளைச் சட்டத்தின் முன் நிறுத்துவதற்கு ஜனாதிபதி உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என அந்தச் சுவரொட்டிகளில் கோரப்பட்டிருந்தது.

தமிழ், சிங்கள, முஸ்லிம் ஊடகவியலாளர்கள் ஒன்றிணைந்து உருவாக்கியுள்ள அமைப்பே இந்தச் சுவரொட்டிகளை அம்பாறை நகரம் எங்கும் பரவலாக ஒட்டியிருக்கின்றது. (க)

# தரம் 1 மாணவரை வரவேற்கும் வைபவங்கள்

தென்மராட்சி,ஜன.28

தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளில் தரம் ஒன்று மாணவர்களை வரவேற்கும் கால்கோள் விழா அண்மையில் சிறப்பாக நடைபெற்றது.

இந்நிகழ்வுகளில் வலயக் கல்வி அலுவலக உத்தியோகத்தர்கள் விருந்தினர்களாகக் கலந்துகொண்டனர்.

சாவகச்சேரி இந்து ஆரம்பப் பாடசாலையில் உதவிக் கல்விப் பணிப்பாளர் (முன்பள்ளி) க.பாக்கியராஜாவும் கைதடி விக்னேஸ்வரா வித்தியாலயத்தில் உதவிக் கல்விப் பணிப்பாளர்(கணிதம்) ஆ.கதிர்காமநாதனும் கைதடி கலைவாணி வித்தியாலயத்தில் ஆசிரிய ஆலோசகர்(ஆங்கிலம்) திருமதி திருக்குமாரனும் விருந்தினர்களாகக் கலந்துகொண்டனர். (ஐ-117)




Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

உதயன்
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி, தொலைநகல் — 222 2030, 222 2083, 222 3837.

# நிகழ்வுகள் தரப்போகும் விடைகள்

*"அமைதிப் பேச்சு மூலம் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதில் தமக்குள்ள பற்றுறுதியை - திடசங்கற்பத்தை - ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ செயலில் வெளிக்காட்டி உறுதிப்படுத்துவதற்கு இது ஒரு பரீட்சைக் காலம். அதில் அவர் தேறுவாரா என்பது அடுத்துவரும் நாள்களிலும் வாரங்களிலும் தெளிவாகிவிடும்."* -என்று நேற்று இப்பத்தியில் குறிப்பிட்டிருந்தோம்.

அதை எழுதிய மை காய்வதற்குள் பரீட்சையில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ கோட்டை விடப்போகின்றாரோ என்ற சந்தேகத்தை ஏற்படுத்தும் சம்பவங்கள் நடந்தேறியிருக்கின்றன.

மட்டக்களப்பு வடமுனையில் விடுதலைப் புலிகள் மீது நடத்தப்பட்ட ஆர்.பி.ஜி. தாக்குதலும், அதில் மேஜர் கபிலன் என்ற போராளி கொல்லப்பட்டமையும் பரீட்சைக் களத்தை - காலத்தை - ஆரம்ப தினங்களிலேயே கோட்டை விட ஜனாதிபதியும் அவரது அரசினரும் தயாராகிவிட்டனர் என்ற எண்ணத்தையே தமிழர் தரப்புக்கு ஏற்படுத்தியிருக்கின்றன.

"இந்தத் தாக்குதல் சம்பவம் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில் நடந்துள்ளது. எங்களுக்கும் அதற்கும் தொடர்பு ஏதுமில்லை." - என்று இராணுவப் பேச்சாளர் கூறும் விட்டேத்தியான பதிலைத் தெரிவித்தபடி, இத்தகைய அசம்பாவிதங்கள் தொடர அரசுத் தரப்பு அனுமதிக்குமானால் -

புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியான மட்டக்களப்பு வடமுனையில் நடைபெற்ற தாக்குதல் போல - அரச படைகளின் கட்டுப்பாட்டுப் பகுதியிலும் இத்தகைய தாக்குதல்கள் அரசப் படைகளுக்கு எதிராக நடக்கவும், அரச கட்டுப்பாட்டுப் பகுதியில் அவை நடப்பதால் அதற்கும் தமக்கும், தொடர்பு ஏதுமில்லை என்று புலிகள் தரப்பு 'ஸிம்பிளாக' கூறி விலக்கவும் அவை வழிகாட்டும் என்பதை அரசுத் தலைமை புரிந்துகொள்ளவேண்டும்.

கடந்த புதனன்று எரிக் சொல்ஹெய்ம் தலைமையிலான நோர்வே அனுசரணைக் குழுவினரைத் தலைவர் பிரபாகரன் சந்தித்த பின்னர், அவர் சார்பில் புலிகளின் மதியுரைஞர் அன்ரன் பாலசிங்கம் ஓர் அறிவிப்பை விடுத்தார்.

*"அரச படைகளுக்கு எதிரான சகல வன்செயல்களையும் புலிகள் இயக்கம் நிறுத்துவதாகத் தலைவர் வே.பிரபாகரன் நோர்வே அனுசரணைத் தரப்புக்கும் அதன் ஊடாக இலங்கை அரசுக்கும் தெரியப்படுத்தியிருக்கின்றார்."* - என்று பாலசிங்கம் ஊடகவியலாளர்கள் மத்தியில் பகிரங்கமாக அறிவித்தார்.

அந்த அறிவிப்பு வெளியான கணத்திலிருந்து அந்த வாக்குறுதியில் புலிகள் அமைப்பு உறுதியாக இருப்பதைக் களத் தகவல்கள் தெரிவிக்கின்றன. அதற்கான உத்தரவுகள் தலைவர் பிரபாகரனிடமிருந்து பிராந்தியத் தளபதிகளுக்கு பறந்ததை அடுத்து அந்த உறுதிமொழி புலிகள் தரப்பினால் கடுமையாகக் கடைப்பிடிக்கப்படுகின்றது.

ஆனால், புலிகளின் அந்த அறிவிப்புக்கு ஏற்ப - தனது அரசுப் பக்கத்திலிருந்தும் - வன்முறைகள் இடம்பெறாமல் தடுப்பதற்கு ஜனாதிபதியும் அவரது அரசும் தயாரா என்பதே கேள்வி.

மட்டு. வடமுனைத் தாக்குதல் இது விடயத்தில் அரசின் நிலைப்பாடு குறித்துப் பல்வேறு சந்தேகங்களைத் தமிழர் தரப்புக்கு எழுப்பியிருக்கின்றது.

வன்முறைகளை நிறுத்துவதில் புலிகள் உறுதியான முடிவு ஒன்றை எடுத்துள்ளனர் என்ற அறிவிப்பு புலிகள் தரப்பிலிருந்து வெளியாகி 48 மணி நேரம் கடந்த பின்னரும், அத்தகைய முடிவை வரவேற்று அதேபோன்ற தீர்மானத்தை ஜனாதிபதியும் எடுத்துத் தமது படைகளுக்கு கடும் உத்தரவு விடுத்திருக்கிறார் என்ற பிரகடனம் அரசுத் தரப்பிலிருந்து வரவில்லை. அத்தகைய அறிவிப்பு நேற்று மாலையே அரசுத்தரப்பிலிருந்து வெளியாகும் எனத்தெரிவிக்கப்பட்டது.

அப்படி அறிவிப்பு வெளியானால் மட்டும் போதாது. அந்த அறிவிப்பில் உள்ள நிலைப்பாடு களத்தில் முழு அளவில் நடைமுறைப்படுத்தப்படவும் வேண்டும்.

இத்தகைய முடிவு ஒன்றை முழு அளவில் நடைமுறைப்படுத்துவதில் விடுதலைப் புலிகளுக்கு உள்ள வலிமை அரசுத் தலைமைக்கு உண்டா என்பதும் சந்தேகத்திற்குரியதே.

வன்முறைகளை முழு அளவில் நிறுத்துவதன் மூலம் அமைதிப் பேச்சுகளை முன்னெடுப்பதற்கான புறச்சூழ் நிலையை உருவாக்குவதில் அரசு,புலிகள் ஆகிய இரண்டு தரப்புக்குமே பொறுப்பு - கடப்பாடு - உண்டு.

அதற்கு முதலில் இரு தரப்புத் தலைவர்களும் இதய சுத்தியாக - முழு மனதுடன் - அத்தகைய தீர்மானத்துக்கு வர வேண்டும்.

அப்படி வந்துவிட்டாலும் அந்த உறுதிமொழியை நடைமுறைப்படுத்துவதில் இரு தலைவர்களுக்கும் உள்ள இயலும் தன்மை வேறுபாடானது என்பதும் கவனிக்கத்தக்கது.

புலிகளின் தலைவர் பிரபாகரனைப் பொறுத்தவரை தனது இசைவின்றி இயக்கத்தில் அணுவும் அசையாது என்ற கடுமையான கட்டுப்பாட்டு அதிகாரத்தை வைத்திருப்பவர்; பேணுபவர்.

எனவே, தீர்மானத்தை எடுத்தார், உறுதியாக நடைமுறைப்படுத்துகிறார் என்பதை செயலில் அவரால் முழு அளவில் காட்ட முடிகிறது.

ஆனால், ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவைப் பொறுத்தவரை அரச படைகளின் வன்முறைகளைத் தடுத்து நிறுத்தும் உறுதியான மனப்பாங்கு - இதயசுத்தி - அவருக்கு உண்டா என்பது முதல் கேள்வி.

அத்தகைய இதய சுத்தியான தீர்மானம் அவரிடம் இருந்தாலும் - நாட்டின் முப்படைகள் மற்றும் பொலீஸின் தளகர்த்தராக அவர் இருந்தாலும் - அரச படைகளினதும், அவற்றின் புலனாய்வுத் துறைகளினதும், அந்தப் புலனாய்வுத்துறையின் வழிகாட்டல்களில் இயங்குவதாகக் கருதப்படும் ஒட்டுப்படைகளினதும் வன்முறை நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்தி, ஒடுக்கி தனது கைக்குள் அடக்கிவைத்திருக்கும் வலிமை அவருக்கு உண்டா என்பது இரண்டாவது கேள்வி.

அடுத்துவரும் நாள்களில் களத்தில் இடம்பெறக் கூடிய சம்பவங்கள் இந்த இரண்டு கேள்விகளுக்கும் தீர்க்கமான பதிலைத் தரக்கூடும்.

அதுமட்டுமல்ல, உத்தேச சமாதானப் பேச்சுகள் இடம்பெறுவது சாத்தியமா என்பதையும், அத்தகைய பேச்சு ஆக்கபூர்வமான நிலையில் தொடருமா என்பதையும் கூட அவைதான் தீர்மானிக்கப்போகின்றன.

# மண்டை தீவில் எஞ்சியுள்ள பனைகளும் தறிப்பு

மண்டைதீவு,ஜன.28

யுத்தத்தால் அழிந்துபோன மண்டைதீவுக் கிராமத்தில் எஞ்சியுள்ள பனைமரங்களும் சமீபகாலமாக தறிக்கப்படுகின்றன என்று அங்குள்ள மக்கள் கவலையுடன் கூறுகின்றனர்.

மண்டைதீவின் சிறுப்புலம் கந்தசாமி கோயில் சுற்றாடலிலும், பனையடிக்காடு மற்றும் கொவ்வைக் குழிப்பகுதிகளிலும் எஞ்சியுள்ள பனைமரங்களே தறிக்கப்பட்டுவருகின்றன. முதிர்ந்த மரங்கள் மட்டுமன்றி வடலி மரங்களும் தறிக்கப்பட்டு பிரதான வீதிப் பகுதிக்கு எடுத்துச் செல்லப்படுகின்றன.

1991 ஆம் ஆண்டு தொடக்கம் 1996 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் மண்டைதீவுக் கிராமத்தின் பனைவளத்தின் 90 சதவீதமான பகுதி அழிக்கப்பட்டது. மீளக்குடியமர்ந்தவர்களால் பனைமரங்களுக்குப் பதிலாகஅடிப்பனங்கொட்டுகளையே காணக் கூடியதாக இருந்தது. அவையும் தற்பொழுது காணாமல் போயுள்ளன.

பாதுகாப்பு அரண்களுக்காகவே பனைகள் தறிக்கப்படுவதாகக் கூறப்படுகிறது. இதனால் இந்தப் பகுதியில் உள்ள காணி உரிமையாளர்கள் கடும் கவலையும் விசனமும் கொண்டுள்ளனர்.

இது சம்பந்தமாக இப் பகுதிக்கான பொதுசனத் தொடர்பதிகாரி, வேலணை பிரதேச செயலர் மற்றும் யாழ்.பிராந்திய வனவளத் திணைக்கள அதிகாரி ஆகியோர் உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ஓ-88)

# வலது குறைந்தோரின் மனித உரிமைகள் குறித்து கொழும்பில் அடுத்த மாதம் தேசிய மாநாடு

கொழும்பு,ஜன.28

வலது குறைந்தவர்களின் மனித உரிமைகளை மேம்படுத்துவதையும் பாதுகாப்பதையும் நோக்காகக் கொண்டு தேசிய மாநாடு ஒன்று அடுத்த மாதம் 22ஆம், 23ஆம் திகதிகளில் கொழும்பு பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இலங்கை மனித உரிமைகள் ஆணைக் குழுவின் அனுசரணையுடன் நடத்தப்படவுள்ள இந்த மாநாட்டில் அரச பிரதிநிதிகள், வலது குறைந்தோர் தொடர்பான நடவடிக்கைகளை மேற்கொள்ளும் அரச சார்பற்ற நிறுவனப் பிரதிநிதிகள், கல்விமான்கள் எனப் பலர் கலந்துகொள்வர். இந்த மாநாட்டில் இந்திய மனித உரிமைகள் ஆணைக்குழுவைச் சேர்ந்த வலதுகுறைந்தோர் தொடர்பான விசேட ஆய்வறிக்கையாளர் அனுராதா மோகிட் அம்மையார், ஆஸ்திரேலியாவின் மனித உரிமைகளும், மனிதர்களுக்கும் சம வாய்ப்பு அளிப்பதற்கான ஆணைக் குழுவின் உறுப்பினரான கலாநிதி சேவ் ஒஸ்டவ்ஸ்கீ ஆகியோர் கருத்துரைகள் வழங்கவுள்ளனர்.

இம்மாநாட்டின் பின் தொடர் நடவடிக்கையாக இரண்டாம் நாள் வெள்ளிக்கிழமையன்று வலது குறைந்தவர்களின் உரிமைகள் தொடர்பாகப் பொது அரங்கொன்றில் கருத்துப் பரிமாற்றம் நடத்தப்படவுள்ளது.

அனுராதா மோகிட் அம்மையார், கலாநிதி ஒஸ்டவ்ஸ்கீ ஆகியோருடன் வலது குறைந்தவர்களின் அமைப்புகளைச் சேர்ந்த 25 பேர் இதில் பங்கேற்கவிருக்கின்றனர்.

இக் கருத்துப் பரிமாற்றலின் நோக்கம் வலது குறைந்தவர்களின் உரிமைகள் தொடர்பாக சர்வதேச முன்னெடுப்புகளைப் பற்றிய அறிவை குறித்த உறுப்பினர்கள் அறிந்துகொள்வதற்கு சந்தர்ப்பம் வழங்குவதற்காகும். மேலும் வலது குறைந்தவர்களின் உரிமைகளை பாதுகாப்பதும், மேம்படுத்துவதும் தொடர்பான அனுபவங்களையும் கருத்துகளையும் பகிர்ந்துகொள்வதற்கு இத்தருணம் ஒரு அரணாகும் - என்று தெரிவிக்கப்பட்டது. (3-2-13)

# கிராம அலுவலர் பிரிவு எல்லையை மீள் நிர்ணயம் செய்யக் கோரிக்கை

சாவகச்சேரி,ஜன.28

தென்மராட்சிப் பிரதேச செயலகத்திற்குட்பட்ட கொடிகாமம் மத்தி ஜே/327 கிராம சேவையாளர் பிரிவின் எல்லைகளை மீள் நிர்ணயம் செய்துதருமாறு கொடிகாமம் மத்தி கிராம அபிவிருத்திச் சங்கம் பொது நிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சின் எல்லைகள் நிர்ணயக் குழுவின் செயலாளரையும், யாழ். அரச அதிபரையும் மகஜர் மூலம் கோரியுள்ளது.

கொடிகாமம் நகரில் ஏ-9 வீதிக்கு வடக்குப் புறமாக ஜே/326 கொடிகாமம் வடக்கு கிராம சேவையாளர் பிரிவும், தெற்குப் பக்கமாக கொடிகாமம் மத்தி ஜே/327 கிராம சேவையாளர் பிரிவும் என இரு கிராம சேவையாளர் அலகுகளாகவுள்ளன.

இங்கு ஏ-9 வீதிக்கு வடக்குப் பக்கமாக கூட்டுறவுச் சங்கங்களின் தலைமைக் காரியாலயமும், பிரதேசபை செயலகம், அஞ்சல் அலுவலகம், மக்கள் வங்கி, பாடசாலை, வைத்தியசாலை, பேருந்து தரிப்பு நிலையம், இடைத் தொகுதிகளும் உள்ளன.

தெற்குப் பக்கமாக- கடைத்தொகுதிகள், பொலீஸ் நிலையம், பாடசாலை, அரச ஆயுள்வேத வைத்தியசாலை, புகையிரத நிலையம் என்பன உள்ளன.

எனவே விரைவான நகர அபிவிருத்தி ஒழுங்கான நிர்வாகக் கட்டமைப்புகளை உருவாக்க இந்த எல்லை நிர்ணயத்தை இரு பிரிவுகளில் இருந்தும் பிரிதெடுத்து ஜே/327 பிரிவை அமைக்க வேண்டும் என கோரப்பட்டுள்ளது. (ஒ-31)

# மின் மார்க்க இணைப்புப் பணி பூர்த்தி; புங்குடுதீவிற்கு விரைவில் மின்சாரம்

புங்குடுதீவுப் பகுதிக்கு மின்சாரம் வழங்குவதற்குரிய மின்மார்க்க இணைப்புப் பணி பூர்த்தியாகியுள்ளது. அப் பகுதிக்கு விரைவில் மின்சாரம் வழங்குவதற்குரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுவருகின்றன.

இவ்வாறு இலங்கை மின்சார சபையின் வட மாகாண பிரதிப் பொது முகாமையாளர் வி.சண்முகநாதன் தெரிவித்தார்.

புங்குடுதீவுப் பகுதிக்கு இதுவரை காலமும் மின்சாரம் வழங்கப்படாமையால் தாங்கள் பெரும் இடையூறுகளை அனுபவித்து வருகின்றனர் என்று அப் பகுதிமக்கள் கூறுகின்றனர்.

இது தொடர்பாகக் கேட்டபோதே பிரதிப் பொது முகாமையாளர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் கூறியதாவது:-

யாழ்ப்பாணத்தில் இருக்கும் மின் பிறப்பாக்கியில் இருந்தே காரைநகர், ஊர்காவற்றுறை போன்ற பிரதேசங்களுக்கு மின்சாரம் வழங்கப்பட்டு வருகின்றது.

புங்குடுதீவிற்கு மின்சாரம் வழங்குவதற்கு கடற்பகுதியை ஊடறுத்தே மின்மார்க்க இணைப்புகளை மேற்கொள்ள வேண்டியிருந்தது. இவ்வேலைத் திட்டம் தற்போது பூர்த்தியாகியுள்ளது. ஆனாலும் மின்சார விநியோகத்தை ஆரம்பிக்க மின்னியல் உபகரணம் ஒன்று தேவைப்படுகின்றது.

அதனைக் கொழும்பு தலைமை அலுவலகத்திடம் தொடர்புகொண்டு பெற்றுக் கொள்வதற்குரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுவருகின்றது. இந்த உபகரணம் கிடைக்கப்பெற்றதும் புங்குடுதீவிற்கான மின்சார விநியோகம் விரைவில் ஆரம்பமாகும் என்று அதிகாரி தெரிவித்தார். (ஒ-14)

# கள்ள மணல் அகழ்வு; டிராக்டர் சாரதிகள் விளக்கமறியலில்

தனியார் காணிகளில் அனுமதிப்பத்திரமின்றி சட்டவிரோதமாக மணல் அகழ்ந்த டிராக்டர் சாரதிகள் மூவரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிடப்பட்டுள்ளது. சட்ட விரோதமாகமணல் அகழ்ந்து கடத்திய குற்றச் சாட்டின் பேரில் டிராக்டர் சாரதிகள் மூவர் மீது சாவகச்சேரி நீதிமன்றில் பொலீஸார் நேற்று முன் தினம் வழக்குத் தாக்கல்செய்தனர்.

வழக்குகளை விசாரணை செய்த நீதிவான் டிராக்டர் சாரதிகளை அடுத்தமாதம் எட்டாம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார். அவர்களது டிராக்டர்கள் நீதி மன்றில் ஒப்படைக்கப்பட்டன. (ஒ-117)

# நீர்வேலி வடக்கில் வெள்ளைவான் பீதி

நீர்வேலி வடக்கு மற்றும் கரந்தன் பகுதிகளில் கடந்த வாரம் வெள்ளை வானில் வந்தவர்கள் அப்பகுதியைச் சேர்ந்த சிலரது பெயர்களைக் கூறி, அவர்களைப் பற்றி விசாரித்துள்ளனர். இச் சம்பவத்தையடுத்து அப்பகுதி மக்கள் அச்சமடைந்துள்ளனர் என்று கூறப்படுகிறது. (ஒ-72)

# சட்டவிரோத மணல் அகழ்வில் ஈடுபட்ட லொறிகள் மீது தாக்கு

சட்டவிரோத மணல் அகழ்வில் ஈடுபட்ட இரண்டு லொறிகள் இனந்தெரியாதவர்களால் அடித்து நொறுக்கப்பட்டன.

கடந்த புதன்கிழமையும், வியாழக்கிழமையும் வெவ்வேறான இச்சம்பவங்கள் கைதடிப் பகுதியில் இடம்பெற்றுள்ளன.

கடந்த புதன்கிழமை இரவு 8.30 மணிக்கு கைதடி விக்கினேஸ்வரா வித்தியாலயம் முன்பாக மணல் ஏற்றி வந்த லொறியும், மறுநாள் வியாழக்கிழமை பிற்பகல் 5 மணிக்கு இப்பகுதிக்கு அருகிலும் மணல் ஏற்றி வந்த மற்றொரு லொறியும் தாக்குதலுக்கு இலக்காகின.

சைக்கிள்களில் வந்த இனந்தெரியாதவர்கள் லொறிகளை வழிமறித்து அவற்றில் வந்தவர்களை அடித்து விரட்டிவிட்டு லொறிகளை அடித்து நொறுக்கி முற்றாகச் சேதப்படுத்தியுள்ளனர் என்று கூறப்படுகிறது.

இந்தலொறிகள் சட்ட விரோத மணல் அகழ்வுக்குப் பயன்படுத்தப்பட்டவை என்று பொதுமக்கள் தெரிவிக் கின்றனர். (ஒ-75)

## உதயவாக்கு

ஓர் அறிஞனுடைய பேனாவில் இருக்கும் மையானது தேசத்திற்காக உயிரைத் தந்த தியாகியினுடைய இரத்தத்தை விடப் புனிதமானது.

- ஓர் அறிஞர்

## நாளை

தை 16
ஞாயிற்றுக்கிழமை
29.01.2006
திதி: அமாவாசை
முன்னிரவு: 09.07 வரை
நட்சத்திரம் : உத்தராடம்
பிற்பகல் : 11.37 வரை
அமாவாசை விரதம்
சுபநேரம் : 09.36 - 11.06
ராகுகாலம்: 05.06 - 06.36
(யாழ் பஞ்சாங்க நேரப்படி)

# டக்ளஸ் - சொல்ஹெய்ம் சந்திப்பு

கொழும்பு,ஜன.28

நோர்வே வெளிநாட்டு அபிவிருத்தி விவகார அமைச்சரும் இலங்கைக்கான சமாதானப் பிரதிநிதியுமான எரிக்சொல்ஹெய்ம் தலைமையிலான தூதுக் குழுவினர் சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவைச் சந்தித்துக் கலந்துரையாடியுள்ளனர்.

இச்சந்திப்பின் போது டக்ளஸ் தேவானந்தா கருத்துத் தெரிவிக்கையில்:-

நோர்வேக் குழுவினர் உட்பட அனைத்துத் தரப்பினரும் மேற்கொண்டுவரும் சமாதான நடவடிக்கைகளுக்கு நாங்கள் ஒருபோதும் தடையாக இருக்கமாட்டோம்.

விடுதலைப் புலிகள்தான் தங்களது செயற்பாடுகளை மாற்றிக்கொள்ளாது வன்முறைகளைத் தொடர்ந்தும் முன்னெடுத்துவருகின்றனர். இதனால் புலிகள் மீது நாங்கள் கொண்டுள்ள நம்பிக்கையின்மை வலுவடைந்துவருகிறது.

தமிழ் பேசும் மக்களை இந்த வன்முறைச் சூழலில் இருந்து மீட்டெடுக்க வேண்டும். தமிழ் மக்கள் தங்களைத் தாங்களே கொலை செய்வதை நிறுத்துவதற்கும், அவர்களுக்கு நல்லதொரு வாழ்க்கையை அமைத்துக் கொடுப்பதற்கும் நோர்வே உட்பட சர்வதேச சமூகம் அதிக முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும் - என்றார்.

இச் சந்திப்பில் இலங்கைக்கான நோர்வேத் தூதுவர் ஹான்ஸ் பிரட்ஸ்கர், அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் பிரத்தியேகச் செயலாளர் எஸ்.தவராசா, ஆலோசகர் சட்டத்தரணி மகேஸ்வரி வேலாயுதம் ஆகியோர் பங்கேற்றனர். (க-204)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# மெய்வன்மைப்போட்டி

மண்டைதீவு மகா வித்தியாலயத்தின் வருடாந்த இல்ல மெய் வன்மைப் போட்டி இன்று சனிக்கிழமை காலை 9.00 மணிக்கு வித்தியாலய மைதானத்தில் அதிபர் சு.கனகரத்தினம் தலைமையில் நடைபெறும்.இந்த நிகழ்வில் தீவக வலயக்கல்விப் பணிப்பாளர் ஆ.இராசேந்திரன் பிரதமவிருந்தினராகக் கலந்துகொள்வார். (ஒ-88)


## தேவை

### பாதுகாப்பு ஊழியர்கள்

தகைமை:

* G.C.E. (O/L) சித்தி
* வயது 25 இற்கு மேல்
* உயரம் 5' 4'', மார்பளவு 32''
* நல்ல தேக ஆரோக்கியம், கூரிய கண்பார்வை
* விளையாட்டுகளில் சிறப்புற்று விளங்கியமை
* முன் அனுபவம் உள்ளவர்கள் விரும்பப்படுவர்

சம்பளம் பேசித் தீர்மானிக்கப்படும்

விரும்புவோர் 31.01.2006 செவ்வாய்க்கிழமை முற்பகல் 10 மணிக்கு கீழ்க்காணும் முகவரிக்கு ஆவணங்களுடன் நேரில் வரவும்.

முகாமையாளர்

**லக்ஷ்மி ஏஜென்சி**

எஸ் - லோன் விநியோக நிலையம்,
2ஆவது லேன்,
23/1, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.

(பிறவுண் வீதியில் இருக்கும் மின்சார சபைக் காரியாலயத்திற்கும் கலட்டிச் சந்திக்கும் இடையில் முகவரி அமைந்துள்ளது). (கி/47555)(21.17.45)



## கண்ணீர் அஞ்சலி

எமது பாடசாலை ஆசிரியரான
திருமதி தேவகிருபாகரனின் அன்பு மகனான

**தேவஅருன்**

அவர்கள் இறைபதம் அடைந்த இவ் முப்பத்தோராவது நாளில் அவரின் பிரிவால் துயருற்று இருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடையஇறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

J/Holy Family convent, Jaffna. (46078)(21.17.15) அதிபர், ஆசிரியர்கள், கல்விசாரா ஊழியர்கள்.


## வலி.வலயத்தில் 2 பதவிகளுக்கு ஆள்சேர்ப்பு

யாழ்ப்பாணம்,ஜன.28

வலிகாமம் கல்வி வலயத்திற்குட்பட்ட சங்கானை கோட்ட உதவிக் கல்விப் பணிப்பாளர் பதவிக்கும் உடுவில் மான்ஸ் மகாவித்தியாலயத்தின் அதிபர் பதவிக்கும் தகுதியானவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

இந்தப் பதவிகளுக்கான விண்ணப்பங்களை ஏற்கும் கடைசித் திகதி அடுத்த மாதம் 13ஆம் திகதி என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ஒ)


## வாழ்த்துகின்றோம்



இன்று (28.01.2006) ஜேர்மனி எஸ்.என். நகரில் இல்லறத்தில் இணையும் எமது சிரேஷ்ட புத்திரன்

**நித்தியநாதன் (ரவி)**

கோண்டாவில் வடக்கு லோகநாதன் தம்பதியின் புதல்வி

**பிரவினா (பிரவி)**

ஆகியோரைப் பல்லாண்டு காலம் சகல நலன்களும் பெற்று வாழ வாழ்த்துகின்றோம்.

- குமாரசாமி குடும்பத்தினர், பழைய பாடசாலை வீதி, கல்வயல், சாவகச்சேரி. குகன் ரவல்ஸ், 0778086969

(கி/47550) (24-17-45-21)


## நோர்வேக்கு சுவிஸ் ஆதரவு

சுவிற்ஸர்லாந்து, ஜன.28

யுத்த நிறுத்த அமுல் குறித்து சுவிற்ஸர்லாந்தில் சந்தித்துப் பேசுவதற்கு இலங்கை அரசும், விடுதலைப் புலிகளும் இணங்கிக்கொண்டிருப்பதை வரவேற்றுள்ள சுவிற்ஸர்லாந்து அரசு, அதற்கு வேண்டிய அத்தனை ஆதரவுகளையும், ஒத்துழைப்புகளையும் நோர்வே அனுசரணையாளர்களுக்குத் தான் வழங்கும் என்றும் அறிவித்துள்ளது.

அரசு, புலிகள் பேச்சுகள் சாத்தியமான அளவு கூடுதல் விரைவாக நடைபெறும் என்று அரசு எதிர்பார்க்கிறது என்றும் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

நோர்வேயின் அனுசரணையுடன் முன்னெடுக்கப்படும் சமாதான முயற்சிகளை சுவிற்ஸர்லாந்து ஆதரித்து நிற்கிறது. எனவே முரண்பாட்டுக் காரணங்களுக்கிடையிலான பேச்சு சுவிற்ஸர்லாந்தில் நடைபெறுவதை வரவேற்பதுடன், அதற்கு வேண்டிய அனைத்து உதவிகளையும் வழங்குவதற்குத் தயாராகவும் சுவிற்ஸர்லாந்து உள்ளது என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கையில் சமாதானமும் மனித உரிமைகளும் பேணப்பட்டு, நாடு அபிவிருத்தியடையவேண்டும் என்ற பற்றுறுதி காரணமாகவே அந்த கட்டுக்கோப்புக்குள் இருந்தே சுவிற்ஸர்லாந்து இந்த வாய்ப்பைத் தந்து உதவுகிறது.

சமாதான முன்னெடுப்புத் தொடர்பாக நோர்வே எடுக்கும் முயற்சிகளையும் சுவிற்ஸர்லாந்து அரசு பாராட்டியுமுள்ளது. நோர்வேயின் இந்த முயற்சிக்கான நம்பிக்கை பயனளிக்கக்கூடிய பலாபலனுடன் முடிந்திருக்கிறது என்றும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (க-3)


## மரண அறிவித்தல்

### விநாசித்தம்பி சோமசுந்தரம்

(பிரபல தொழிலதிபர், கொட்டடி மரக்காலை
CITY HARDWARE, CITY STEELS, STANLY ROAD, JAFFNA.
CITY TRANSPORT SERVICE CENTRAL, ROAD, COLOMBO-12.
பங்காளர் S.அருணாச்சலம் செட்டியார் அன்சன்ஸ்,
165, 5ஆம் குறுக்குத் தெரு, கொழும்பு-11)



புங்குடுதீவு, 12ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் 119, பிறவுண் வீதி, யாழ்ப்பாணத்தை வதிவிடமாகவும் தற்போது கொழும்பு 26/5, லோறிஸ் வீதி, பம்பலப்பிட்டியில் வசித்தவருமாகிய பிரபல தொழிலதிபர் விநாசித்தம்பி சோமசுந்தரம் அவர்கள் 25.01.2006 அன்று காலமானார்.

அன்னார் சிறிதேவியின் (நாகம்மா) அன்புக் கணவரும் கேதீஸ்வரன் (சுவிஸ்), ஆனந்தகௌரி (சுவிஸ்), ஜெகதீஸ்வரன், பிரகதீஸ்வரன், மனோகௌரி (கனடா), அமிர்தகௌரி (ஆசிரியை), ஜெயகௌரி (சங்கீத ஆசிரியை, சைவப்பிரகாச வித்தியாலயம், வேலணை) ஆகியோரின் பாசமிகு தந்தையும் செல்வி நீதிராஜா, சகி, சந்திரா, ரூபசாந்தன், யோகமோகன் ஆகியோரின் அன்பு மாமனும் சஜானி (கண்ணம்மா), தினேஸ், திருஷா, கருஷன், சஞ்சயன், ஆதித்தன், ஆரணியன், அருண், பிரவீனா ஆகியோரின் பாசமிகு பேரனும் காலஞ்சென்றவர்களாகிய சிவபாக்கியம், ஆறுமுகம், காராளபிள்ளை, பசுபதிப்பிள்ளை, சிவக்கொழுந்து மற்றும் சின்னத்தங்கம், நாகம்மா ஆகியோரின் அன்புச் சகோதரரும் காலஞ்சென்ற கந்தையா (ஆசிரியர்) மற்றும் சறோஜினி இரத்தினம், இராசமணி முத்தையா ஆகியோரின் மைத்துனருமாவார்.

அன்னாரின் பூதவுடல் நாளை (29.01.2006) ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணிக்கு அவரின் இல்லத்தில் இறுதிக்கிரியைகள் நடைபெற்று முற்பகல் 10 மணிக்கு பொரளை இந்து மயானத்தில் தகனஞ் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்,நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

No. 26/5, Loures Road, Bambalapitya.
T.P.: 2589701. (46080)(21.45.17)

தகவல்:
மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள்.







Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# சுகாதார விழிப்புணர்வு நடவடிக்கையால் தொற்றுநோய் பரம்பல் குறைந்துள்ளது

## சுகாதாரப் பணிப்பாளர் சொல்கிறார்

யாழ்ப்பாணம்,ஜன.28

குடாநாட்டில் தொற்று நோய்களைக் கட்டுப் படுத்தும் விதத்தில் சுகாதாரத் திணைக்களத் தால் நடைமுறைப்படுத்தப்பட்டு வரும் சுகா தார விழிப்புணர்வு நடவடிக்கைகள்கூடிய பலன் கிடைத்துள்ளது. இதனால் தொற்று நோய்கள் வெகுவாகக் குறைந்துள்ளது. இத் தகவலை பிரதி மாகாணச் சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஆ.கேதீஸ்வரன் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித் தாவது:-

குடாநாட்டில்உள்ள உணவகங்களில், தேநீர்ச் சாலைகளில் சுகாதார விதிமுறைகளைக் கடைப் பிடிக்குமாறு சுகாதாரத் திணைக்களத்தினால் கடுமையான உத்தரவு வழங்கப்பட்டது.

இதன் பின்னர் சுகாதார விதிகளுக்கு அமை வாக நடத்தப்படாத உணவகங்கள், தேநீர்ச் சாலைகள் மீது உரிய நடவடிக்கை எடுக் கப்பட்டது.

அத்துடன் சில கடைகளுக்கு 'சீல்' வைக் கப்பட்டது. இதன் காரணமாக தற்போது குடா நாட்டில் சுகாதார விதிமுறைகள் இறுக்கமான முறையில் நடைமுறைப்படுத்தப்படுகிறது.

இத்தகைய நிலையினை அவதானிக்க எமது பொது சுகாதார பரிசோதகர்கள் நேரில் சென்று பார்வையிட்டு வருகின்றனர்.

அனைத்து நிலையங்களிலும் சுகாதார விதிமுறைகள் ஒழுங்காக பேணப்படுவதாக எமக்கு அறிவித்துள்ளனர்.

இது போன்று இனிமேல் காலங்களிலும் சுகாதார நடவடிக்கைகளைப் பின் பற்ற அனை வரும் ஒத்துழைப்பு வழங்க வேண்டும் - என் றார் அவர். (3-13)

# மாதகல் இந்து மயானத்தை மக்கள் பயன்படுத்த அனுமதிக்குக!

## அந்தப் பிரதேச மக்கள் அரச அதிபரிடம் கோரிக்கை

வலி.தென்மேற்கு,ஜன.28

''மாதகல் குசுமன்துறை கடற்கரைக்கு சமீ பமாகவுள்ள இந்து மயானத்தில் சடலங் களை தகனஞ்செய்வதற்கு விதிக்கப்பட்டுள்ள தடையை நீக்குவதற்கு அப் பிரதேசத்திற்கு பொறுப்பான இராணுவ அதிகாரியுடன் தொடர்பு கொண்டு ஆவன செய்யப்பட வேண்டும்'' என்று யாழ்.மாவட்ட அரசாங்க அதிபருக்கு அனுப்பி வைத்துள்ள கடிதம் ஒன்றில் வலி.தென்மேற்கு பிரதேச சபையின் செயலாளர் மே.சாந்தசீ லன் கேட்டுள்ளார்.

கடந்த வாரம் நடைபெற்ற வலி.தென் மேற்கு பிரதேச செயலக ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்திலும் இவ் விடயம் பிரஸ்தா பிக்கப்பட்டது. கடற்படையினர் விதித்துள்ள இத் தடையினால் மாதகல் பகுதியிலுள்ள இந்து சமய மக்கள் எதிர்நோக்கும் கஷ்ரங் கள் பற்றி இந்தக் கடிதத்தில் எடுத்துக் கூறப் பட்டுள்ளது.

மாதகல் இந்து சமய விருத்திச் சங்கம், மாதகல் தெற்கு கிராம அபிவிருத்திச் சங்கம் ஆகியன இது விடயமாக உரிய அதிகாரிக ளுக்கு மெஜர்களை அனுப்பிவைத்துள்ளன.

ஆகவே, இது விடயமாக இராணுவ அதி காரியுடனும் மற்றும் உரிய அதிகாரிகளுட னும் தொடர்புகொண்டு இக் கடற்கரையில் இறந்தவர்களின் சடலங்களை தகனஞ்செய் வதற்கு அனுமதி பெற்றுத் தருமாறு வேண் டிக் கொள்கின்றோம் - என்று அக் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இக் கடிதத்தின் பிரதிகள் வலி.தென் மேற்கு (சண்டிலிப்பாய்) பிரதேச செயலர், மாதகல் தெற்கு கிராம அபிவிருத்திச் சங்கம், மாதகல் இந்து சமய விருத்திச் சங்கம் ஆகி யவற்றிற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. (3-135)

## அபிராமிப்பட்டர் திருவிழா

யாழ்ப்பாணம்,ஜன.28

வல்வெட்டித்துறை ஸ்ரீ முத்துமாரி அம் மன் ஆலயத்தில் அபிராமிப்பட்டர் திரு விழா நாளை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு நடைபெறவுள்ளது.

இந் நிகழ்வில் கோப்பாய் ஆசிரிய கலா சாலை விரிவுரையாளர் சங்கீத பூஷணம் எஸ்.குமாரசாமி அபிராமி அந்தாதிப் பாடல்கள் பாடுவார். (3-204)

## மெய்வன்மைப்போட்டிகள்

யாழ்ப்பாணம்,ஜன.28

ஏழாலை மேற்கு சைவசன்மார்க்க வித்தி யாசாலையின் வருடாந்த இல்ல மெய்வன் மைப்போட்டி நாளை ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 9.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

பாடசாலை அதிபர் செ.சிவநடராஜா தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ் விற்கு முதன்மை விருந்தினராக வலிகாமம் வலயக் கல்விப் பணிப்பாளர் ப.விக்னேஸ் வரனும் சிறப்பு விருந்தினராக உடுவில் கோட் டக் கல்விப் பணிப்பாளர் செ.குபேரநாதனும் கலந்துகொள்வர். (3-203)

* * *

யாழ்ப்பாணம்,ஜன.28

சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரியின் இல்ல மெய்வன்மைப் போட்டி இன்று சனிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளது.

பாடசாலை அதிபர் வ.ஸ்ரீகாந்தன் தலை மையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில் வலிகாமம் கல்வி வலய உடற்கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர் வி.பாலசிங்கம் பிரதம விருந்தினராகவும் மானிப்பாய் இந்துக் கல் லூரி அதிபர் ச.சிவநேஸ்வரன் சிறப்பு விருந்தி னராகவும் கலந்துகொள்வர். (3-203)



ஏழாலை வடக்கு அ.மி.த.க. பாடசாலை, குப்பிளான் விக்னேஸ்வரா ம.வி., ஏழாலை சைவ மகாஜனா ஆகிய பாடசாலைகள் இணைந்து நடத்திய 2005 ஆம் ஆண்டுக்கான ஒளி விழா நிகழ்வின்போது எடுக்கப்பட்ட படம் இது.

நிகழ்வில் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்ட குளமங்கால் ஏழாலை பங்குத் தந்தை அருட்திரு. எம்.கான்ஸ் மோவர் மங்கள விளக்கேற்றுவதையும் அருகில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட திருமதி ஆர்.ராஜக்கோன், ஏழலை வடக்கு தென்னிந்தியத் திருச்சபை பங்குத் தந்தை அருட்திரு . ஜே.வி.தேவசகாயம் ஆகியோர் நிற்பதையும் ப..த்தில் காணலாம். (3-203)




# அரச சார்பற்ற நிறுவனங்களிடமிருந்து யாழ்.கூ.சங்கத்திற்கு ரூபா 14 லட்சம் நிலுவை

குருநகர்,ஜன.28

யாழ்.மாவட்டத்தில் இயங்கும் அரச திணைக் களங்கள் மற்றும் அரச சார்பற்ற நிறுவனங் களிற்கு எரிபொருள் விநியோகித்த கொடுப் பனவாக 14 லட்சம் ரூபா யாழ்.பல நோக் குக் கூட்டுறவுச் சங்கத்துக்கு நிலுவையாக உள்ளதாக யாழ்.பல நோக்குக் கூட்டுறவுச் சங்க வட்டாரங்கள் தெரிவித்தன.

கடந்த நவம்பர், டிசெம்பர், ஜனவரி மாதங் களில் செலுத்தப்பட வேண்டிய நிலுவைகளே இவைகளாகும். யாழ்.பல நோக்குக் கூட்டுறவுச் சங்க எரிபொருள் நிலையம் மூலம் நிறுவனங் களுக்குரிய எரிபொருள்கள் கடனடிப்படை யில் வழங்கப்பட்டு வருகிறது. நிறுவனங்க ளின் வாகனங்களுக்கு வழங்கப்பட்ட எரி பொருள் கொடுப்பனவு நிலுவைகளை சம்பந் தப்பட்ட நிறுவனங்கள் உடன் செலுத்துமாறு யாழ்.பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் சம் பந்தப்பட்ட நிறுவனங்களைக் கோரியுள்ள தாகத் தெரிவிக்கப்பட்டது. (3-51)

# சேதமடைந்த இளவாலை ப.நோ.கூ.ச 2 லட்சம் ரூ..ா செலவில் புனரமைப்பு

வலி.தென்மே...ன.28

கடந்தகால யுத்த அனர்த்தங்களின் போது சேதமடைந்த பண்டத்தரிப்பு பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் 12ஆம் இலக்க இள வாலைக் கிளை புனரமைக்கப்பட்டு வருகின்றது.

இரண்டு லட்சம் ரூபா செலவில் இந்தக் கிளைக் கட்டடம் புனரமைப்புச் செய்யப்பட்டு வருகின்றது என்று சங்கத்தின் பொது முகாமை யாளர் சு.வைரவநாதர் தெரிவித்துள்ளார்.

இக்கிளைக் கட்டடத்தின் கட்டடப்பணிகள் பூர்த்தியடைந்ததும் வெங்காயம், மிளகாய் போன்ற விவசாய உற்பத்திப் பொருள்கள் இங்கு களஞ்சியப்படுத்தி வைக்கப்படவுள்ளன எனவும் -

அத்துடன் இளவாலை கிராமிய வங்கியும் இக்கட்டடத்தின் ஒரு பகுதியில் இயங்கும் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (3-135-203)

## பரிசகாரர் பதவிக்கான எழுத்துப் பரீட்சை இன்று நடைபெறாது

குருநகர்,ஜன.28

நிரந்தர சிற்றூழியர் சேவையில் கடமை புரிபவர்களில் பரிசகாரர் பயிற்சி நெறியில் 3ஆவது தொகுதியில் பங்குபற்றி பயிற் சியைப் பூர்த்தி செய்தவர்களுக்கான எழுத்துப் பரீட்சை இன்று நடைபெறமாட்டாது என யாழ்.பிரதி மாகாணச் சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஆ.கேதீஸ் வரன் தெரிவித்துள்ளார்.

மேற்படி பரீட்சை இன்று சனிக்கிழமை நடைபெறவுள்ளது என சில செய்தி ஊட கங்கள் செய்தி வெளியிட்டிருந்தன. இதனை மறுத்த அவர் இக் கருத்தை வெளியிட்டுள் ளார்.

யாழ்.பிரதி மாகாணச் சுகாதார சேவைப் பணிப்பாளர் அலுவலகம் மற்றும் அதன் கீழ் இயங்கும் வைத்திய நிறுவனங்களில் நிரந் தர சிற்றூழியர் சேவையில் கடமை புரிப வர்களில் பரிசகாரர் பயிற்சி நெறியைப் பூர்த்தி செய்த 3ஆவது தொகுதியினருக்கான எழுத் துப் பரீட்சைக்குரிய திகதி பின்னர் சம்பந்தப் பட்டவர்களுக்கு அறிவிக்கப்படும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (3-6-51)

## பரிசளிப்பு விழா

குருநகர்,ஜன.28

யாழ்.சென்.ஜேம்ஸ் மகளிர் பாடசாலை யின் பரிசளிப்பு விழா இன்று சனிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு பாடசாலையின் பிர தான மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

பாடசாலை அதிபர் திருமதி.லு. மகேஸ் வரன் தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில் யாழ். பல்கலைக்கழக முன்னாள் பேராசிரியர் அ.சண்முகதாஸ் மற்றும் கலா நிதி திருமதி மனோன்மணி சண்முகதாஸ் ஆகியோர் பிரதம விருந்தினர்களாகக் கலந்து கொள்வர். (3-51-190)

## பாடசாலைகளில் பிள்ளைநேயக் கல்வி

யாழ்ப்பாணம்,ஜன.28

'யுனிசெவ்' அனுசரணையுடன் யாழ். கல்வி வலயத்தில் உள்ள பாடசாலைகளில் 'பிள்ளை நேயப் பாடசாலைச் செயற்றிட்டம்' ஒன்றை அமுல்படுத்துவதற்கான ஆசிரியர் செயலமர் வுகள் நடத்தப்பட்டுவருகின்றன.

விரைவில் இத்திட்டம் பூரணப்படுத்தப்ப டும் என யாழ். கல்வி வலய அதிகாரி ஒருவா தெரிவித்தார். (3-12-14)

## ஸ்கந்தாவில் கால்கோள் விழா

யாழ்ப்பாணம்,ஜன.28

சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரி ஆரம் பப் பிரிவின் கால்கோள் விழா கடந்த 19 ஆம் திகதி வியாழக்கிழமை காலை 9.30மணி யளவில் கல்லூரி மண்டபத்தில் சிறப்பாக நடைபெற்றது.

கல்லூரியின் அதிபர் க. சிவாஜி தலைமை யில் நடைபெற்ற இந்நிகழ்வில் ஓய்வுபெற்ற தபால் அதிபர் கே.ஆனந்தகிருஷ்ணன் மற்றும் அவரது பாரியாரும் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டனர். (3-13)

## குறுங்காலத் தொழில் பயிற்சி

யாழ்ப்பாணம்,ஜன.28

தேசிய இளைஞர் சேவைகள் மன்றம் ஜனாதிபதி அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் குறுங்காலத் தொழிற்பயிற்சியினை நடை முறைப்படுத்தி வருகின்றது.

யாழ்.பிரதேசத்தில் பெண்களுக்கான 6 மாதகால அழகுக் கலைப்பயிற்சி நெறியை யும் - சாவகச்சேரி பிரதேச செயலகம் 3மாத கால வர்ணம் தீட்டும் பயிற்சி நெறியையும் - நடத்தி வருகின்றது. (3-190)

## மருந்துக் கலவையாளர் பயிற்சி வகுப்பு

குருநகர்,ஜன.28

மருந்துக் கலவையாளர் பயிற்சிநெறி வகுப்புகள் எதிர்வரும் 6 ஆம் திகதி திங்கட் கிழமை யாழ். பண்ணையில் அமைந்துள்ள யாழ். பிரதி மாகாணச் சுகாதார சேவைப் பணிப்பாளர் அலுவலக பிராந்திய பயிற்சி நிலையத்தில் ஆரம்பமாகி நடைபெறவுள் ளது என யாழ். பிரதி மாகாணச் சுகாதார சேவைப் பணிப்பாளர் அலுவலகம் மூலம் தெரிவிக்கப்பட்டது. (3-51)




*யாழ்.றோட்டறிக் கழக மாதாந்த அதி திப் பேச்சாளர் நிகழ்வு நேற்றுமுன்தினம் மாலை உதயன் கேட்போர் கூடத்தில் இடம் பெற்றது.*

*அந்நிகழ்வில் றோட்டறிக் கழகத் தலைவர் என்.சரவணபவன் தலைமை உரை நிகழ்த்துவதனையும் அதனைத் தொடர்ந்து அதிதி உரையை மாவட்ட தொழிற்சாலை பரிசோதனை பொறியிய லாளர் சி.மகேந்திர ராஜன் நிகழ்த்துவதை யும் நிகழ்வில் கலந்துகொண்டவர்களை யும் படங்களில் காணலாம்.*

*(படங்கள்:பிரியன்)*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பதவி வெற்றிடங்கள்

## தேச நிர்மாணம் மற்று ம் அபிவிருத்தி அமைச்சு
## வடக்கு -கிழக்கு மாகாணசபை
## வடக்கு- கிழக்கு வீடமைப்பு மீள் நிர்மாணத் திட்டம்

வடக்கு- கிழக்கு மாகாணத்தில் போ ரால் பாதிப்புற்று, அழிவடைந்த வீடுகளை மீள நிர்மாணிக்கும் பொருட்டு இலங்கை அரசானது உலக வங்கியிடம் இருந்து நிதி உதவியைப் பெற்று, வடக்கு- கிழக்கு வீடமைப்பு மீள் நிர்மாணத் திட்டத்தை நடைமுறைப்படுத்துகின்றது.

தேச நிர்மாணம் மற்றும் அபிவிருத்தி அமைச்சின் திட்டத்தைச் செயற்படுத்தும் வடக்கு -கிழக்கு மாகாண சபையின் வடக்கு- கிழக்கு வீடமைப்பு மீள் நிர்மாணத்திட்டம் கீழே குறிப்பிட்டுள்ள பதவிகளுக்காகத் தகைமையுடைய விண்ணப்பதாரிகளிடமிருந்து விண்ணப்பங்களை எதிர் பார்க்கின்றது.

**பொதுவானவை**

1. பதவி தற்காலிகமானதும், ஒரு வருட ஒப்பந்த அடிப்படையிலானதுமாகும். சேவையையும், செயற்திறனையும் பொறுத்து ஒப்பந்தகாலம் நீடிக்கப்படும்.
2. தெரிவு செய்யப்பட்டவர்கள் வடக்கு- கிழக்கு வீடமைப்பு மீள் நிர்மானத்திட்டத்தின் திட்டப்பணிப்பாளரின் நேரடி மேற்பார்வையில் கடமையாற்றுவர்.
3. தெரிவு செய்யப்பட்டவர்கள் அரச நிறுவனங்களில் நிரந்தர நியமனம் பெறுவதற்குத் தகுதியுடையவராக கணிக்கப்படமாட்டார்கள்.
4. தெரிவு செய்யப்பட்டவர்கள் தேவையேற்படின் வடக்கு- கிழக்கின் எந்த ஒரு மாவட்டத்திலும் கடமையாற்ற உடன்பட வேண்டும்.
5. 18 வயதிற்கும் 60 வயதிற்கும் இடைப்பட்டவர்கள் விண்ணப்பிக்கலாம். 55 வயதிற்கு உட்பட்டவர்களின் விண்ணப்பங்கள் விரும்பப்படும். அரச திணைக்களங்கள்/ நிறுவனங்களிலிருந்து இளைப்பாறியவர்களிற்கு இவ் வயது எல்லை செல்லுபடியாகாது.
6. வேதனம்: விண்ணப்பதாரரின் தகைமை அனுபவத்தின் அடிப்படையில் பேசித் தீர்மானிக்கப்படும்.
7. விண்ணப்பதாரி வடக்கு-கிழக்கின் எந்த ஒரு மாவட்டத்திலும் கடமையாற்றுவதற்கான தேகாரோக்கியத்தையும் உடல் நலத்தையும் கொண்டவராக இருத்தல் வேண்டும்.

**விண்ணப்பிக்கும் முறை:**

விண்ணப்பதாரிகள் தங்கள் கல்வித்தகைமைகள், விசேட தகைமைகள், பிறந்த திகதி, ஏற்கனவே செய்த வேலைகளின் விவரங்கள், கடந்த கால கலைத்துறை அனுபவங்கள், செயற்பட விரும்பும் மாவட்டங்கள் ஆகியவற்றை உள்ளடக்கியவகையில் விண்ணப்பங்களைத் தயாரிக்கவேண்டும். விண்ணப்பங்கள் **திட்டப்பணிப்பாளர், வடக்கு- கிழக்கு வீடமைப்பு மீள் நிர்மாணத்திட்டம், 2 ஆம் மாடி, வடக்கு- கிழக்கு மாகாணச் செயலகம், உட்துறைமுகவீதி, திருகோணமலை** என்ற முகவரிக்கு 15.02.2006 இற்கு முன்னர் கிடைக்கத்தக்கதாக பதிவுத் தபாலில் அனுப்பி வைக்கப்படவேண்டும். அரச காரியாலயங்களில் கடமையாற்றுவோர் தங்கள் விண்ணப்பங்களை தத்மது அலுவலக தலைமை அதிகாரியூடாக அனுப்பிவைக்க வேண்டும்.

**தலைமைச் செயலகம் மற்றும் மாவட்டங்களுக்கான தகவல், கல்வி மற்றும் தொடர்பாடல் ஆலோசகர் பதவிக்கான பொறுப்புகளும் கடமைகளும்**

I. தகவல், கல்வி மற்றும் தொடர்பாடல் நிபுணரின் ஆலோசனையுடன் பிரசார நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்காகக் கருத்தரங்குகளை ஒழுங்கு செய்தல், தகவல் தொடர்பு ஊடகங்களுடனான தொடர்புகளை ஏற்படுத்துதல்.
II. திட்ட அமுலாக்கத்தின் பொருட்டு தகவல் கல்வி தொடர்பாடல் கட்டமைப்பை வளப்படுத்துவதற்காக திட்டப்பணிமனைக்கும் மாவட்ட நிர்வாகத்திற்குமிடையில் தொடர்புகளை உருவாக்குதல்.
III. கிராமப் புனர்வாழ்வுக்குழுக்கள், கிராம முன்னேற்றச் சங்கங்கள் , தொண்டு நிறுவனங்கள், சமூக ஆய்வு அமைப்பு மற்றும் பயனாளிக்களுக்கிடையில் நெருங்கிய உறவைப்பேணுதல்.
IV. மீள் நிர்மாணத்திட்டம் தொடர்பாக கிராமத் தெரிவு, பயனாளி தெரிவு, குறைகேள் நடைமுறை, தொழில்நுட்ப வழிகாட்டி மற்றும் கட்டடப் பொருள்கள் கொள்வனவு வழிகாட்டி தொடர்பான விளம்பரங்கள், குறிப்புகள் போன்ற பதிப்பாக்கங்களை தமிழ் , சிங்கள ஆங்கில மொழிகளில் தயாரிப்பதற்கு தொடர்பாடல் நிபுணருக்கு உதவிசெய்தல்.
V. திட்டம் சம்பந்தமான கொள்கைகள், செயற்பாடுகள் தொடர்பாக பத்திரிகை, வானொலி, தொலைக்காட்சி ஆகியவற்றிற்கான விளம்பரங்களை தயாரித்தல் மற்றும் தகவல் பரிவர்த்தனைக்காக இணையத்தளம் ஒன்றினைப் பராமரிக்க மத்திய பணிமனைக்கு உதவிபுரிதல்.
VI. மக்களின் ஆர்வத்தைத் தூண்டவும் அறிவை வளர்க்கவும் திட்டங்களைத் தயாரித்தலும் கருத்தரங்குகளை நடத்துதலும்.
VII. மீள் நிர்மாணம் தொடர்பான நிகழ்வுகளைச் சேகரித்தலும் பாதுகாத்தலும்.

**உ. கல்வித் தகைமைகளும், அனுபவமும்**

**அ. தகவல், கல்வி தொடர்பாடல் ஆலோசகர் (1 பதவி)**

*(வடக்கு -கிழக்கு வீடமைப்பு மீள் நிர்மாண தலைமையகம்)*

I. பொருத்தமான துறையில் பல்கலைக்கழகப் பட்டமும் சம்பந்தப்பட்ட துறையில் 5 வருடகால அனுபவமும்
II. பொருத்தமான டிப்ளோமா பட்டமும் இத்துறையில் 10 வருடகால அனுபவமும்
III. தமிழ், சிங்கள மற்றும் ஆங்கிலத்தில் புலமை

**ஆ. தகவல், கல்வி தொடர்பாடல் ஆலோசகர் (8 பதவி)**

*வடக்கு- கிழக்கு வீடமைப்பு மீள் நிர்மாணத் திட்ட மாவட்ட அலுவலகங்கள் (மட்டக்களப்பு, திருகோணமலை, அம்பாறை, யாழ்ப்பாணம், முல்லைத்தீவு, மன்னார், கிளிநொச்சி, வவுனியா)*

I. பல்கலைக்கழகப் பட்டமும் குறித்த துறையில் 5 வருட அனுபவமும்
II. க.பொ.த (உ/த) இல் சித்தியும், குறித்த துறையில் 15 வருட கால அனுபவமும்
III. 5 வருடம் குறிப்பிட்ட மாவட்டத்தில் வேலை செய்த அனுபவம்
IV. தமிழ் / சிங்கள மற்றும் ஆங்கிலத்தில் புலமை
V. வீடு கட்டுவதில் பங்காளிகளான சகல தரப்பினருடனும் இணைந்து பணியாற்றும் ஆற்றல்
VI. பெண்களிடமிருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.

**இ. தகவல் , கல்வி தொடர்பாடல் உதவி ஆலோசகர் (9 பதவி)**

**கடமைகளும் பொறுப்புகளும்**

I. மாவட்ட பிரதித் திட்டப்பணிப்பாளர் மற்றும் ஆலோசகர் ஆகியோரின் வழிகாட்டலுக்கமைவாக திட்டத்துடன் தொடர்புடைய மாவட்ட, பிரதேச கிராம மட்ட தகவல் பரிமாற்ற நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல்
II. கிராமத் திட்டங்களுக்கான கிராம அபிவிருத்தி சங்கங்கள், தொண்டு நிறுவனங்கள், கிராம புனர்வாழ்வுக்குழுக்கள், மாவட்ட பிரதேச மட்ட அரசாங்க உத்தியோகத்தர்கள் மற்றும் பயனாளிகளுடன் நெருங்கிய உறவு கொண்டு அவர்களுக்கு அறிவூட்டுதல்

**கல்வித்தகைமை**

I. குறித்த துறைசார் டிப்ளோமா மற்றும் அத்துறையில் 5 வருடகால அனுபவமும்
II. க.பொ.த (உ/த) சித்தியும் குறித்த துறையில் 5 வருட கால அனுபவமும்

விண்ணப்பதாரிகள் சகலரிடமும் கீழ்க்காணும் துறைசார் அனுபவங்கள் எதிர்பார்க்கப்படுகின்றன.

I. வடக்கு- கிழக்கு மாகாணத்திலுள்ள சமூக வேலைத்திட்டங்களில் அனுபவம்
II. பதிப்பு, வானொலி, தொலைக்காட்சி மற்றும் ஊடகங்களுடன் அனுபவங்கள்
III. தமிழ், சிங்களம் மற்றும் ஆங்கிலத்தில் திறமை
IV. கலைத்துறை, ஓவியத்துறை மற்றும் அறிவித்தல், நாடகத்துறை சார்ந்த அனுபவமும் திறமையும்
V. கிராம மட்டத்தில் கருத்தரங்குகள்; பயிற்சிப்பட்டறைகள், கலந்துரையாடல்கள் நடத்துவதில் அனுபவம்
VI. கணனி அனுபவம்

(C/47519)

**திட்டப்பணிப்பாளர்,**
**வடக்கு- கிழக்கு வீடமைப்பு மீள் நிர்மாணத்திட்ட அலகு,**
**2 ஆம் மாடி, வடக்கு- கிழக்கு பிரதம செயலாளர் செயலகம்,**
**உட்துறைமுக வீதி, திருகோணமலை.**

## பட்டாசு வெடித்து சிறுவன் காயம்

தென்மராட்சி, ஜன.28

பட்டாசை கொளுத்தி எறிய முற்பட்டபோது கைதவறி கண்ணருகில் அது வெடித்ததில் சிறுவன் ஒருவனுக்கு கண்ணில் பாதிப்புஏற்பட்டது.

இச்சம்பவம் சமீபத்தில் மட்டுவில் வடக்கில் இடம் பெற்றது. இதே இடத்தைச் சேர்ந்த குணரத்தினம் கௌசிகன் (வயது 14) என்னும் பாடசாலை மாணவனே காயமடைந்தவராவர்.

காயமடைந்த சிறுவன் சாவகச்சேரி மருத்துவமனைக்கு கொண்டுவரப்பட்டு மேலதிகசிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு அனுப்பிவைக்கப்பட்டார்.

(ஓ-117)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி

எமது பாடசாலையின் முன்னாள் அலுவலக ஊழியர் **அமரர் நவரத்தினம் கந்தசாமி** அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத்தெரிவித்துக் கொள்வதோடு, அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

(57060) ஆசிரியர் கழகம்,
யா /அருணோதயக் கல்லூரி, அளவெட்டி.

## 4ஆம் வருட நினைவலைகள்



அமரர் கந்தையா பொன்னம்பலம் (B.A.)
(ஓய்வு பெற்ற உத்தியோகத்தர், வன வளத்திணைக்களம்)

தோற்றம் 16.04.1943 மறைவு 11.02.2002

திதி- 28.01.2006

பண்பின் பிறப்பிடமே
பாசத்தின் உறைவிடமே
குடும்பத்தின் ஒளிவிளக்கே
ஆண்டுகள் நான்கு
ஓடி மறைந்தாலும்
உங்கள் நினைவு மட்டும்
மறையாது

சாமி இல்லம், பண்ணாகம், சுழிபுரம். (45993)

உங்கள் பிரிவால் வருந்தும்அன்பு மனைவி, மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

## முதலாம் ஆண்டு நினைவு அஞ்சலி



பிறப்பு 22 03 1919

இறப்பு 07 02 2005

**சிவக்கொழுந்து சண்முகம்**

மனிதரில் மாணிக்கமாய்
மாண்புடைய பெண்மணியாய்
அன்பின் சிகரமாய்
பண்பின் பிறப்பிடமாய்
இன் சொல்லின் இருப்பிடமாய்
கடமையில் கண்ணியமாய்
நேர்மையில் நிறைகுடமாய்
குடும்பத்தின் குலவிளக்காய்
துன்பத்தில் துயர்துடைத்து
இன்பத்தை எமக்களித்த
கோப்பாய் மத்தி பெற்றெடுத்த மாணிக்கமே!
உங்கள் பிரிவை
எம் உயிரில் உறைந்துவிட்ட உங்களை
எமது இதயத்தின்
ஒவ்வொரு துடிப்பிலும் உணர்கின்றோம்...
உங்கள் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனை வேண்டுகின்றோம்.

கணேஷ் கொமினிகேஷன்,கோப்பாய் வடக்கு, கோப்பாய். T.P.:0214590881

குடும்பத்தினர். (45919)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலை ஏப்ரல் மாதம் முதல் புதிய இடத்தில்

கிளிநொச்சி,ஜன.28

கிளிநொச்சியில் புதிதாக அமைக்கப்பட்டு வரும் மாவட்ட வைத்தியசாலை எதிர்வரும் ஏப்ரல் மாதத்திலிருந்து இயங்கத் தொடங் கும் என்று மாவட்ட பிரதி மாகாண சுகாதா ரப் பணிமனை வட்டாரங்கள் தெரிவித்திருக் கின்றன.

60 கோடி ரூபா செலவில் நவீன வசதிகள் கொண்டதாக கிளிநொச்சி, 156 ஆம் கட்டை யில் ஏ-9 வீதிக்கு சமீபமாக இந்த வைத்திய சாலை அமைக்கப்பட்டுவருகிறது.

வைத்தியர் விடுதி, நோயாளர் விடுதி உட் பட நவீன வசதிகள் கொண்ட பல கட்டடத் தொகுதிகள் அங்கு அமைக்கப்படுகின்றன. கட்டுமானப் பணிகள் பெரும்பாலும் பூர்த்தி யாகி வருகின்றன. ஆசிய அபிவிருத்தி வங் கியும் ஜப்பான் அரசாங்கமும் இதற்கான நிதியை வழங்கியுள்ளன.

இந்த வைத்தியசாலைக்கு கடந்த 2002 ஆம் ஆண்டு ஆசிய அபிவிருத்தி வங்கித்தலை வர் ராட ஓசியானோ அடிக்கல்லை நாட்டி வைத் திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலை புதிய இடத்தில் இயங்கத் தொடங்கியதும், தற்போது மாவட்ட வைத்தியசாலை இயங் கும் கட்டடத் தொகுதி தாதியர் பயிற்சி நிலை யம் உட்படப் பல்வேறு மருத்துவ செயற்பாடு களுக்கு பயன்படுத்தப்படும் என்று தெரிவிக் கப்படுகின்றது. (த-)

## விபத்தில் சிறுவன் படுகாயம்!

வட்டக்கச்சி,ஜன.

வட்டக்கச்சி, கல்மடுச் சந்தியில் நேற்று முன்தினம் நண்பகல் இடம்பெற்ற மோட்டா சைக்கிள் விபத்தில் சிறுவன் ஒருவன் படுகா படைந்தான்.

அதே இடத்தைச் சேர்ந்த எஸ்.விதுர்சன் (வயது-7) என்பவரே இச்சம்பவத்தில் படு காயமடைந்தவராவார்.

படுகாயமடைந்த சிறுவன் கிளிநொச்சி வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனு மதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு அனுப்பப் பட்டுள்ளார். (த-6-405)

# இடம்பெயர்ந்து வன்னி செல்லும் மக்களுக்குக் கொட்டகைகள்!

### தமிழர் புனர்வாழ்வுக்கழகம் வழங்குகிறது

பரந்தன்,ஜன.28

இராணுவ நெருக்கடிகள் காரணமாக இடம் பெயர்ந்து வன்னிக்கு வரும் மக்களுக்கான தற்காலிகக் குடியிருப்புக்களை அமைப்பதற்கு வேண்டிய பொருள்களை தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தினர் வழங்கிவருகின்றனர்.

அண்மைக்காலங்களாக யாழ். குடாநாட் டில் இடம்பெற்றுவரும் இராணுவக் கெடுபிடி கள் காரணமாக பெருமளவு மக்கள் வன்னிப் பெருநிலப்பரப்புக்கு இடம்பெயர்ந்து வருகின் றனர். இவர்கள் தங்கியிருப்பதற்கான குடியி ருப்புகளை அமைத்துக்கொடுக்கும் பணிகளை தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தினர் தீவிரமாக மேற்கொண்டுவருகின்றனர்.

இதன் ஒரு கட்டமாக கிளிநொச்சியிலும் அதனை அண்டிய பகுதிகளிலும் குடியேறியுள்ள குடும்பங்களுக்கு உடனடியாகத் தற்காலிக குடியிருப்புக்களை அமைக்கக்கூடிய இரும் புக் கம்பிகள் கொண்டு வடிவமைக்கப்பட்ட பொருள்களை வழங்கியுள்ளனர்.

இதேவேளை, இடம்பெயர்ந்த மக்களுக் கான நிரந்தரக் குடியிருப்புக்கள் அமைக்கும் ஆரம்ப கட்ட வேலைகளிலும் தமிழர் புனர் வாழ்வுக் கழகத்தினர் தீவிரமாக ஈடுபட்டு வருகின்றனர். (த-6-352)




# சோதனைச் சாவடிகளில் 'அம்புலன்ஸ்'களை தடுத்து நிறுத்துவதால் சேவைகள் பாதிப்பு

கிளிநொச்சி,ஜன.28

நோயாளர்களை ஏற்றிச்செல்லும் அம்பு லன்ஸ் வண்டிகள் இரவு பகல் என்று பாராமல் அவசர நிலைமைகளுக்கேற்ப 24 மணிநேர மும் சோதனைச் சாவடிகளிலிருந்து விடுவிக் கப்பட வேண்டும் என்று கிளிநொச்சி மாவட்ட சுகாதார அதிகாரி டாக்டர் ஆர்.சதானந்தன் கோரிக்கை விடுத்திருக்கிறார்.

அவர் கிளிநொச்சி இலங்கை போர்நிறுத் தக் கண்காணிப்புக் குழுவுக்கு எழுதியுள்ள ஒரு கடிதத்திலேயே இந்தக் கோரிக்கையை விடுத்திருக்கிறார்.

இது தொடர்பாக கடந்த 19ஆம் திகதி நடந்த சம்பவம் ஒன்றையும் டாக்டர் சதானந்தன் கண் காணிப்புக் குழுவுக்கு சுட்டிக்காட்டியுள்ளார்.

அன்றையதினம் பிற்பகல் 3மணியளவில் கிளிநொச்சி வைத்திய நிலையத்திலிருந்து ஒரு நோயாளியை ஏற்றிக்கொண்டு அம்புலன்ஸ் வண்டியொன்று சென்றது. அது மாலை 6.30 மணியளவில் திரும்பிவந்தபோது ஓமந்தை சோதனைச் சாவடியில் சிறிலங்கா இராணுவத் தால் தொடர்ந்து பிரயாணத்தை மேற்கொள்ள அனுமதிக்கப்படவில்லை. அடுத்த நாள் காலை யிலேயே அம்புலன்ஸ் திரும்பிவர அனுமதிக் கப்பட்டுள்ளது. இதனால் அன்றிரவு முழுவதும் எமது வைத்தியசாலையில் அவசர தேவைக ளுக்கு அம்புலன்ஸ் வண்டியின் சேவையை பெற்றுக்கொள்ள முடியாமல் போய்விட்டது.

இம்மாதிரியான சந்தர்ப்பங்களில் அம்பு லன்ஸ் வண்டிகள் 24 மணிநேரமு [illegible]வை யில் ஈடுபடும் வகையில் சோதனைச் சா[illegible]டி களில் தடுத்து நிறுத்தாமலிருக்க உதவி [illegible] யும்படி டாக்டர் சதானந்தன் கண்காணிப்புக் குழுவிடம் கோரியுள்ளார். (ப)



இராமநாதபுரம் மகாவித்தியாலயத்தில் கடந்த 17ஆம் திகதி நடைபெற்ற தரம் - 01 மாணவர்களை வரவேற்கும் நிகழ்வின்போது எடுக்கப்பட்ட படங்கள் இவை. இராமநாதபுரம் மாவடியம்மன் ஆலயத்தில் விசேட வழிபாடுகள் இடம்பெறுவதையும் வரவேற்கப்பட்ட தரம் -01 மாணவர்களுடன் அதிபர், வகுப்பாசிரியர்கள் நிற்பதையும் படங்களில் காணலாம். (த-405)

## மாயவனூர் கிராமத்தில் மாவீரர் பெற்றோர் கௌரவிப்பு

வட்டக்கச்சி,ஜன.28

மாயவனூர் கிராம மாவீரர்களின் பெற் றோர் கௌரவிப்பு நிகழ்வு கடந்த 24ஆம் திகதி சசி முன்பள்ளி மைதானத்தில் நடை பெற்றது.

பிரதேச ஊரக வளர்ச்சிப் பொறுப்பாளர் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் பொதுச் சுடரினை தமிழீழ ஊரக வளர்ச்சிப் பணிப் பொறுப்பாளர் கந்தம்மான் ஏற்றிவைத்தார். தொடர்ந்து மாவீரர்களின் திருவுருவப்படங் களுக்கு மலர்மாலை அணிவிக்கப்பட்டு ஈகச் சுடர் ஏற்றப்பட்டது. மாவீரர் பெற்றோரும் கௌர விக்கப்பட்டனர். இந்நிகழ்வில் சிறப்புரை களும் முன்பள்ளிச் சிறாரது கலைநிகழ்வுக ளும் இடம்பெற்றன. (த-6-405)

# வட்டக்கச்சியில் விழிப்புக் குழுக்கள் அடுத்த மாதம் முதல் இயங்கும்

### ஊடுருவல்களையும் குற்றச்செயல்களையும் தடுப்பதற்காக

வட்டக்கச்சி,ஜன.28

அடுத்தமாத முற்பகுதியில் இருந்து வட் டக்கச்சிப் பிரதேச கிராமங்களின் நுழைவாயில் களில் இரவு வேளைகளில் விழிப்புக் குழுக்கள் இயங்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

இந்த ஏற்பாட்டினைதமிழீழகாவல்துறையின் வட்டக்கச்சிப் பணிமனையினர் துரிதமாக மேற்கொண்டுவருகின்றனர். சந்தேகத்திற்கிட மானவர்களின் ஊடுருவல்களைத் தடுப்பதற் கும் களவு போன்ற குற்றச்செயலகளைத் தடுப் பதற்குமாகவே இந்த ஏற்பாடு செய்யப்படுவ தாகக் கூறப்படுகிறது.

இரவு 10 மணி தொடக்கம் அதிகாலை 5 மணிவரை இக்குழுக்கள் கடமையில் ஈடு பட்டிருக்கும். சிவிக் சென்ரர், வட்டக்கச்சி, மாயவனூர், பெரியகுளம், இராமநாதபுரம், புதுக்காடு மற்றும் கல்மடுநகர் ஆகிய கிரா மங்களின் நுழைவாயில்களில் இக்குழுக்கள் செயற்படவுள்ளன.

இது தொடர்பாக காவல்துறையினர் பிர தேச இளைஞர்களுடன் கலந்துரையாடல்களை நடத்திவருகின்றனர்.

வட்டக்கச்சி லக்கிஸ்ரார் விளையாட்டுக் கழ கம், இளந்தென்றல் விளையாட்டுக் கழகம், ஜொனி விளை[illegible]யாட்டுக்கழகம் ஆகியவற்றின் வீரர்களுடனான சந்திப்புகள் முடிவடைந்துள் ளன. தொடர்ந்தும் ஏனைய விளையாட்டுக் கழகங்களுடன் சந்திப்புகள் இடம்பெற ஏற் பாடுகள் செய்யப்பட்டுள்ளன. (த-405)

# வவுனியா வடக்கு உணவகங்களின் பணியாளர்களுக்கு அடையாள அட்டை

புளியங்குளம்,ஜன.28

வவுனியா வடக்கில் உள்ள உணவகங்க ளின் உரிமையாளர்களுக்கும் பணியாளர்க ளுக்கும் விரைவில் மருத்துவ அடையாள அட்டைகள் வழங்குவதற்கு முடிவு செய்யப் பட்டிருக்கிறது.

வவுனியா வடக்கின் சுகாதார மேம்பாடு தொடர்பான ஒன்றுகூடல் கடந்த 23ஆம் திகதி தமிழீழ சுகாதார சேவைகள் வவுனியா மாவட்டப் பணிமனையில் நடைபெற்ற போதே இது குறித்து தீர்மானிக்கப்பட்டது.

தமிழீழ சுகாதார சேவைகள் நடுவப் பணி யக இணைப்பாளர் பொன்.சிவகுமார் தலைமை யில் இடம்பெற்ற இக்கலந்துரையாடலில் சுகாதார சேவைகள் நிர்வாகப் பணிப்பாளர் வைத்திய கலாநிதி வர்மன், விசேட நடவடிக் கைப் பிரிவுப் பொறுப்பாளர் ஈழச்செல்வன், வவுனியா மாவட்டப் பொறுப்பாளர் வ.காந்தா, மாவட்ட இணைப்பாளர் காண்டீபன், சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் இ.வரதன் உட்பட வவுனியா வடக்குப் பிரதேச சபை தமிழீழ நிர்வாக சேவை அலுவலர்கள் உட்படப் பல ரும் கலந்துகொண்டனர்.

இக்கலந்துரையாடலில் எடுக்கப்பட்ட தீர் மானங்கள் சில வருமாறு:-

- வவுனியா வடக்குப் பிரதேச சபையால் கனகராயன்குளம், நெடுங்கேணி ஆகிய இடங் களில் ஆறு மாதங்களுக்குள் கொல்களங்கள் அமைத்தல்.
- பிரதேச சபையினரும் வவுனியா வடக்கு வைத்திய அதிகாரி பணிமனையினரும் இணைந்து நாய்களுக்குத் தடுப்பூசி ஏற்றுதல், நாய்களைக் கொல்லுதல் போன்ற நடவடிக் கையில் அடுத்த மாதத்திலிருந்து ஈடுபடுதல்.
- கட்டடங்கள் அமைக்கும்போது பிரதேச சபை, சுகாதார சேவையினர் ஆகியோரிடம் அனுமதிபெறவேண்டும்.
- அனைத்து உணவு கையாளும் நிலைய உரிமையாளர்களுக்கும் பணியாளர்களுக் கும் மருத்துவ ஆய்வு மேற்கொண்டு அடையாள அட்டை வழங்குதல். (த-6-355)

# நிறுத்தல் அளவைக் கருவிகளுக்கு முத்திரையிடுமாறு அறிவுறுத்து

பரந்தன்,ஜன.28

நிறுத்தல் அளவைக்கருவிகளிற்கு முத் திரையிடும் பணி நிதித்துறையின் வருவாய்ப் பகுதி நிறுத்தல் அளவைப் பிரிவினரால் மேற்கொள்ளப்பட்டுவருகின்றது.

இதன் ஒரு கட்டமாக முல்லைத்தீவு, செம் மலை, அளம்பில், தண்ணீரூற்று, முள்ளிய வளை ஆகிய பகுதிகளில் பயன்பாட்டிலுள்ள அனைத்து நிறுத்தல் அளவைக் கருவிகளை யும் சரிபார்த்து முத்திரையிடும் பணிகள் கடந்த 20ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டன. இச்செயற்பாடு எதிர்வரும் ஐந்தாம் திகதி வரை மேற்கொள்ளப்பட இருக்கின்றது.

இந்த முத்திரையிடல் செயற்பாடானது தண்ணீரூற்றிலுள்ள வருவாய்ப் பகுதி செய லகத்தின் நிறுத்தல் அளவைப் பிரிவில் நடை பெற்றுவருகின்றது.

எனவே மேற்குறிப்பிட்ட பகுதிகளில் நிறுத் தல் அளவைக் கருவிகளைப் பயன்படுத்தும் அனைவரும் குறித்த நாளில் அவற்றுக்கு முத் திரையிடுமாறு கேட்கப்பட்டுள்ளது. (த-352)



கிளிநொச்சி கரைச்சி பிரதேச சபையின் ஆளுகைக்கு உட்பட்ட பிரதேசமான பரந்தன் சந்திக்கும் ஆனையிறவு உப்பளத்துக்கும் இடைப்பட்ட உமையாள் புரம் பகுதியில் ஏ-9 வீதிக்கு சமீபமாக கழிவுப் பொருள்கள் கொட்டப்படுகின்றன. இதனால் அங்கு பெரும் துர்நாற்றம் வீசுகின்றது.

''க[illegible] சமீபமாக வாகனம் ஒன்று கழிவுகளை அகற்றிக் கொண்டிருப்பதையே படத்தில் காண்கிறீர்கள் (படங்கள்: பரந்தன் செய்தியாளர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இழந்த சக்தியை மீண்டும் பெற்றிடப் பாவியுங்கள்

**றோயல் குளுக்கோஸ்**

100% சுத்தமானது!

கடைகள் வியாபாரிகளிடம் நீங்கள் குளுக்கோஸ் வாங்கும்போது குளுக்கோஸ் என்று கேட்காமல்

றோயல் குளுக்கோஸ் தாருங்கள்! என்று கேட்டு வாங்குங்கள்!

Packed By:- ROYAL INDUSTRIES COLOMBO 12 t:0777-277670

அனைத்துப் பார்மஸிகளிலும், கடைகளிலும் பெற்றுக்கொள்ளலாம்




ஏக விநியோகஸ்தர்கள்:

சிவா நறுமணப்பூங்கா

288, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

t: 021 222 2567

(C-43109)

# சந்திரிகாவுக்கு எதிரான மனுக்கள்; மேலும் இரு நீதியரசர்கள் விலகல்

கொழும்பு.ஜன.27

முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவுக்கு ஒன்றரை ஏக்கர் அரச காணி இலவசமாக வழங்கப்பட்டுள்ளமையும் மிதமிஞ்சிய அரச வசதிகள் அவருக்குத் தற்போது வழங்கப்பட்டிருப்பதையும் ஆட்சேபித்து மூன்று சட்டத்தரணிகள் சார்பில் தாக்கல் செய்யப்பட்ட மனுக்கள் நேற்றுமுன்தினம் கொழும்பு உயர்நீதிமன்றத்தில் எடுத்துக்கொள்ளப்பட்ட போது மேலும் இரண்டு நீதியரசர்கள் அந்த வழக்கை விசாரணை செய்வதிலிருந்து தாமாக விலகிக் கொண்டனர்.

இந்த வழக்கு கடந்த 18ஆம் திகதி உயர் நீதிமன்றத்தில் நீதியரசர்கள் நிஹால் ஜயசிங்க, நிமல் காமினி அமரதுங்க மற்றும் நீதியரசர் ராஜா பெர்னாண்டோ ஆகியோர் முன்னிலையில் எடுத்துக்கொள்ளப்பட்டபோது இந்த மனுக்களை விசாரித்துத் தீர்ப்பு வழங்கத் தாம் விரும்பவில்லை எனத் தெரிவித்து நீதியரசர்கள் நிமல் ஜயசிங்க, காமினி அமரதுங்க ஆகியோர் தாமாகவே விலகிக்கொண்டனர்.

இந்நிலையில் இந்த மனுக்கள் நேற்று முன்தினம் நீதியரசர்கள் கலாநிதி ஷிராணி பண்டாரநாயக்க, ரி.பி. விஜேசூரிய, ராஜா பெர்னாண்டோ ஆகியோர் முன்னிலையில் எடுத்துக்கொள்ளப்பட்டன.

அப்போது தாங்களும் இந்த மனுக்களை விசாரணை செய்ய விரும்பவில்லை எனத் தெரிவித்து கலாநிதி ஷிராணி பண்டாரநாயக்க, ரி.பி. விஜேசூரிய ஆகியோர் விலகிக் கொண்டனர்.

இந்த மனுக்களை விசாரிப்பதற்கான புதிய நீதியரசர்கள் இனிமேல் பிரதம நீதியரசரால் நியமிக்கப்பட வேண்டும். (க)

## வெளிநாட்டு வேலை வாய்ப்பு

மலேசியா, டோகா, கட்டார், டுபாய் ஆகிய நாடுகளில் உடனடி வேலை வாய்ப்பு

**ஒரு மாதத்தில் பிரயாணம்**

★ **டோகா, கட்டார், டுபாய்**

*தச்சுவேலை, மேசன் வேலை, பார்பைன்டர்ஸ், எலக்ரீசியன், பிளம்பர், சாரதி,* OFFICE BOY, *விமான நிலையத் துப்புரவுத் தொழிலாளர், பொதி சுமப்போர்* (PORTERS)

★ **மலேசியாவில்**

ஆண்/ பெண் இருபாலாருக்கும் பின்வரும் துறைகளில் வேலை வாய்ப்பு சுப்பர் மார்க்கட், கொம்பியூட்டர் கம்பனி, தையல் வேலை, பொது வேலை, துப்புரவுத் தொழிலாளர், உதிரிப்பாக உற்பத்தியாளர்

தொடர்பு:

**RAINBOW TRAVELS and TOURS**

32/2, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

T.P.: 0777328219, 021 222 3237.

(c/.47352) (39.11.42)

## தரம் 4 மாணவர்களின்..

அடைவு மட்டத்தை உயர்த்தும் நோக்குடன் நடத்தப்படும் ஆசிரியர் திரு.வே.அன்பழகன் அவர்களின் விசேட மாதிரிப் பரீட்சைகள் - 2006. முதலாவது பரீட்சை 29.01.2006 ஞாயிறு காலை 9.00 -10.30 மணிவரை. வினாத்தாள்களைப் பெற விரும்பும் பாடசாலைகள், தனியார் கல்வி நிலையங்கள், பரீட்சை எழுதவிரும்பும் மாணவர்கள் தங்கள் பதிவுகளை புதன், வியாழன், வெள்ளி, சனி ஆகிய தினங்களில் பிற்பகல் 4 - 6 மணிவரை மேற்கொள்ளவும்.

இடம்: - அன்பொளி கல்வியகம்
நீராவிபடி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 077 3068999

(47932) (15-34)

இயக்குநர்.

## வெளிவந்து விட்டது! விற்பனையாகிறது!

*2006 புதிய பாடத்திட்டத்திற்கு அமைவான தமிழ்மொழியும் இலக்கியமும் (பாடமும், பயிற்சியும்)*

**தரம் -8 ஆக்க ஆலோசனை**

**திருமதி மனோ ஜெயராசா (B.A.)**

*(ஆசிரிய ஆலோசகர்)*

வெளியீடு:
**ஸ்ரீசுப்பிரமணிய புத்தகசாலை,**
*235, காங்கேசன்துறை வீதி,*
*யாழ்ப்பாணம். தொலைபேசி: 9481*

(சி/47539) (26-45-19)

## யாழ்ப்பாணம் மாவட்ட நீதிமன்றம்

இல.16 பிரிவு 55 (I)

| | |
|---|---|
| யாழ்ப்பாணம் | என்னுமிடத்திலுள்ள மாவட்ட நீதிமன்றத்தில் எட்னா, கவகேஸ்வரி பாலச்சந்திரன் இல.251, பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம். |
| வழக்கு இல.611/D | எதிராக — வழக்காளி |
| | கணபதிப்பிள்ளை சுப்பிரமணியம் பாலச்சந்திரன் "எவ்லின்" காங்கேசன்துறை வீதி, இணுவில், யாழ்ப்பாணம். எதிராளி |
| மேலே பெயர் குறிப்பிட்டுள்ள | எதிராளிக்கு மேலே பெயர் குறிப்பிட்டுள்ள வழக்காளி |

நீதிமுறை பிரிவு நிலை கோரி (Judicial Separation)

இந்நீதிமன்றத்தில் உமக்கெதிராக வழக்குத் தொடர்ந்துள்ளாராதலினால் அதற்கு உமது மறுமொழி ஏதேனும் இருப்பின் 2006 ஆம் ஆண்டு மாசி மாதம் 09 ஆம் நாளன்று அல்லது அதன் முன்னர் நீதிமன்றத்திற் கோப்பிடும்படி இத்தால் நீவிர் தேவைப்படுத்தப்படுவதோடு சொல்லப்பட்ட தேதியன்று அல்லது அதன் முன்னர் நீவிர் மறுமொழி கோப்பிடத்தவறும் சந்தர்ப்பத்தில் வழக்கானது மறுகட்சிக்காரரில்லாமலே மேற்கொண்டு நடத்தப்பட்டு விளங்கப்படுமென அறிந்து கொள்ளுமாறு நீவிர் இத்தால் தேவைப்படுத்தவும் படுகின்றீர்.

பதிவுபெற்ற தரணி மூலம் நீர் தோன்றாவிடில், சட்டமுறையான எல்லா அறிவித்தல்களும் சேர்ப்பிக்கப்படக்கூடிய முகவரியொன்றைக் கூறும் விவரக் குறிப்பொன்றைக் கோப்பிடுமாறு நீவிர் மேலும் தேவைப்படுத்தப்படுகின்றீர்.

நீதிமன்றக் கட்டளைப்படி
து.சிறீமோகன்,
பதிவாளர்
மாவட்ட நீதிமன்றம், யாழ்ப்பாணம்.

பவானி சற்குணராசா
வழக்காளிகளின் சட்டத்தரணி.

குறிப்பு: *விளக்கத் திகதியை நிர்ணயிப்பதற்காக இலங்க நீதிமன்றத்தில் இவ்வழக்கு ஏற்படும் திகதி பற்றிய அறிவித்தலை நீவிர் பெறவிரும்பினால் பதிவ செய்யப்பட்ட முகவரியொன்றை இந்நீதிமன்றப் பதிவாளரிடம் கொடுத்துதவுமாறும் பதிவஞ்சல் மூலம் அனுப்பி வைப்பதற்கும் செலவை மேவுவதற்குத் தேவைப்படும் முத்திரைகளைக் கொடுக்குமாறும் 80ஆம் பிரிவின் மூலம் நீவிர் தேவைப்படுத்தப்படுகின்றீர்.*

து.சிறீமோகன்,
கையொப்பம், பதிவாளர்

2006ஆம் ஆண்டு தைமாதம் 20ஆம் நாளாகிய இன்று

(26-19-45) (57094)

சுனாமிக்குப் பின்னான சமூக அபிவிருத்தியும் மீள்கட்டமைப்பும்
care கெயர் சர்வதேசம் - யாழ்ப்பாணம் 2006

## கேள்விப் பத்திரம்

கெயர் நிறுவனத்தினால் சுப்பர்மடம் கிராமத்தில் சேதமுற்ற வெள்ள வாய்க்காலைத் திருத்துவதற்காகப் பொருத்தமான ஒப்பந்தகாரரிடமிருந்து கேள்விப்பத்திரங்கள் கோரப்படுகின்றன.

இதுதொடர்பான மேலதிக விவரங்களுக்கும் விண்ணப்பப்படிவங்களைப் பெறுவதற்கும் பருத்தித்துறையில் உள்ள கெயர் அலுவலகத்துடன் காலை 8.30 மணி தொடக்கம் 4.30 மணிவரையான கடமை நேரத்தில் தொடர்புகொள்ளவும்.

**விண்ணப்ப முடிவுதிகதி: 04.02.2006**

திட்டப்பணிப்பாளர்,
கெயர் சர்வதேசம்,
சாரையடி, பருத்தித்துறை.
தொலைபேசி: 021 2264259
தொலைநகல்: 021 2264260

(சி/47538) (24-26-19-45)

## புதிய பிரிவுகள் ஆரம்பம்
## HND, MBA

பிற்போடப்பட்ட மேற்படி கற்கை நெறிகளுக்கான புதிய பிரிவுகள் எதிர்வரும் 11.02.2006 தைப்பூசத் தினத்தன்று ஆரம்பமாகவுள்ளன என்பதை மகிழ்ச்சியுடன் அறியத் தருகின்றோம்.

அனுமதிகளைப் பெற்றுக் கொண்ட மாணவர்களும் புதிய பதிவினை மேற்கொள்ள விரும்பும் மாணவர்களும் உடனடியான அலுவலகத்துடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறீர்கள்.

Director
IIS City Campus
# 181, Navalar Road, Jaffna.
☎ 021 222 8060

## சமூக தொழில்நுட்பக் கல்வி நிலையம்
## கொம்ரெக் COMTEC
சுழிபுரம் CHULIPURAM

## தொழிற்பயிற்சி நெறிக்கான விண்ணப்பம் கோரல்

★ வானொலி, தொலைக்காட்சி சீர்செய்தல் - (10 மாதங்கள் முழு நேரம்)

★ மோட்டார் வாகனப் பொறியியல் - (பெற்றோல், டீசல்) (10 மாதங்கள் முழு நேரம்)

★ வீட்டு மின்சுற்று இணைப்பும் மின்னியந்திரங்கள் மீளமுறுக்குதலும் - (10 மாதங்கள் முழு நேரம்)

★ மரவேலை தொழில்நுட்பம் - (06 மாதங்கள் முழு நேரம்)

**வயதெல்லை: 16-25 வரை**

போரூட் நிதியுதவியுடன் அதி நவீன பயிற்சி உபகரணங்கள் பயன்படுத்தப்பட்டு பயிற்சி வழங்கப்படுகின்றது. பயிற்சி நெறிகளுக்கு இருபாலாரும் விண்ணப்பிக்கலாம். விண்ணப்பங்களில் பெயர், முகவரி, கல்வித் தகைமை, தெரிவு செய்யும் பயிற்சிநெறி போன்ற விவரங்களைக் குறிப்பிட்டு **இயக்குநர், கொம்ரெக், சுழிபுரம்** எனும் முகவரிக்கு 06 பெப்ரவரி 2006இற்கு முன் அனுப்பிவைக்கவும்.

குறிப்பு: அரச அங்கீகாரம்பெற்ற NAITA பரீட்சை எழுதுவதற்கான வசதிகள் செய்து கொடுக்கப்படும்.

(சி/47543) (24-26-19-45)

- இயக்குநர்.

## நெஞ்சை விட்டகலாத நினைவலைகள்

**7ஆம் ஆண்டு**

மலர்வு 03 - 09 - 1929



உதிர்வு 05 - 12 - 1998

அமரர்
**மூத்தார் சின்னத்துரை**
*(செல்லமணி)*
*(ஓய்வுபெற்ற ஊழியர் கா.சி.கூ)*
திதி: திருதியை (18-11-2005)

அன்பு அப்பாவே!
எங்களை வாழ வைத்த தெய்வமே!
நீங்கள் மறைந்து
ஆண்டு ஏழு சென்றாலும்
என்றும் எங்கள் நெஞ்சங்களில்
நீங்கள் அணையாத தீபம் அப்பா!

**3ஆம் ஆண்டு**

மலர்வு 26 - 04 - 1949



உதிர்வு 31 - 01 - 2004

திருமதி
**புவனேஸ்வரி சின்னத்துரை**
*(சோதி)*
திதி: சதுர்த்தசி (28-01-2006)

கண்கண்ட தெய்வமே! எம் அம்மாவே!
வாழ்வில் மாண்புடன் வாழ்ந்து
நாங்கள் சிறப்புடன் வாழ்வதற்கு வழிகாட்டி
உறவுகளிற்கெல்லாம் உற்றதுணையாய் இருந்து
வாழ்ந்து வழிகாட்டி எல்லோரையும் தவிக்கவிட்டுச்
சென்று ஆண்டு மூன்று ஆகிவிட்டதம்மா!

இன்று எங்கள் தெய்வங்கள் இருவரதும் ஆத்மா சாந்தி பெற இறைவனைப் பிரார்த்திக்கிறோம்.

நிரந்தர முகவரி: இன்னாவத்தை, [illegible]

தற்காலிக முகவரி: மானிப்பாய்- மருதனார்மடம் வீதி, உடுவில்.

என்றும் எம் தெய்வங்களின் நினைவில் வாடும்:
**மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.**

(46052)(26-19-45)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பலஸ்தீனத் தேர்தலில் பெரும் வெற்றிபெற்று ஹமாஸ் இயக்கம் புதிய அரசை அமைக்கிறது

ஜெருசலேம், ஜன.28

நடந்துமுடிந்த பலஸ்தீன நாடாளுமன்றப் பொதுத் தேர்தலில் பெரும்பான்மையான ஆசனங்களைக் கைப்பற்றியுள்ள தீவிரவாதக் குழுவான ஹமாஸ் புதிய ஆட்சியை அமைக்கவுள்ளது.


இந்நிலையில், ஹமாஸ் உட்பட பலஸ்தீன அதிகாரசபையுடன் எந்த ஒரு சமரசப் பேச்சிலும் ஈடுபடப்போவதில்லை என இஸ்ரேல் தெரிவித்துள்ளது. இது அந்தப் பிராந்தியத்தில் பெரும் பதற்றநிலையைத் தோற்றுவித்துள்ளது.

ஹமாஸ் அதிகாரத்திற்கு வருவதை ஒட்டிக் கருத்து வெளியிட்ட இஸ்ரேல் இடைக்காலப் பிரதமர் எஹ்குட் ஒல்மேட் ''இஸ்ரேலை அழிக்க நினைக்கும் ஆயுதம் தரித்த பயங்கரவாத அமைப்புடன் இஸ்ரேல் அரசு எந்தப் பேச்சுக்களிலும் ஈடுபடாது'' என்று கூறினார்.

பலஸ்தீனப் பகுதிகளில் அமைதி முயற்சியை நிலைநாட்ட அனுசரணை அளித்துவரும் அமெரிக்க, ஐக்கிய நாடுகள் சபை, ஐரோப்பிய ஒன்றியம் மற்றும் ரஷ்யா ஆகியன ஹமாஸ் வன்முறைகளைக் கைவிட்டு அமைதி வழிகளுக்குத் திரும்பவேண்டும் என்று தெரிவித்துள்ளன.

இதுவரை பலஸ்தீனத்தின் அதிகாரத்தில் இருந்துவந்து பாத்தாக் கட்சியின் தலைவரும் பலஸ்தீனிய அதிபருமான மொஹமத் அபாஸ் ஹமாசை அமைதி வழி தீர்வுத் திட்டத்தை நோக்கிச் செல்லுமாறு கேட்டுக் கொண்டுள்ளார்.

பாத்தாக் கட்சியின் முக்கிய தலைவர்களில் ஒருவரும் பிரதமர் பதவியை வகித்தவருமான அஹ்மட் கூரே என்பவரும்



வெற்றிக் களிப்பில் ஹமாஸ் போராளிகள்...

ஹமாஸுடன் அரசில் இணைந்து பணியாற்ற தமது கட்சி முயன்று வருகிறது என்று தெரிவித்துள்ளார்.

ஹமாஸ் வெற்றியடைந்ததைத் தொடர்ந்து இஸ்ரேல் இடைக்காலப் பிரதமர் ஒல்மேட் தனது அமைச்சரவையைக் அவசரமாகக் கூட்டி மூன்று மணிநேரம் இதுபற்றி ஆராய்ந்துள்ளார். ஹமாஸுடன் எந்த ஒரு பேச்சுகளிலும் ஈடுபடுவதில்லை என்ற முடிவை அதன் பின்பே அறிவித்தார்.

பலஸ்தீன அதிகாரசபைக்கு நிதி உதவி வழங்கும் ஐரோப்பிய ஒன்றியம் ஹமாஸ் அமைக்கவுள்ள பயங்கரவாத அரசிற்கு அழுத்தங்களைக் கொடுக்கவேண்டுமென இஸ்ரேல் வெளிவிவகார அமைச்சர் கேட்டுக்கொண்டுள்ளார்.

அமைதி முயற்சிகளுக்கு அனுசரணைப் பணி வகித்துவரும் நான்கு தரப்புகளும் கடந்த வியாழனன்று வெளியிட்டுள்ள கூட்டறிக்கை ஒன்றில் இஸ்ரேலின் உரிமைகளையும் மதித்து அமைதி வழிகளில் செயற்படுமாறு ஹமாசை வலியுறுத்தியுள்ளது.

அமெரிக்க அமைச்சரான கொண்டலிஸா ரைஸ், ஐ.நா. செயலாளர் நாயகம் கோபி அனான், ரஷ்ய வெளிவிவகார அமைச்சர் செர்கி வாவ்ரோ மற்றும் ஐரோப்பிய ஒன்றிய வெளிவிவகாரக் கொள்கை வகுப்புத் தலைவர் யாவிர் கொலானா ஆகியோர் இந்த மாநாட்டில் கூடி ஆராய்ந்த பின்னர் இந்தக் கூட்டறிக்கை வெளியிடப்பட்டுள்ளது.

''நாங்கள் ஆக்கிரமிப்பின் கீழ் இருப்பவர்கள். இஸ்ரேலியர்கள் பலஸ்தீனர்களைத் தாக்குகின்றனர்; எமது மக்கள் கொல்லப்படுகிறார்கள்; தடுத்துவைக்கப்படுகின்றார்கள்; எமது சொத்துக்கள் அழிக்கப்பட் டுக் கொண்டிருக்கின்றன. இவற்றிக்கு எதிராகவும் எமது சுய பாதுகாப்புக்காகவுமே நாங்கள் துப்பாக்கி ஏந்துகின்றோம்'' என்று ஹமாஸ் முக்கிய உறுப்பினரும் அதன் நிறுவுநர்களுள் ஒருவருமான மொஹமட் ஷகார் என்பவர் கருத்து வெளியிட்டுள்ளார்.

''நாம் வன்முறைகளையும் பயங்கரத்தையும் செயற்படுத்துபவர்கள் அல்லர். எம் மீதான ஆக்கிரமிப்புக்கு எதிராகவே நாம் போராடுகின்றோம்'' என்று அவர் மேலும் தெரிவித்தார்.

இதேவேளை, தேர்தல் முடிவுகள் அறிவிக்கப்பட்ட தினமான நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை மேற்குக் கரைப் பகுதியில் ஹமாஸ் இயக்கத்தினருக்கும் பாத்தா ஆதரவாளர்களுக்கும் இடையே துப்பாக்கிச் சண்டை இடம்பெற்றதாகத் தெரிவிக்கப்படுகிறது. 1996இல் இடம்பெற்ற தேர்தலில் 88 ஆசனங்களைக் கொண்டிருந்த பலஸ்தீன நாடாளுமன்றத்தில் 55 ஆசனங்களைப் பாத்தாக் கட்சி தனதாக்கிக் கடந்த 10 வருடங்கள் பலஸ்தீனத்தை நிர்வகித்து வந்தது. ஆனால், இம்முறை 132 ஆசனங்களுக்கு நடைபெற்ற தேர்தலில் 43 ஆசனங்களையே அதனால் பெறமுடிந்தது. சுமார் ஒரு லட்சத்து 34 ஆயிரம் வாக்காளர்கள் இம்முறை வாக்களிக்கும் உரிமையைப் பெற்றிருந்தனர். (ம)

ஈரானுக்கு எதிராக வாக்களிக்கக் கோரிய

## அமெரிக்கத் தூதரை நேரில் அழைத்து இந்திய விவகார அமைச்சு கண்டனம்

புதுடில்லி, ஜன.28

அணுசக்தி விவகாரத்தில் ஈரானுக்கு எதிராக இந்தியா வாக்களிக்க வேண்டும் என்று கருத்து வெளியிட்ட இந்தியாவிற்கான அமெரிக்கத் தூதரை இந்திய வெளிவிவகார அமைச்சர் நேரில் அழைத்து கண்டனம் தெரிவித்தார்.

அடுத்த மாதம் வியன்னாவில் நடைபெறவுள்ள சர்வதேச அணுசக்தி அமைப்பின் கூட்டத்தில் இந்தியா ஈரானுக்கு எதிராக வாக்களிக்க வேண்டும் என்றும் அவ்வாறு ஈரானுக்கு எதிராக இந்தியா வாக்களிக்கத்தவறினால், இந்தியாவுடன் அமெரிக்கா செய்துகொண்டுள்ள அணு தொழில்நுட்ப ஒத்துழைப்பு உடன்படிக்கை சீர்குலையலாம் என்றும் இந்தியாவுக்கான அமெரிக்கத்துதுவர் டேவிட் மல்போர்ட் பி.ரி.ஐ. செய்தி நிறுவனத்துக்கு கருத்துத் தெரிவிக்கையில் கூறியிருந்தார்.

இதனையடுத்து அமெரிக்கத் தூதரை நேரில் அழைத்து அவரது கருத்துக்கு இந்தியா கண்டனம் தெரிவித்தார். (ஒ)

## தனது ஊதியத்தை அரைவாசியாக குறைத்தார் பொலீவியா ஜனாதிபதி

பொலீவியா, ஜன.28

பொலீவியா நாட்டின் புதிய இடது சாரிக் கட்சி ஜனாதிபதியான எவோ மொறாலிஸ் தனது ஊதியத்தை ஆயிரத்து 800 அமெரிக்க டொலர்களாகக் குறைத்துள்ளார். இது அவரது மொத்த ஊதியத்தின் அரைப்பங்கு ஆகும்.

இந்த ஊதியக் குறைப்பின் நோக்கம் பொலீவிய அரச துறையில் பணிபுரியும் அனைத்து ஊழியர்களினதும் ஊதியத்தில் மாற்றங்களைக் கொண்டுவருவதேயாகும். ஜனாதிபதியைவிட எந்த ஊழியர்களும் அதிக மாகச் சம்பாதிக்கமுடியாது என்பது அங்குள்ள அரசமைப்பு விதியாகும்.

இந்தச் சம்பளக் குறைப்புத் தொடர்பாகக் கருத்துத் தெரிவித்த பொலீவிய ஜனாதிபதி இந்தப் பணம் சேமிக்கப்பட்டு ஆசிரியர் களையும் வைத்தியர்களையும் அதிகளவில் உருவாக்க செலவிடப்படும் - என்றார்.

தனது அரசில் அங்கம் வகிக்கும் சகாக்களின் ஊதியத்தைக் குறைக்குமாறும் அவர் பரிந்துரைத்துள்ளார். தான் ஜனா திபதியாகத் தெரிவுசெய்யப்பட்டால் நாட் டின் முன்னேற்றத்திற்காகத் தனது சொந்தப் பணத்தில் அரைப் பகுதியை ஈடாகவைப்பார் என அவர் தேர்தல் பிரசாரங்களில் தெரிவித்து வந்தார்.

## கன்சர்வேட்டிவ் கட்சி கனடாவில் வெற்றி

ஒட்டாவா, ஜன.28

கனடாவில் நடந்து முடிந்த நாடாளுமன்றத் தேர்தலில் கன்சர்வேட்டிவ் கட்சி வெற்றி பெற்றுள்ளது. 308 தேர்தல் தொகுதிகளில் நடைபெற்ற இத்தேர்தலில் 124 தொகுதிகளில் அந்தக் கட்சி வெற்றி பெற்றுள்ளது.

இந்நிலையில் இதர கட்சிகளின் ஆதரவுடனேயே ஆட்சி அமைக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. தேர்தல் வெற்றியையடுத்து அந்தக் கட்சியின் தலைவர் ஸ்டீபன் ஹார்பர் பிரதமராக பதவியேற்கவுள்ளார். (ஒ)

## எண்ணெய் நிறுவனங்கள் மீது நைஜீரியாவில் கிளர்ச்சியாளர் தாக்குதல்

நைகர், ஜன.28

நைஜீரியாவின் தெற்கு நகரான போட் கார்கோட் பகுதியில் அமைந்துள்ள இத்தாலிய எண்ணெய் நிறுவனம் ஒன்றின் அலுவலகங்கள் தாக்கப்பட்டதில் குறைந்தது ஒன்பது பேர் பலியாகியுள்ளனர். இவர்களில் 7 பேர் பொலீஸார், ஏனைய இருவர் சாதாரண பொதுமக்களும் அடங்கு வர்.

ஆற்றங்கரை ஓரமாக இருந்த அகிப் என்னும் எண்ணெய் நிறுவனத்தின் அலுவலகங்களே அடையாளம் தெரியாத துப்பாக்கிதாரிகளால் தாக்கப்பட்டதாகப் பொலீஸார் தெரிவிக்கின்றனர். விசைப் படகுகளில் வந்த ஆயுததாரிகள் தாக் குதலின் பின் அதே படகுகளை உபயோ கித்துப் பெருந்தொகைப் பணத்தையும் சூறையாடிக் கொண்டு தப்பிச் சென்றனர் எனத் தாக்குதல் சம்பவத்தை நேரில் கண்டவர்கள் தெரிவித்தனர்.

அரசின் பேச்சாளர் ஒருவர் செய்தி ஏஜென்சி ஒன்றுக்கு கருத்துத் தெரிவிக்கையில், 30 பேரடங்கிய தீவிரவாதக் கும்பல் ஒன்று ஏ.கே.-47 ரகத் துப்பாக் கிகள் சகிதம் விசைப் படகுகளில் வந்து தாக்குதல் நடத்திவிட்டுத் தப்பிச்சென் றது என்று கூறினார்.

இந்த எண்ணெய் நிறுவனத்தின் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதலில் மிகப் பெரிய தாக்குதல் சம்பவம் இது என அதிகாரிகள் தெரிவித்தனர்.

பொலீஸார் மீது நடத்திய தாக்குதல் முடிவடைந்த பின் தீவிரவாதிகள் வங்கி ஒன்றையும் சூறையாடிக்கொண்டு மிகப் பாது காப்பாகத் தமது தரப்பில் எந்த உயிரிழப் புகளும் இன்றி வந்த வழியேயே தப்பிச் சென்றனர் என்று தெரிவிக்கப்படுகின்றது.

நைகர் கழிமுகப் பகுதியில் அமைந்துள்ள எண்ணெய் நிறுவனங்களின் மீது சமீப காலமாக நடத்தப்பட்டு வரும் தாக்குதல் சம்பவங்களில் மிக மோசமான தாக்குதல் சம்பவம் இது என்பது குறிப்பிடத்தக்கது. (ம)

## தற்காப்புக்காக மக்கள் கொள்ளையரைச் சுடலாம்

### இத்தாலியில் சட்டம் வருகிறது

வெனிஸ், ஜன.28

தமது தற்பாதுகாப்பிற்காக மக்கள் கொள்ளையர்களைத் துப்பாக்கியால் சுடுவதற்கு அனுமதிக்கும் சட்டமூலம் ஒன்றை இத்தாலிய நாடாளுமன்றம் நிறைவேற்றியுள்ளது.

வீடுகளிலோ அல்லது வேலைத்தளங்களிலோ, உயிர் மற்றும் உடைமை களிற்கு ஆபத்தை விளைவிக்கும் கத்தி, துப்பாக்கி ஆகிய ஆயுதங்களைப் பயன்படுத்திக் கொள்ளையில் ஈடுபடுபவர்களுக்கு எதிராகத் தம்மைப் பாதுகாத்துக் கொள்ள மக்கள் துப்பாக்கியைப் பயன்படுத்த இந்தச் சட்டமூலம் அனுமதி அளிக்கின்றது.

குற்றச் செயல்களிற்கு எதிராகக் குரலெழுப்பிவரும் நொதேன் லீக் கட்சி, இத்தாலிய அரசில் அங்கம் வகிக்கின்ற இடதுசாரிக் கட்சி ஒன்றே இந்தப் பிரேரணையை நாடாளுமன்றத்தில் முன்வைத்து வெற்றிகண்டுள்ளது.

எதிர்க்கட்சிகள் இந்தச் சட்டமூலத்தை எதிர்த்து வாக்களித்தன. மக்கள் சட்டத்தை தமது கையில் எடுத்துக்கொள்ள இது தூண்டுதலாக அமையப் போகின்றது என அவை குற்றஞ்சாட்டின.

தமக்கு அல்லது மற்றவர்களிற்கு இழைக்கப்படும் வன்முறைகளிற்கும் மற்றும் தமது உடைமைகள் மீது ஏற்ப டுத்தப்படும் குற்றச் செயல்களிற்கும் எதிராக சட்டபூர்வமாகப் பதிவுசெய்யப் பட்ட ஆயுதங்களைப் பயன்படுத்தி தம் மைத் தற்காத்துக்கொள்ளும் அதிகாரத்தை மக்களுக்கு இந்தச் சட்டமூலம் ஏற்படுத் திக்கொடுக்கும் எனத் தெரிவிக்கப் படுகிறது.

இந்தச் சட்டமூலம் உருவாகுவதற்கு பின்புலமாகச் செயற்பட்ட நீதியமைச்ச ரான றொபேட்டோ காஸ்ட்லி என்பவர் இது தொடர்பாகக் கருத்துத் தெரிவிக்கை யில் ''இன்று அப்பாவிப் பொதுமக் களை மிகவும் பயமுறுத்தச் செய்யும் கிரிமினல் குற்றங்கள் பெருகியுள்ளன'' என்று தெரிவித்தார். இவர் நொதேன் லீக் கட்சியின் முக்கிய உறுப்பினர்களில் ஒருவராவார்

கிரிமினல் வழக்குகளில் வாதாடும் சட்டத்தரணிகள் [illegible] எதிர்த்துக் [illegible] (ம)



ரசிகர்களின் தொல்லையில் இருந்து தப்பிக்க அரபுப் பெண்கள் அணியும் 'அபயா' உடையில் தன்னை மறைத்துக்கொண்டு பஹ்ரெயின் வர்த்தகமையம் ஒன்றுக்கு வந்தார் பிரபல பாடகர் மைக்கேல் ஜக்சன். அவரை வர்த்தகமையப் பாதுகாவலர் கார் நிறுத்தப்பட்டுள்ள இடம்வரை அழைத்துச் செல்வதைப் படத்தில் காணலாம். சிறுவர் துஷ்பிரயோகக் குற்றச்சாட்டின் பேரில் அமெரிக்க நீதிமன்றில் தொடரப்பட்ட வழக்கில் இருந்து கடந்த ஜூன் மாதம் விடுதலையான மைக்கேல் ஜக்சன் வளைகுடா நாடுகளின் அரச குடும்பங்களது விருந்தினராகத் தற்போது சுற்றிவருகிறார். இப்போது பஹ்ரெயினில் தங்கியுள்ள அவருடன் முகத்தை மூடியபடி மூன்று சிறுவர்களும் வர்த்தக மையத்துக்கு வந்திருந்தனர். அவர்களில் ஒரு சிறுவனும் படத்தில் காணப்படுகின்றான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புதுப்பொலிவுடன் வாழ்க்கையை ஆரம்பிக்க ஆழிப்பேரலை பாதித்தவர்களுக்கு உதவுவோம்!

## மன்னார் மறைமாவட்ட ஆயர் வேண்டுகோள்

மன்னார்,ஜன.28

சிதைந்துபோன எம் உறவுகளின் ஆன்மா சாந்தியடைய இறைவனிடம் வேண்டுகின்றேன். ஆழிப்பேரலையால் இறந்தவர்களின் உறவுகளுக்கு நாம உதவிக்கரம் கொடுக்க வேண்டும். இதன் மூலம் அவர்கள் புதுப் பொலிவுடன் வாழ்க்கையை ஆரம்பிக்க முடியும்.

- இவ்வாறு மன்னார் மறைமாவட்ட ஆயர் அதிவந்தனைக்குரிய பேரருட்திரு. இராயப்பு ஜோசேப் ஆண்டகை தெரிவித்தார்.

ஆழிப்பேரலையால் உயிரிழந்தவர்களின் ஆத்மசாந்தி வேண்டி இரங்கல் வழிபாடு அண்மையில் மடுமாதா திருப்பதியில் நடைபெற்றது.

மன்னார் வாழ்வுதய நிறுவனத்தின் அனுசரணையுடன் இடம்பெற்ற இந்நிகழ்வு வழிபாட்டுடன் ஆரம்பித்து மன்னார் மறைமாவட்ட ஆயர் அதிவந்தனைக்குரிய பேரருட்திரு. இராயப்பு ஜோசேப் ஆண்டகை அவர்களும் குருக்களும் இணைந்து கூட்டுத்திருப்பலி ஒப்புக்கொடுத் தனர்.



அருட்தந்தை பி.நேசன் அடிகளார் ஆற்றிய மறையுரையில் தெரிவித்ததாவது:-

ஆழிப்பேரலையால் எமது நாட்டிலும் ஏனைய நாடுகளிலும் இறந்தமக்கள் ஒரு நிமிடத்தில் இயற்கையின் கோபத்தினால் மறைந்தவர்கள், இவர்களின் ஆன்மா சாந்தி அடைந்து மீண்டும் பிறப்பார்கள்.

இறைவன் மனிதம் சிதைந்தவர்கள் மத்தியிலேயேயும் ஏழை, எளியவர் மட்டிலேயும் அதிக அன்பு கொண்டவராய் இருக்கின்றார். இக்கோர கடல் அனர்த் தத்தினால் இறந்தவர்களின் உறவுகள் இன்றும் விரக்தியின் விளிம்பி லேயே நிற்கின்றனர். காரணம் இவர்களின் உடல், உளம் மிகவும் பாதிக்கப் பட்டுள்ளது. இவர்களின் வாழ்வு மலர வேண்டும். புதுப்பொலிவுடன் மீண்டும் தமது வாழ்க் கைப் பயணத்தை ஆரம்பிக்க வேண்டும். ஆழிப்பேரலையால் இறந்து போனவர்களின் ஆன்மாசாந்தியடையவேண்டும். இதேவேளையில் இறந்தவர்களின் உறவுகள், உடல் உள ஆரோக்கியம் பெற்று வாழ இறைவனிடம் பிரார்த்திக்கவேண்டும் என்றார். நிகழ்வில் பெரு மளவு மக்கள் கலந்துகொண்டனர்.

(ப-204)

## தாச்சிச் சங்க நிர்வாகிகள்

யாழ்.மாவட்ட தாச்சி விளையாட்டுச்சங்கத்தின் வருடாந்தப் பொதுக் கூட்டமும் புதிய நிர்வாகசபைத்தெரிவும் கடந்த வாரம் கோண்டாவில் ஸ்ரீநாராயணா சனசமூக நிலையத்தில் இடம்பெற்றது.

இந்த ஆண்டுக்கான தலைவராக யாழ்ப்பாண மோட்டார் போக்குவரத்துத் திணைக்களத்தின் உத்தியோகத்தர் செ.சண்முகலிங்கமும் செயலாளராக ஓய்வுபெற்ற தெல்லிப்பழை உதவிப்பிரதேச செயலர் க.பீதாம்பரமும் பொருளாளராக யாழ்.மாவட்ட கூட்டுறவுச்சபை உத்தியோகத்தர் சி.ஆனந்தஜேஸ்கரனும் தெரிவுசெய்யப்பட்டனர். (ஒ-75)




# ஒழுக்கமும் நற்பண்பும் கூடிய இளைஞர்களே நாட்டுக்குத் தேவை

## கலாநிதி வ.கந்தசாமி தெரிவிப்பு



நீதியும் அறமும் ஒழுக்கமும் ஜனநாயகப் பண்பும் கூடிய இளைஞர்கள் தான் இன்று நாட்டுக்குத் தேவை. அறநெறிக் கல்வி மூலம் இவர்களை உருவாக்கமுடியும்.

- இவ்வாறு யாழ்.சைவ பரிபாலன சபைத் தலைவர் கலாநிதி வ.கந்தசாமி தெரிவித்தார்.

மானிப்பாய் மருதடி விநாயகர் ஆலய அறநெறிப் பாடசாலை மாணவர்கள் நடத்திய பொங்கல் விழா அண்மையில் நடைபெற்றது.

அதிபர் சமூகஜோதி கா.கணேசதாசன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் கந்தசாமி மேலும் தெரிவித்ததாவது:-

மானிடப் பிறவி கிடைத்தற்கரியது. இதனால் வாழு நாளை வீணாக்காது வாழப் பழகவேண்டும். இதற்குத் தெய்வ நம்பிக்கை தான் துணைபுரியும். சமுதாய நலனைச் சிந்தித்து அறநெறியில் வாழ வழிகாட்டுவனவாக அறநெறிப் பாடசாலைகள் விளங்கவேண்டும். பரந்த நோக்கோடு முதியோரை மதிக்கும் பண்பை வளர்த்து இவ்வுலகில் வாழ் வாங்கு வாழவைப்பதே சமயக் கல்வியின் நோக்கமாகும். அறநெறிப் பாட சாலைகள் இதனை சிறார்கள் மனதில் விதைத்து நற் பிரஜைகளாக வளர, வாழ வழிகாட்டும் உயிர்களிடத்தில் அன்பு வைக்கவேண்டும். தெய்வ வழிபாட்டை மேற்கொள்ளவேண்டும். இதன் மூலம் நாட்டில் நற்பிரஜைகள் உருவாகுவார்கள் - என்றார். (90-204)

# மாணவர்களைத் தண்டனையால் அன்றி அன்பினால் உணர்த்தி உயர்த்தலாம்

## உதவிக் கல்விப் பணிப்பாளர் அறிவுரை

அச்சுவேலி,ஜன.28

தண்டனைகள் வழங்கப்பட்டு மாணவர்களை மேல்நிலைப்படுத்தமுடியாது. அன்புடன் அவர்கள் விடும் தவறுகளை உணர்த்துவதன் மூலம் சம்பந்தப்பட்டவர்கள் முழுமையாகத் திருந்த இடமுண்டு.

- இவ்வாறு கூறினார் யாழ். கல்வி வலய ஆரம்பக்கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர் எஸ்.சுவாமிநாதன்.

பிள்ளைநேயப் பாடசாலை ஆசிரியர்களுக்கான செயலமர்வு அண்மையில் அச்சுவேலி மத்திய கல்லூரியில் நடைபெற்றது. அதில் கலந்துகொண்டு எஸ்.சுவாமிநாதன் உரையாற்றுகையில் தெரிவித்ததாவது:-

பாடசாலைக் கல்வியில் மாணவர்களுக்கு விருப்பமில்லாத நிலை காணப்படுவதற்கும் மாணவர்கள் இடைவிலகல் அதிகரித்துச் செல்வதற்கும் பல்வேறு காரணிகள் கண்டறியப்பட்டுள்ளன. இதில் நேயம் இல்லாத பாடசாலைச் செயற்பாடும் ஒன்றாகக் காணப்படுகின்றது.

சமகாலச் சூழலில் திரைப்படங்கள், தொலைக்காட்சி நாடகங்கள் மற்றும் ஆடம்பர நிகழ்வுகள் நேயமில்லாத ஒரு சமூகச் சூழலையே பிரதிபலிக்கின்றன. இதன் தாக்கம் மாணவர்கள் மத்தியிலும் பெருமளவில் காணப்படுகின்றது.

நேயமில்லாத சமூகச் சூழலில் இருந்து பாடசாலைக்குவரும் மாணவர்களுக்குப் பாடசாலைகளிலும் தண்டனை வழங்குவது அவர்களைப் பெருமளவில் பாதிக்கின்றது. பாடசாலைக்குப் பிந்திவந்தால் தண்டனை; வீட்டு வேலைகளை நிறைவுசெய்யாவிடில் தண்டனை; பாடசாலைக்கு வராமல் நின்றால் தண்டனை என மாணவர்களுக்கு வழங்கப்படும் தண்டனையின் பட்டியல் நீண்டுகொண்டு செல்லும். தண்டனை முறைகளும் மாறுபட்டுச் செல்லும்.

தண்டனை மூலம் மாணவர்களைக் கல்வியில் மேல் நிலைப்படுத்தலாம் என்பது கல்விக் கொள்கைகளுக்கு முரணானது. மாணவர்கள் மீது நேயத்தோடு அவர்கள் விடும் தவறுகள் உணர்த்தப்படவேண்டும். தவறை உணரும்போது சம்பந்தப்பட்டவர்கள் முழுமையாகத் திருந்த இடமுண்டு.

நேயம் அடிமட்டத்தில் இருந்து மாணவர்களுக்கு ஏற்படுத்தப்படவேண்டும். அன்பு செலுத்துபவர்களை மாணவர்கள் ஏற்றுக் கொள்வார்கள். அவர்களின் கருத்துகளை உள்வாங்கி தங்களை மாற்றிக்கொள்வதை நடைமுறையில் கண்டுகொள்ளலாம். அச்சுறுத்தலுக்கும் தண்டனைக்கும் சந்தர்ப்பம் சூழ்நிலையில் பணிந்தவர்கள் போலக் காணப்பட்டாலும், தண்டனையின் எதிர்த் தாக்கம் அவர்களிடம் வேறு விதத்தில் பிரதிபலிக்கலாம்.

பாடசாலை வகுப்பறைகள், மாணவர் கல்வி கற்கும் அனைத்து இடங்களும் கல்வி நிலையில் மாணவர்களை கவரக்கூடிய இடங்களாக மாற்றப்பட வேண்டும் - எனக் கூறினார். யாழ்.கல்வி வலய பிள்ளைநேயப் பாடசாலைச் செயற்றிட்ட இணைப்பாளர் எஸ்.குகதாசன் கருத்தரங்கு தொடர்பான ஒழுங்கமைப்புகளைச் செயல்முறைப்படுத்தினார்.(ப-11-204)

# ஆபாசத் திரைப்பட எதிர்ப்பியக்கம் உருவாக்கப்பட வேண்டும்

யாழ்ப்பாணம்,ஜன.28

இளம் சமுதாயத்தின் சிந்தனையைத் திசை திருப்பிவிடும் மூன்றாந்தர மட்டரகமான சினிமா கலாசாரத்திற்கு எதிராகப் போராடுவதற்கு கலை. கலாசார அமைப்புகள் முன்வரவேண்டும். ஆபாசத் திரைப்படங்களை இல்லாதொழிக்க 'ஆபாசத் திரைப்பட எதிர்ப்பியக்கம்' உருவாக்கப்படவேண்டும். இவற்றின் மூலமாகவே நல்ல சினிமாக் கலாசாரத்திற்கான அடிக்கல்லை நாட்டமுடியும்.

'சலன சித்திரம்' அமைப்பின் யாழ். மாவட்ட அமைப்பாளர் எம்.ஷாந்தன் சத்தியகீர்த்தி இவ்வாறுதெரிவித்தார்.

அண்மையில் உரும்பிராய் திருமறைக் கலாமன்றத்தில் நடைபெற்ற இளையோர் ஆளுமை பயிற்சிப் பட்டறையில் "புதிய சினிமாக் கலாசாரத்தை நோக்கி....." என்ற தலைப்பில் கருத்துரை வழங்குகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் உரையாற்றுகையில் கூறியதாவது:-

சினிமா என்ற ஆயுதம் நல்லவர்களின் கையில் இருக்கும்போதுஅதனால் நல்ல விளைவு கிடைக்கும்.

உலகமயமாதல் என்ற போர்வைக்குள் இவற்றைத் தடுக்கமுடியாத இக்கட்டுநிலையில் அரசு தடுமாறி நிற்கின்றது. இந்த நாசகாரச் சதிவலையிலிருந்து மீளவேண்டுமாயின் 'மக்கள் கலை இயக்கம்' புரட்சிகர கோஷம் இடவேண்டும். பிரதேச ரீதியான திரைக்கலைச் சங்கங்கள் உருவாக்கப்பட்டு இந்த இயக்கம் வழிநடத்தப்பட வேண்டும்.

பாடசாலைகளில் நிறுவப்படும் திரைக் கலைச் சங்கங்களின் மூலமாக மாணவர் மத்தியில் நல்ல திரைப்படங்களை அறிமுகம் செய்துவைக்கமுடியும். பிறமொழிகளில் வெளிவந்த நல்ல படங்களைப் பார்ப்பதன் மூலமே மட்டரகமான மசாலா படங்களிலிருந்து விடுபடமுடியும். அத்துடன், நேர்த்தியான கலைத்துவத்தையும் தரிசிக்கமுடியும். - என்றார். (ப-204)


## திருமண அழைப்பு

அன்புடையீர்!

நிகழும் சுபமங்களகரமான பார்த்திப வருடம் தை மாதம் 15 ஆம் நாள் (28.01.2006) சனிக்கிழமை காலை 8.30 மணி வரும் சுபயோக சுப முகூர்த்த வேளையில்

திரு.திருமதி அழகரட்ணம் தம்பதியரின் கனிஷ்ட புத்திரன் திருநிறை செல்வன்

**ஜீன்எடிசன்**

(எடிசன்-லண்டன்)

அவர்களுக்கும்



திரு.திருமதி குணசேகரம் தம்பதியரின் சிரேஷ்ட புத்திரி திருநிறை செல்வி

**வசந்தினி**

(வசந்தி-லண்டன்)

அவர்களுக்கும்

இறைவன் திருவருள் துணைகொண்டு யாழ்.புனித மரியன்னை பேராலயத்தில் மெய்விவாக அருட்சாதனம் நடத்தப் பெரியோர்கள் நிச்சயித்திருப்பதால், அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் இத்திருப்பலியில் பங்குகொண்டு மணமக்களை ஆசீர்வதித்து தொடர்ந்து மணமகள் வீட்டில் நடைபெறும் மதியபோசன விருந்துபசாரத்திலும் கலந்து வைபவத்தைச் சிறப்பிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

திரு.திருமதி அழகரட்ணம்
மேரியம்மா குடும்பத்தினர்
20/1,சேத்துப்பிடிச்சி வீதி,
சங்கானை.

திரு.திருமதி குணசேகரம்
அனோஜா(ரதி)குடும்பத்தினர்,
இல.82,பருத்தித்துறை வீதி,
யாழ்ப்பாணம்.

(இரு வீட்டார் அழைப்பு)

(46084)






உத்தியோகபூர்வ முடிவுகள்

டிக்கட் தொடர் இல. 7399677 முதல் 7409986 வரை. சீட்டிழுப்பு இல. 206 திகதி 26-01-2006

வெற்றி எண்கள்

8 2 8 9 5 6 சுப்பர் எண் 14

ஜக்பொட் பரிசு ரூ. 16,258,650/- வெல்லப்படவில்லை

| வெற்றி எண்கள் | வெற்றி பெற்றோர் | பரிசுத் தொகை | முழு பரிசுத் தொகை |
|---|---|---|---|
| 6 எண்களுடன் சுப்பர் எண் | 0 | 16,258,650/= | - |
| இடது பக்கமிருந்து முதல் 6 எண்கள் | 01 | 1,000,000/= | 1,000,000/= |
| இடது பக்கமிருந்து முதல் 5 எண்கள் | 09 | 50,000/= | 450,000/= |
| இடது பக்கமிருந்து முதல் 4 எண்கள் | 90 | 5,000/= | 450,000/= |
| இடது பக்கமிருந்து முதல் 3 எண்கள் | 878 | 500/= | 439,000/= |
| இடது பக்கமிருந்து முதல் 2 எண்கள் | 8807 | 50/= | 440,350/= |
| இடது பக்கமிருந்து முதல் 1 எண் | 87262 | 10/= | 872,620/= |
| வலது பக்கமிருந்து முதல் 5 எண்கள் | 09 | 5,000/= | 45,000/= |
| வலது பக்கமிருந்து முதல் 4 எண்கள் | 90 | 1,000/= | 90,000/= |
| வலது பக்கமிருந்து முதல் 3 எண்கள் | 883 | 100/= | 88,300/= |
| வலது பக்கமிருந்து முதல் 2 எண்கள் | 8734 | 20/= | 174,680/= |
| | | மொத்தம் ரூ. | 4,049,950/= |
| மோட்டார் சைக்கிள்களின் பெறுமதி | 08 | 75,325/= | 602,600/= |

வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை 4,652,550/-

ரூ. 75,325/- பெறுமதியான எட்டு மோட்டார் சைக்கிள்களை வெற்றிபெற்ற 8 டிக்கட்டுகளின் தொடர் இலக்கங்கள்

| | |
|---|---|
| கண்டி | 7402661-7-67 |
| புத்தளம் | 7406719-2-89 |
| காலி | 7401908-7-34 |
| இரத்தினபுரி | 7404198-2-25 |
| மொனராகல | 7405243-2-19 |
| கம்பஹா | 7404160-1-86 |
| பொலன்னறுவ | 7401534-7-39 |
| கொழும்பு | 7404354-1-83 |

எதிர்வரும் திங்கட்கிழமை சுப்பர் ஜக்பொட்

ரூ. 16,503,500/-

தொடர் இல. 6487266 க்கு மேற்பட்ட மஞ்சள் நிற டிக்கட்டுகள் 2006 ஜனவரி 30 ஆம் திகதி திங்கட்கிழமை சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

வளமான வாழ்விற்கு அபிவிருத்தி லொத்தர்

அபிவிருத்தி லொத்தர் சபை
356, டொக்டர் கொல்வின் ஆர். டி. சில்வா மாவத்தை... வீதி, கொள்ளுப்பிட்டி, கொழும்பு 03.


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரங்கள்

## விற்பனைக்கு

6kw, 5kw, 1.5kw டீசல் ஜெனரேற்றர், றொபின் 15 நீரிறைக்கும் இயந்திரமும் விற்பனைக்குண்டு. தொடர்பு: மூர்த்தி, சிவன் வீதி, பரவைக்குளம், திருநெல்வேலி.(45991)

## காணி விற்பனைக்கு

தோப்பு, ஏழாலை தெற்கு, சுன்னாகத்தில் 8 பரப்பு வீட்டுடன் சேர்ந்த வான் பயிர் பிரயோசனங்களுடன் உடன் விற்பனைக்குண்டு. தொடர்பு: 0777 316634, 077-3506451. (சி-47525)

## வீடு விற்பனைக்கு

பல்கலைக்கழகம், தொழில்நுட்பக் கல்லூரிக்கு அண்மையில் கொக்குவில் பிரம்படி ஒழுங்கையில் சகல வசதிகளையும் கொண்ட வீடு விற்பனைக்குண்டு. தொடர்பு:T.P.No. 021-222 6345 (57093)

கொழும்பு நாரஹேன்பிட்டி அன்டர்சன் தொடர்மாடியில் மேலதிக நிலத்துடன் முற்றிலும் ரைல்ஸ் பதிக்கப்பட்ட கீழ் வீடு விற்பனைக்குண்டு. தொடர்பு: 0112 508082. (57085)

## இறைச்சிக்கோழி விற்பனைக்கு

Prima உயிர் Broiler மற்றும் இறைச்சிக் கோழிகள் சுகாதார முறைப்படி உடன் சுத்தம் செய்து தினமும் பெற்றுக்கொள்ளலாம் (Electronic நிறுவை). தொடர்பு: (நல்லூர் வீடியோ சென்ரர் வளவு), 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர். (சி-47498)

## தவறிவிட்டது

சண்டிலிப்பாய் மத்தி, சண்டிலிப்பாய் என்ற முகவரியை உடைய இராமதாஸ் சின்னப்பிள்ளை என்பவருடைய விசேட அடையாள அட்டை (0007016843) யாழ்ப்பாணத்திற்கும் இளவாலைக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் மேற்குறிப்பிட்ட முகவரியில் ஒப்படைத்துதவவும். (சி-47546)

21.01.2006 சனிக்கிழமை சங்கானை சித்தங்கேணி வீதியில் தென்னை, பனை உற்பத்திச் சங்கத்திற்கும் தியேட்டருக்கும் இடையில் மூக்குக் கண்ணாடி தவறிவிட்டது. அதனைக் கண்டெடுத்தவர்கள் கீழ்க்காணும் முகவரியுடன் தொடர்பு கொள்ளவும். (தகுந்த சன்மானம் வழங்கப்படும்) இ.க.பாலசிங்கம் வடலியடைப்பு. (46053)

பத்தமேனி, அச்சுவேலியைச் சேர்ந்த பொன்னையா பாலசிங்கம் என்பவரது தேசிய அடையாள அட்டை (440453090V) 24.01.2006 செவ்வாய்க்கிழமை இருபாலைக்கும் அச்சுவேலிக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் மேற்கூறிய முகவரியில் ஒப்படைக்கவும். T.P.No. 0776510158. (57076)

'மயூரபவனம்' சுன்னாகத்தைச் சேர்ந்த, பதஞ்சலி ஆனந்த மகேஸ்வரன் என்பவரது சாரதி அனுமதிப்பத்திரம் (11853813) தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் மேற்கூறிய முகவரியில் ஒப்படைக்கவும். T.P.No. 0777111481 (46060)

## காணவில்லை

N.R என்ற குறியுடைய சிவப்பு வெள்ளை பூச்சி பசுவைக் 24.01.2006 முதல் காணவில்லை. கண்டவர்கள் தொடர்புகொள்ளவும். S.நவரட்ணம், பழைய உதயன் பணிமனை லேன், கைலாசபிள்ளையார் கோயிலடி, யாழ்ப்பாணம். T.P.No. 021 - 4590102. (46070)

**Refresh System**
புதிய, பழைய கணனிகள் வீட்டில் வந்து திருத்திக்கொடுக்கப்படும். தொடர்பு: சுதுமலை, மானிப்பாய். 077-6279671, 077-3253104.
(44848)(21.16.17)

## வாடகைக்கு

யாழ்ப்பாணம், சிவன் பண்ணை வீதியில் 2 கடைகள் வாடகைக்குண்டு. ஸ்ரோராகவும் அலுவலகப் பாவனைக்கும் உகந்தது. ஞாயிறு தவிர்ந்த ஏனைய நாள்களில் காலை 9 மணி முதல் மாலை 6 மணி வரை பார்வையிடலாம். அட்வான்ஸ் எதிர்பார்க்கப்படும். T.P.No. 077-3276270, 0779063030 (46051)

கோண்டாவில் சந்திக்கும் இறைச்சிக்கடைக்கு பக்கத்தில் பலாலி வீதியில் அமைந்துள்ள 5 அறைகள் உடன் திருத்தி அமைத்த வீடு வாடகைக்குண்டு. தொடர்பு: திருமதி கிருஷ்ணமூர்த்தி, மகேந்திரநாதன், பொற்பதி றோட், கோண்டாவில் கிழக்கு, கோண்டாவில். (கடை). (46057)

சகல வசதிகளுடன் கூடிய வீடு வாடகைக்கு உண்டு. தொடர்பு: 10/2, புகையிரத வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம் (உதய நாகபூசணி ஆலயத்திற்கு அருகில்) தொடர்பு: 0779578244. (57086)

## மணமகன் தேவை

யாழ்.இந்து கெளரவ குடும்பத்தைச் சேர்ந்த, 27 வயது, 8இல் செவ்வாய், மூல நட்சத்திரம், கிரகபாவம் 30, உயரம் 5'7" உடைய ஆசிரியைக்கு மணமகன் தேவை. (வெளிநாடு விரும்பத்தக்கது) தொடர்பு: விளம்பர இல. 2794, மே/பா உதயன். (57071)

யாழ்.இந்து கெளரவ குடும்பத்தைச் சேர்ந்த, 1974 இல் பிறந்த, யாழ்ப்பாணத்தில் அரச வேலை புரியும் 5'6'' உயரமான B.B.A பட்டதாரி மணமகளுக்கு பொருத்தமான மணமகன் தேவை. தொடர்பிற்கு: விளம்பர இல. 2792, மே/பா உதயன், யாழ்ப்பாணம். அல்லது 0777-303813 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்புகொள்ளவும்.(45986)

## மணமகள் தேவை

இந்து உயர்குடும்பத்தைச் சேர்ந்த, 1969 ஆம் ஆண்டு, பூரட்டாதி நட்சத்திரம், கிரக பாவம் குறைந்த U.K. இல் நிரந்தர வதியுரிமை கொண்ட மணமகனிற்கும், 1973ஆம் ஆண்டு அச்சுவினி 3ஆம் பாதம் கிரகபாவம் குறைந்த U.K. மணமகனிற்கும் O/L, A/L படித்த சிவந்த அழகிய மெல்லிய பெண் தேவை. தொடர்பிற்கு: 0776248679. (46064)

## தொழிற்சாலை மீது குண்டு வீழ்ந்தது

இரத்மலானை விமானப்படை முகாமில் நேற்று முன்தினம் காலை விமானப்படையினர் பயன்படுத்தும் ரொக்கட் செலுத்திக் குண்டு ஒன்று தவறுதலாகத் திசைமாறிப் பாய்ந்தது. அதிவேகத்தில் சென்ற இந்தக் குண்டு இரத்மலானையிலுள்ள ஆடைத் தொழிற்சாலையின் கூரைமீது வீழ்ந்தது.

ஆனாலும், தெய்வாதீனமாக அது வெடிக்கவில்லை. அது கூரையில் வீழ்ந்தவேளை சுமார் 600 ஊழியர்கள் அங்கு கடமையாற்றிக் கொண்டிருந்தனர். சிலவேளை இந்தக் குண்டு அங்கு வெடித்துச் சிதறியிருந்தால் தொழிற்சாலையிலிருந்த பலர் உயிரிழந்திருப்பர் என அஞ்சப்பட்டது. இது குறித்துக் கல்கிஸைப் பொலீஸார் விசாரணைகளை நடத்தி வருகின்றனர். (க)

## கோழிக்குஞ்சு விநியோகம்

இரண்டு முறை தடுப்பு மருந்து போடப்பட்ட Original Prima Broiler குஞ்சுகள், பேட்டுக் குஞ்சுகள் 06.02.2006 திங்கள் பிற்பகல் விநியோகிக்கப்படும். எமது பருத்தித்துறை-நெல்லியடிக் கிளைகளிலும், ஐங்கரன் களஞ்சியம் - திருநெல்வேலி, முருகன் - சாவகச்சேரி, நல்லூர் பாம் சென்ரர்- 19 முருகேசர் ஒழுங்கை, முத்திரைச்சந்தையடி, நல்லூர். (சி-47500)

## நாய்க்குட்டி விற்பனைக்கு

60 நாள்கள் பூர்த்தியடைந்த நல்ல இன ஜேர்மன் சீபேட் அல்சேஷன் பெண் நாய்க்குட்டிகள் விற்பனைக்குண்டு. தொடர்பு: M.ஆதித்தன், பருத்தித்துறை. T.P.No. 077-6684793. (45991)

45 நாள்கள் நிரம்பிய அல்சேசன் நாய்க்குட்டிகள் (கறுப்பு நிறம்) விற்பனைக்குண்டு. பூச்சி நீக்கப்பட்டது. தொடர்பு: P.கமலநாதன், கலையரசு வீதி, நவாலி தெற்கு, மானிப்பாய்.(57096)

## 60ஆம் ஆண்டு திருமணநாள் வாழ்த்து



திரு.திருமதி
**செல்லையா இரத்தினம்**

இவர்களைப் பல்லாண்டுகாலம் வாழ எல்லாம்வல்ல நவாலி களையோடை கண்ணகை அம்பாள் அருள்புரிவாராக.

இவர்களை வாழ்த்துபவர்கள்:
சந்திரன் குடும்பம் (மகன்) - கண்ணகை அம்பாள் கிறசர், கணேசு குடும்பம் (மகன்) - டிப்பர் ரான்ஸ்போட், ராஜேந்திரன் குடும்பம் (மகன்) - மக்கள் வங்கி, இந்திரா குடும்பம் (மகன்) - டிராக்டர் ரான்ஸ் போட் சத்திவடிவேல் (மருமகன்) - சைக்கிள் கடை உரிமையாளர், திருச்செல்வம் (மருமகன்) - அம்பாள் கடை, லங்கேஸ்வரி (கிளி - மகள்), ராணி (மகள்), பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.

நவாலி தெற்கு, மானிப்பாய்.
T.P.0776146474 (46058) (24-19-17-21) சந்திரன் (மகன்).

**எமது தாயக மண்ணில் நூறுவீதம் செய்முறைப் பயிற்சியுடன் எமது மாணவர்களும் கணனித்துறையில் பாரிய விற்பனர்கள் ஆக வேண்டுமென்ற கனவை நினைவாக்கும் நோக்குடன் சிறந்த செய்முறைப் பயிற்சிக்கூடத்துடன் அமைக்கப்பட்டுள்ளது.**

**நாங்கள் யார்?**

- இந்தியாவை தலைமையிடமாகக் கொண்டு செயற்படுபவர்கள்.
- இந்திய பொறியியல் துறையில் எலக்ட்ரோனிக்ஸ் அன்ட் கொமுனிக்கேசன் துறையில் சிறப்புப் பட்டம் பெற்றவர்கள்.
- 2 தசாப்த காலமாக இந்திய மற்றும் உலக முன்னணி நிறுவனங்களில் வேலைசெய்து அனுபவம் பெற்றவர்கள்.
- உலக முன்னணி நிறுவனங்களான IBM, Compaq, Dell, Bell Labs, Dlink, Link sys, Microtek, Cisco மற்றும் Gateway போன்ற நிறுவனங்களுடன் இணை Hardware & Network பொருட்கள் தயாரிப்பில் பாரிய பங்காற்றியவர்கள்.
- உலக முன்னணி நிறுவனங்களான Microsoft, Sun microsystems, Lotus Intl, AT& T Labs, SCO, Oracle மற்றும் Infosys நிறுவனங்களுடன் மென்பொருள் இணைத் தயாரிப்பில் ஈடுபட்டவர்கள்.
- கடந்த ஒரு வருடகாலமாக **UNIT** நிறுவனமூடாக கணனி உதிரிகள், வலைப் பின்னலமைப்பிற்கான உதிரிகள் மற்றும் அதற்குரிய சேவைகளையும் வழங்கிக் கொண்டிருப்பவர்கள்.

**கணனிக் கல்வியில் எமது முதல் கல்**

**HARDWARE**

→PC Components, Features, and System Design →Microprocessor Types and Specifications →Motherboards and Buses →BIOS & CMOS RAM →Memory Types and Cache Memory →The IDE, SCSI, SATA Interfaces →Magnetic HDD, FDD Storage Principles →Optical Storage →Video and Audio Hardware →Local Area Networking, Internet Builds-up and Tune ups →SMPS, Assembling & Evaluating a System →BIOS and CMOS Configuration, Setups and Fine Tunings →PC Diagnostics, Testing, and Maintenance →Operating System Installation, Configuration and Repairing →Dos Commands, Virus Scanners, Cleaner Installation and Operation →Trouble Shooting →Remote and Mobile Interfaces →Chip Level and Card Level Trouble Shooting →Mother Board repairing, Scope diagnostics, Chip Level Servicing →Software based Diagnostics system →Infrared, Blue Tooth Connectivity

**NETWORK**

Simplex, Duplex Types · The Ethernet System · The Media Access Control Protocol · Full-Duplex & Auto-Negotiation · Twisted-Pair, Fiber Optic, Fast Ethernet, Gigabit Ethernet Media System · Multi-Segment Configuration Guidelines · Structured Cabling · Ethernet Repeater, Switching, Router Hubs · Network OS Installation & Configuration (WinXP, Win2000 & Win98) · LAN, WAN & MAN fundamentals · Troubleshooting · Configuring the Interface, Routing, DNS & Network Servers · Send mail · Memory Buffers · Interface Layer · Interfaces: Ethernet, SLIP and Loop Back · IP Addressing · Domains and Protocols · Internet Protocol · Option Processing · Fragmentation and Reassembly · Internet Control Message Protocol · Multicasting · IGMP: Internet Group Management Protocol · IP Multicast Routing · Socket Layer, I/O & Options · Radix Tree Routing Tables · Routing Requests and Routing Messages · Routing Sockets · ARP, UDP & TCP · TCP Timers, Output, Functions, Input & User Requests · BPF, Raw IP · Trouble shooting TCP/IP · Network Security · Internet Information Resources · PPP Tools · Campus Network Design Models · Basic Switch and Port Configuration · VLANs and Trunking · Redundant Switch Links · Trunking with ATM LANE · Inter VLAN Routing · Multilayer Switching · Configuring Multicast Networks & Access in the Campus Environment · Monitoring and Troubleshooting · Scenarios for Final Preparation · Routing Principles · Extending IP Addresses · Configuring OSPF in a single Area · Interconnecting Multiple OSPF Area · Configuring EIGRP · Configuring Basic Border Gateway Protocol · Implementing BGP in Scalable Networks · Optimizing Routing Update Operation · Implementing Scalability Features in Internet work

Field Offices: **UNIT**, India. Aram Menporulagam, India. Zensoft, Malaysia. Zensoft, USA. WinCisco Labs, Canada.

பயிற்சிகள் பற்றிய விபரங்களுக்கு
தொடர்பு
நிர்வாகம்
**UNIT** Education
16/1, Killnar Lane,
Jaffna.
Near Jaffna Hindu College, Opp Lane to Parmikuttu Pillayar Kovil,
K.K.S. Road, Opp Lane to Velankanni Church, Kasthuriyar Road,
Jaffna.

Free Course Material

100% JOB ASSISTANCE
Inauguration Offer
இன்று Admission எடுப்பவர்களுக்கு
50%
பயிற்சிக்கட்டண கழிவு வழங்கப்படும்

100% Field Training

## யாழ்ப்பாண - மாநகரசபை
## வியாபார அனுமதிப்பத்திரம் - 2006
### மாநகரசபைகள் கட்டளைச் சட்டம் அத்தியாயம் 252 பிரிவு 247ஏ, 247பி, 247சி அறிவித்தல்

யாழ்ப்பாணம் மாநகர எல்லைக்குட்பட்ட சகல வியாபார நிலையங்களும், தொழிற்சாலைகளும், தனியார் வைத்திய ஆலோசனை நிலையங்களும், தனியார் கல்விநிலையங்களும் உயர்தொழில் நிறுவனங்கள் போன்ற வேறு தொழில் யாவும் எதிர்வரும் 28.02.2006ஆம் திகதிக்கு முன்பு தமது தொழில் சம்பந்தமான வெளியுரைகளை மாநகர அலுவலகத்தில் சமர்ப்பித்து 2006.03.31ஆம் திகதிக்கு முன்னர் உரிய கட்டணங்களையும் வரிகளையும் செலுத்தி உத்தரவுப் பத்திரங்களைப் பெற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

தொழில் மாற்றம் செய்பவர்கள், புதிய தொழில் ஆரம்பிப்பவர்கள், தொழில் நிலையங்களை மூடுபவர்கள் உடனுக்குடன் மாநகராட்சி மன்றத்திற்கு அறியத்தந்து ஒத்துழைப்பு வழங்குமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

சீ.வி.கே.சிவஞானம்,
மாநகர ஆணையாளர்,
மாநகரசபை, யாழ்ப்பாணம்.

மாநகர சபை,
யாழ்ப்பாணம். (சி/47544) (24.21.17.19)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மானிப்பாய் இந்துக் கல்லூரி பழைய மாணவர் சங்கம் பொதுக்கூட்ட அறிவித்தல்

பௌர்ணமி நிலா சஞ்சிகை வெளியீடு -
05.02.2006 ஞாயிறு பி.ப. 3 மணிக்கும்

பொதுக்கூட்டம் -
12.02.2006 ஞாயிறு பி. 3 மணிக்கும் நடைபெறும்.

செயலாளர்,
சு.லீலாக்கிருஷ்ணன் J.P.

(46066)(32-34-45)

## கண்டெடுக்கப்பட்டுள்ளது

ஆடியபாதம் வீதிக்கும் பிறவுண் றோட்டிற்கும் இடையில் தங்கச்சங்கிலி ஒன்று கண்டெடுக்கப்பட்டுள்ளது.

தொடர்பு:

கிஷாந் கபே,
ஆடியபாதம் வீதி, கொக்குவில்
0714168450
0777152638
0776549634.

(46073)(32-34-45)

## சாவகச்சேரி அருள் மிகு துர்க்காதேவி தேவஸ்தானம் துர்க்கா திருமண மண்டபம்

சென்ற 18 ஆம் திகதி திறப்பு விழா நடைபெற்றது. இம் மண்டபத்தில் திருமணம் உட்பட சகல மங்களகரமான வைபவங்கள் நடத்தமுடியும். சுவையான சாப்பாடுகளும் ஒழுங்குசெய்து கொடுக்கப்படும். முன் கூட்டியே பதிவு செய்து கொள்ளவும். ஆயிரம் பேர் ஒரே நேரத்தில் மண்டபத்தில் அமரலாம்.

(46063)(26-32-34-45)

தர்மகர்த்தா.

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



புவிவாழ்வு
18.12.1939

இறைவாழ்வு
08.02.2005

அமரர்
### தம்பையா சோமசுந்தரம்
(சரவணை மேற்கு, வேலணை)

திதி:28.01.2006

ஆண்டு ஒன்றான போதும்
ஆறவில்லை எம் துயரம்
எங்களுக்கு நல்வழிகாட்டிய அப்பாவே!
எமக்கு இனிய வாழ்வளித்த தெய்வமே!
உங்கள் நினைவுகள் எங்களை விட்டுப் போகாது
என்றென்றும் எங்கள் உயிர் உள்ளவரை
இந்த மண்ணில் உங்களோடு வாழ்ந்த காலங்கள்
எம்மனதை விட்டு அகலாது!

உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டுகிறோம்.

62/5, அன்னாத்திர லேன்,
கந்தர்மடம்,
யாழ்ப்பாணம்.

என்றும் உங்கள் நினைவுகளுடன்:
மனைவி, மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

(46059) (39-32-34-45)

## A/L பௌதிகவியல், இணைந்த கணிதம் வகுப்புகள்

பல வருடங்களாக மேற்படி பாடங்களைக் கற்பித்து வரும் ஆசிரியரினால் மிகச் சிறப்பாக 20 வருட A/L வினாத்தாள்கள் உட்பட ஏராளமான பயிற்சிகளுடன் கற்பிக்கப்படும். M.C.Q இற்கான விளக்க விடை களுடன் கொடுக்கப்படும். தனிப்பட்ட முறையிலும் கற்பிக்கப்படும். முழுப்பாடத்திட்டமும் குறுகிய காலத்தில் முடிக்கப்படும். பெற்றோர் தொடர்பு விரும்பத்தக்கது. மீட்டலும் உண்டு. வகுப்புகள் நடைபெறுகின்றன.

T.P.:0776648751.

R.பாலசுப்பிரமணியம்,
B.Sc.(Cey)Dip.in.Ed.
17/1, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.

(46068)(32-34-45)

## ALLIANCE FRANCAISE DE JAFFNA

83, Palaly Road,
Kantharmadam, Jaffna.
Phone: 021 222 8093

யாழ். பிரெஞ்சு நட்புறவுக் கழகம்
பிரெஞ்சு மொழி வகுப்புகள்

### புதிய பிரிவு

சிறுவருக்கான
கல்லூரி மாணவருக்கான
வேலைசெய்வோருக்கான
மொழிபயிலும் ஆர்வமுள்ளோருக்கான
தொடக்கநிலை வகுப்புகள்
ஆரம்பிக்கப்படவுள்ளன.

பதிவுசெய்தலுக்கு நேரில் வரவும்
அல்லது தொலைபேசியில்
தொடர்புகொள்ளவும்.

(46069)

## MECHANICAL ENGINEER

**VACANCY** exists for Mechanical Engineer with a Degree/Diploma in Mechanical Engineering with 5 years post qualification experience in Mechanical Engineering workshop with at least 2 years in the management capacity.

We are looking for proactive self motivated person with pleasent qualities.

The selected candidate will be offered an attractive package.

Please forward your application within 2 weeks to:

**The Managing Director,
Promoters Engineering Co.Ltd.
844, Point Pedro Road
Nallur, Jaffna.**

(C/47448)

## மரண அறிவித்தல்

### சிதம்பரப்பிள்ளை நல்லையா



திக்கத்தைப் பிறப்பிடமாவும் வல்வெட்டி, சீனட்டியை வசிப்பிடமாகவும் கொண்ட சிதம்பரப்பிள்ளை நல்லையா அவர்கள் 24.01.2006 செவ்வாய்க்கிழமை காலமாகி விட்டார்.

அன்னார் நல்லம்மாவின் அன்புக் கணவரும் பாஸ்கரசாமி (சுவிஸ்), சபாரட்ணம் (லண்டன்), புஸ்பராணி (கௌரி- சுவிஸ்), குலராணி (ஜேர்மனி), பாலசுப்பிரமணியம் (சுவிஸ்), லோகநாதன் (சுவிஸ்), விஜயலட்சுமி (லண்டன்) ஆகியோரின் அன்புத் தந்தையும் சிவக்கொழுந்து, செல்வராணி (லண்டன்), சவுந்தரராசா (சுவிஸ்), சூரியமூர்த்தி (ஜேர் மனி), விஜயலட்சுமி (சுவிஸ்), மஞ்சுளா (சுவிஸ்), பிரபாகரன் (லண் டன்) ஆகியோரின் அன்பு மாமனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (28.01.2006) சனிக்கிழமை நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக எள்ளங்குளம் மயானத்திற்கு முற்பகல் 10.30 மணிக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சீனட்டி ,வல்வெட்டி.

தகவல்:
திருமதி ந.நல்லம்மா.

(46071)(32-34-45)

## INVITATION TO BID

**Health Infrastructure Development Program funded by UNICEF & SCISL for the Ministry of Social Welfare of the Democratic Socialist Republic of Sri Lanka :**

**Construction of Social Development Centres:**

1. Memorandum of Understanding between the Government of Sri Lanka UNICEF & SCISL has been signed to construct Social Development Centres in the areas affected by Tsunami on 26th December 2004 The United Nations Office for Project Services (UNOPS)- Sri Lanka Project Implementation Facility is providing technical services as implementation partner of the Ministry of Social Welfare, UNICEF and SCISL.

2. The United Nations Office for Project Services – Sri Lanka Project Implementation Facility therein after referred to as "UNOPS", invites sealed bids from eligible bidders **with ICTAD Grading M6 or above, for the Construction of Social Development Centres at locations** given below:

| | |
|---|---|
| Lot 1 | SDC -Island North (Kayts) |
| Lot 2 | SDC -Karaveddi |
| Lot 3 | SDC - Point Pedro |
| Lot 4 | SDC - Chavakachcheri |
| Lot 5 | SDC - Karainagar |
| Lot 6 | SDC - Maruthankerny |
| Lot 7 | SDC - Thellipalai |
| Lot 8 | SDC - Nallur |
| Lot 9 | SDC - Sandilipay |

3. Interested bidders may submit a written application and purchase a complete set of bidding documents upon the payment of a refundable fee of **Rs 1,000.00.** Bidding documents will be issued to eligible bidders from 9.30 am to 5.00 pm on working days from **30th January 2006** to **03rd February 2006** at

**UNOPS-SLPIF Area office Jaffna,
123 Temple Road, Jaffna.**

**Contractors with ICTAD Grading M6 or above may submit complete bids (Lots 1 to 9) or partial bids for individual lots, provided full BOQ's are submitted in a lot for each location.**

4. Additional information regarding the Bidding Documents will be available at the office of the of UNOPS-SLPIF at 123 Temple Road, Jaffna.

5. All bids must be delivered to UNOPS at UNOPS-SLPIF in Jaffna at 123 Temple Road, Jaffna. before 2.00 pm on **08th February 2006**. Bids will be opened immediately thereafter in the presence of bidders or their authorized representatives who choose to attend.

6. UNOPS will not be responsible for any costs or expenses incurred by bidders in connection with the preparation of delivery of bids.

Country Coordinator
UNOPS- SLPIF

## INVITATION TO BID

**Health Infrastructure Development Program funded by World Vision for the Ministry of Social Welfare of the Democratic Socialist Republic of Sri Lanka :**

**Construction of Five Gramodaya Health Centers:**

1. Memorandum of Understanding between the Government of Sri Lanka and World Visions has been signed to rehabilitate the Health Infrastructure in the areas affected by Tsunami on 26th December 2004. World Vision has consented to provide assistance to the Ministry of Health of the Democratic Socialist Republic for rehabilitation of health infrastructure damaged by the tsunami. The United Nations Office for Project Services (UNOPS)- Sri Lanka Project Implementation Facility is providing technical services as implementation partner of the Ministry of Social Welfare and World Vision.

2. The United Nations Office for Project Services – Sri Lanka Project Implementation Facility therein after referred to as "UNOPS", invites sealed bids from eligible bidders with ICTAD Grading M6 or above, for the construction of five Gramodaya health centers at locations given below:

| | |
|---|---|
| Lot 1 | Neervely South |
| Lot 2 | Urelue West |
| Lot 3 | Kudathanai |
| Lot 4 | Kathkovalam |
| Lot 5 | Thumpalai East |

3. Interested bidders may submit a written application and purchase a complete set of bidding documents upon the payment of a refundable fee of **Rs 1,000.00.** Bidding documents will be issued to eligible bidders from 9.30 am to 5.00 pm on working days from **30th January 2006 to 03rd February 2006** at

**UNOPS-SLPIF Area office Jaffna,
123 Temple Road, Jaffna.**

**Contractors with ICTAD Grading M6 or above may submit complete bids (Lots 1 to 5) or partial bids for individual lots, provided full BOQ's are submitted in a lot for each location.**

4. Additional information regarding the Bidding Documents will be available at the office of the of UNOPS-SLPIF at 123 Temple Road, Jaffna.

5. All bids must be delivered to UNOPS at UNOPS-SLPIF in Jaffna at 123 Temple Road, Jaffna. before 2.00 pm on **10th February 2006**. Bids will be opened immediately thereafter in the presence of bidders or their authorized representatives who choose to attend.

6. UNOPS will not be responsible for any costs or expenses incurred by bidders in connection with the preparation of delivery of bids.

Country Coordinator
UNOPS- SLPIF

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ்ப்பாணம் மாநகரசபை

## வாகனத் தரிப்பிடக் கட்டண அறவீடு பற்றிய அறிவித்தல்

யாழ் நகரப் பகுதியில் கீழ்க்குறிப்பிடும் இடங்களில் தரித்து நிற்கும் வாகனங்களுக்குரிய தரித்தல் கட்டணம் இதுவரை யாழ்ப் பாண மாநகரசபை உத்தியோகத்தர் மூலம் அறவிடப்பட்டு வந்தது. கடந்த 20.01.2006 ஆம் திகதியிலிருந்து 31.12.2006 ஆம் திகதி வரைக்கும் இந்த அறவீடு தனியார் ஒருவருக்கு குத்தகைக்கு வழங் கப்பட்டுள்ளது.

1. பலாலி வீதி- ஆஸ்பத்திரி வீதிச் சந்தியிலிருந்து. கே.கே.எஸ். வீதி- ஆஸ்பத்திரி வீதிச் சந்திவரையிலான ஆஸ்பத்திரி வீதி.
2. புதிய தபால் நிலையச் சந்தியிலிருந்து மனோகராத் தியேட்டர் வரையிலான கே.கே.எஸ். வீதி.
3. ஆரியகுளம் சந்தியிலிருந்து கே.கே.எஸ். வீதி வரையிலான ஸ்ரான்லி வீதி.
4. பஸ்நிலைய வடக்குப்புற எல்லையிலிருந்து காங்கேசன்துறை வீதி சந்தி வரையிலான சீ.பொன்னம்பலம் வீதி (மின்சார நிலைய வீதி).
5. ஆஸ்பத்திரி வீதிக்கும் நாவலர் வீதிக்கும் இடைப்பட்ட கஸ்தூரியார் வீதி.

இத்தரிப்புகளுக்கான கட்டணம் வற் வரி நீங்கலாக பின்வருமாறு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

| | | |
|---|---|---|
| 1) மோட்டார் கார் | - ரூபா | 15/= |
| 2) மோட்டார் வான் | - ரூபா | 15/= |
| 3) பாரவூர்தி | - ரூபா | 25/= |
| 4) பிரயாணிகள் வாகனம் (பஸ்) | - ரூபா | 25/= |
| 5) முச்சக்கரவண்டி | - ரூபா | 5/= |
| 6) கொழும்பு பிரயாணிகள் வாகனம் (கொழும்பு பஸ்) | -ரூபா | 100/= |

மேற்படி கட்டண அடிப்படையில் அறவீட்டாளர் மேற்கொள் ளும் நடவடிக்கைக்குப் பூரண ஒத்துழைப்பு வழங்குவதோடு, இந் நடைமுறையில் ஏதாவது குறைபாடுகள் இருப்பின் அதனை எமக்கு எழுத்துமூலம் தெரிவிக்குமாறும் கேட்டுக்கொள்கின்றேன்.

(சீ.வீ.கே.சிவஞானம்).
மாநகர ஆணையாளர்,
மாநகர சபை அலுவலகம்,
யாழ்ப்பாணம்.

27.01.2006 (சி-47556) (54-11-34)

## மரண அறிவித்தல்



### தம்பித்துரை துரைராஜா (சந்திரன்)

ஆறுகால்மடத்தைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட தம்பித்துரை துரைராஜா அவர்கள் நேற்று (27.01.2006) வெள்ளிக் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தம்பித் துரை - துரையம்மா தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்ற சறோஜா அவர்களின் அன்புக் கணவரும் சர்மிளா, சந்திரிகா, சஜீவன், சசிகலா ஆகியோரின் அன்புத் தந்தையும் ஐங்கரன் அவர்களின் அன்பு மாமனாருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை(29.01.2006) ஞாயிற்றுக் கிழமை முற்பகல் 11 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக கோம்பையன் மணல் இந்து மயா னத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.


மயிலு வீதி,
ஆறுகால்மடம்,
ஆனைக்கோட்டை.

(46097) (54-11-34)

தகவல்:
சகுந்தலா (சகோதரி),
சஜீவன் (மகன்).

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

தோற்றம் 28 09 1928



மறைவு 29 12 2005

### அமரர் முனியையாபிள்ளை செல்லத்துரை (துரை)

(முன்னாள் திருமகள் அச்சக பணியாளர்)

29.12.2005 அன்று இறைபதம் எய்திய எமது குடும்ப ஒளிவிளக்கின் மரணச் செய்திகேட்டும் உதவிகள் பல புரிந்தும் ஆறுதல் கூறியும் தந்திகள், தொலைபேசிகள் என்பன மூலம் அனுதாபங்கள் தெரிவித்தோருக்கும் கண்ணீர் அஞ்சலி வெளியிட்டும் மலர் வளையங்கள் வைத்து தமது துயரங்களைப் பகிர்ந்துகொண்ட அனைவருக்கும் எமது நன்றியைத் தெரிவிக்கின்றோம்.

அத்துடன், இன்று (28.01.2006) சனிக்கிழமை எமது இல்லத்தில் நடை பெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் தொடர்ந்து நிகழும் மதிய போசனத் திலும் கலந்துகொள்ளும் வண்ணம் எமது உற்றார், உறவினர், நண்பர்கள் அனை வரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

57/37, திருமகள் வீதி,
அரியாலை.

(45092) (53-54-11-34)

குடும்பத்தினர்.


## உடன் வேலை வாய்ப்புகள்

வீடியோ - மிக்சிங் (Adobe Premiere) ஆற்றல் அனுபவம் உள்ளவர்கள் தொடர்பு கொள்ளவும். 28.01.2006 சனிக்கிழமை நேரில் சமுகம் தரவும்.

இராஜமாணிக்கம்
கல்யாண மண்டபம்
வீடியோ கலாமினி,
அச்சுவேலி.
T.P.: 077 3053080

(சி-47566) (54-11-34)

நாதன்ஸ் யாழ்ப்பாணம்
பொங்கல் வெளியீடு
அல்டிமேட் அஜீத், லைலா மற்றும் பலர் நடித்த
பரமசிவன்
காட்சி நேரம்: 10.30, 2.30



மனோகரா யாழ்ப்பாணம்
அதிரடி பொங்கல் வெளியீடு



இந்தியாவிலும் இலங்கையிலும் ஒரேதின வெளியீடு
(Dts நவீன ஒலிநுட்பத்துடன்)
ஆதி
இளைய தளபதி விஜய், த்ரிஷா மற்றும் பலர் நடிப்பில்
(வருகிறான் வரிப்புலி நாதியாய்)
தயாரிப்பு : S.A. சந்திரசேகர்
இசை : வித்தியாசாகர்
இயக்கம் : ரமணா
தினசரி: பு.நே. 10.30, 1.30, 4.30, 7.30

ராஜா யாழ்ப்பாணம்



சிம்பு, ஜோதிகா,பிரகாஷ்ராஜ் நடித்த
சரவணா
இயக்கம்: K.S.ரவிக்குமார்
ரிக்கற் முற்பதிவு செய்து கொள்ளலாம்.
காட்சிநேரம்: பு.நே. 10.30, 2.15 மட்டும்

நாகம்ஸ் சுன்னாகம்



சூர்யா, திரிஷா, வடிவேல் நடித்த
ஆறு
தினசரி: புதியநேரம் 11.00, 3.00


### இலவச மருத்துவ முகாம்

மானிப்பாய் வட்ட லயன்ஸ் கழகம் நடத் தும் இலவச மருத்துவ முகாம் நாளை காலை 8.30 மணிமுதல் கட் டுடை சைவ வித்தியா சாலையில் நடபெற வுள்ளது.

வைத்திய கலாநிதி நவமலர் கனகரத்தி னம்.வைத்தியகலாநிதி கே.இரத்தினசிங்கம், வைத்திய கலாநிதி எஸ்.சிவகணேஸ் ஆகி யோர் இதில் மருத்துவ பரிசோதனைகளை மேற் கொள்வர். இரத்த, சலரோக பரிசோதனை களும் கண் பரி சோதனைகளும் பொது மருத் துவ சேவையும் இங்கு இடம்பெறவுள் ளன. கண்பரிசோத னைக்கு ஏற்ப வசதி குறைந்தவர்களுக்கு இலவசமாக மூக்குக் கண்ணாடி வழங்கப் படும். (த)


A/L 2007 LOGIC
பெறுகை முறை
Mr.R.ரமணன் B.A.(Dip.In.Edu)
Sat., Sun., 4.30 p.m.
Econ: - Mr.ரஜீரன்
H/C - Mr.மயூரன்
Ta - Mr.சிவா
Chr - Mrs.A. மல்லிகா
A/L 2008 ஆரம்பமாகிவிட்டது.
SHAMROCK
ஈச்சமோட்டை, யாழ்நகர்.

படிவம்
இலங்கை கல்வி நிர் வ ாக சேவை தரம் III திறந்த போட்டிப் பரீட் சைக்கு விண்ணப்பிப் பதற்கான படிவம் உண்டு.
முடிவுத்திகதி 27.02.2006
Bharathy Pathippakam,


## மரண அறிவித்தல்கள்

### இராயப்பு அந்தோனிப்பிள்ளை



(அப்புச்சி)

பெரிய விளானைப் பிறப்பிடமாகவும் கனடாவை வசிப்பிடமாகவும் கொண்ட இராயப்பு அந்தோனிப்பிள்ளை 26.01.2006 வியாழக்கிழமை அன்று கனடாவில் காலமா னார்.

அன்னார்அன்னம்மாவின் அன்புக் கண வரும் யேசுரட்ணம் (அதிபர்), ராணி, ராசு, குமார், சாந்தம்,டோமினிக் (இளவாலை, ஜங்கென்றீசியன் விளை யாட்டுக்கழக முன்னாள் வீரன்), ரவீந்திரன் ஆகியோரின் அன்புத் தந்தையுமாவார்.

அன்னாரின் நல்லடக்கம் கனடாவில் இன்று (28.01.2006) சனிக்கிழமை நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனை வரும் ஏற்றுக்கொள்ளவும்.

பெரியவிளான்,
இளவாலை.

(46085) (54-11-34)

தகவல்:
இ.மணி குடும்பம்
(சுதா பேக்கறி).

### கதிரேசு தங்கராஜா

(முன்னாள் ஊழியர் - சிமெந்துக் கூட்டுத்தாபனம்)

தெல்லிப்பழையைப் பிறப்பிடமாகவும் சுன்னாகம் கிழக்கை வசிப்பிடமாகவும் கொண்ட கதிரேசு தங்கராஜா 27.01.2006 இல் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கதிரேசு- அன்னமுத்து தம்பதியரின் அன்பு மகனும் செல்லப்பா- சிவபாக்கியம் தம்பதியரின் மரு மகனும் தவமணியின் அன்புக் கணவரும் தினேஷ் (ஆஸ்தி ரேலியா), பிரதீஷ் (கொழும்பு), திவ்ஜா ஆகியோரின் அன்புத் தந்தையுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சுன்னாகம் கிழக்கு,
சுன்னாகம்.

(46090) (54-11-34)

தகவல்:
குடும்பத்தினர்.

### தம்பிராசா பஞ்சநாதன்



(மருதனார் மடம் தேநீர்சாலை உரிமையாளர்)

மருதனார்மடத்தைப் பிறப்பிடமாகவும் றொட்டியாலடியை வதிவிடமாகவும் கொண்ட தம்பிராசா பஞ்சநாதன் 26.01.2006 வியாழக் கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற தம்பிராசா- சிவ பாக்கியம் தம்பதியரின் அன்பு மகனும் கந்தையா- இராசரத்தினம் தம்பதியரின் பாசமிகு மருமக னும் சந்திராதேவியின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற பரராஜ சிங்கம், நடராஜா (கனடா)ஆகியோரின் சகோதரரும் நிருபா (யா/இராமநாதன் கல்லூரி), சதீஸ் (யா/யூனியன் கல்லூரி), ஆகியோரின் பாசமிகு தந்தையும் தங்கேஸ்வரியின் மைத்து னரும் செல்வராசாவின் (அப்பன்) மாமனாரும் சாளினி (சுவிஸ்), நிசா (நோர்வே)ஆகியோரின் சிறிய தந்தையுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (28.01.2006) சனிக் கிழமை நண்பகல் 12 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் கந்தரோடை சங்கம்புலவு இந்து மயானத்தில் தகனஞ் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர் கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

திருமதி ச. பஞ்சநாதன்,
றொட்டியாலடி. காங்கேசன்துறை வீதி,
உடுவில் கிழக்கு, சுன்னாகம்.

(46096) (54-11-34)

தகவல்:
குடும்பத்தினர்.

### திருமதி செல்லத்துரை மங்களம்



(ரோசலீன்)

சிங்கப்பூரைப் பிறப்பிடமாகவும் கோப்பாய் மத்தியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி செல்லத்துரை மங்களம் (ரோசலீன்) 22.01.2006 அன்று காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 30.01.2006 திங்கட்கிழமை நண்பகல் 12 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கோப்பாய் கந்தன்காடு இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனை வரும் ஏற்றுக்கொள்ளவும்.

திருமால் இல்லம்,
கோப்பாய் மத்தி, கோப்பாய்.
தொ.பே.: 0776189889

(46093) (54-11-34)

தகவல்:
குடும்பத்தினர்.

### திருமதி சரவணபவானந்தன் ஜெயலட்சுமி

கைதடி வடக்கைப் பிறப்பிடமாகவும் சிறுப்பிட்டி தெற்கை வசிப்பிடமாகவும் கொண்ட சரவணபவானந்தன் ஜெயலட்சுமி அவர்கள் 25.01.2006 புதன்கிழமை காலமானார்.

அன்னார் தம்பிநாதர்-வள்ளிப்பிள்ளை தம்பதியரின் அன்புப் புதல்வியும் சரவணபவானந்தனின் பாசமிகு மனைவியும் சியா மளா, அனுசியா(ஜேர்மனி), கெங்காதரன் (சுவிஸ்), சண்முகப் பிரியா (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு தாயும் காலஞ்சென்ற ஸ்ரீவிஜயகுமார், பங்கேஸ்வரன்(ஜேர்மனி), வசந்தகுமாரி (சுவிஸ்), சிவகுப்தன்(பிரான்ஸ்) ஆகியோரின் மாமியும் காலஞ்சென்ற புவனேஸ்வரி வடிவேலு(சிங்கப்பூர்),பரமேஸ்வரி(சிங்கப்பூர்), கமலா(சிங்கப்பூர்),வேலாயுதம்(லண்டன்) ஆகியோரின் சகோ தரியும் கிரிசாந்,விநோஜ், நிவேதா, நிருபன் (ஜேர்மனி), அஸ்வின் (சுவிஸ்), மாதங்கி(பிரான்ஸ்) ஆகியோரின் பேர்த்தி யுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 29.01.2006 ஞாயிற்றுக் கிழமை முற்பகல் 10 மணியளவில் நடைபெற்று, பூதவுடல் சிறுப் பிட்டி இந்து மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனை வரும் ஏற்றுக்கொள்ளவும்

சிறுப்பிட்டி தெற்கு,
நீர்வேலி.

(46095) (54-11-34)

தகவல்:
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமாதானப் பேச்சுக்கான சூழலைக் கெடுக்கவேண்டாம்! சட்டவிரோத ஆயுதக் குழுக்களிடம் அரசு கோரிக்கை

கொழும்பு, ஜன.28

யுத்தநிறுத்த அமுல் தொடர்பான பேச்சை ஆரம்பிப்பதற்கான நல்லதொரு சூழ்நிலை உருவாகியுள்ள இந்த நேரத்தில் வன்செயல்களிலும் மோதல்களிலும் ஈடுபடுவதை சம்பந்தப்பட்ட சகல தரப்பினரும் நிறுத்திக் கொள்ள வேண்டுமென்று வடக்கு - கிழக்கில் இயங்கும் சட்டவிரோத ஆயுதக் குழுக்களையும் விடுதலைப் புலிகளையும் அரசாங்கம் கோரியுள்ளது.

புலிகளின் கட்டுப்பாட்டிலுள்ள மட்டக்களப்பு, தொப்பிகல, வடமுனை பகுதியில் சட்டவிரோத ஆயுதக் குழுக்களுக்கும், விடுதலைப் புலிகளுக்குமிடையே பாரிய மோதல்கள் இடம்பெறுவதாக செய்திகள் வந்துள்ளன. இதனையிட்டு அரசு கவலையடைந்திருக்கிறது. இதுபோன்ற மோதல் சம்பவங்கள், உருவாகியுள்ள பேச்சுக்கான சூழ்நிலைக்கு நிச்சயம் குந்தகம் விளைவிப்பனவாகவே அமையும். எனவே சம்பந்தப்பட்டோர் மோதல்களை தவிர்க்க முன்வரவேண்டும்.- என்றும் அரசு தெரிவித்துள்ளது.

இந்த மோதல் சம்பவத்தைக் கண்டிப்பதாகவும் அரசு சார்பில் விடுக்கப்பட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# கட்சி தாவும் விவகாரத்தில் தடுமாறுகிறார் புஞ்சிநிலமே!

கொழும்பு, ஜன.28

ஐக்கிய தேசியக் கட்சியின் இரத்தினபுரி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சுசந்த புஞ்சிநிலமே நேற்று அமைச்சராகச் சத்தியப் பிரமாணம் செய்துகொள்ளவிருந்த போதும் தவிர்க்க முடியாத காரணங்களால் அது பிற்போடப்பட்டதாக ஜனாதிபதி மாளிகை வட்டாரங்கள் தெரிவித்தன.

இவர் நேற்றையதினம் அமைச்சராகச் சத்தியப்பிரமாணம் செய்வதற்கு சுபவேளை கணிக்கப்பட்டிருந்த போதிலும், அவர் திடீரென மடகாஸ்கருக்கு புறப்பட்டுச் சென்றுவிட்டார் என அந்த வட்டாரங்கள் மேலும் கூறின.

அமைச்சுப் பதவி தொடர்பில் ஏற்பட்ட இழுபறி நிலையே இதற்கான காரணமெனத் தெரிவிக்கப்பட்ட போதிலும், ஐக்கிய தேசியக் கட்சித் தலைவருடன் நடத்திய பேச்சுகளையடுத்து சில வேளை மேற்படி எம்.பி. மனம் மாறியிருக்கக் கூடுமென ஐக்கிய தேசியக் கட்சி வட்டாரங்கள் தெரிவித்தன. (ஐ-க)

# சாவகச்சேரி டச்சு வீதிப் பகுதி நேற்றுக் காலை சுற்றிவளைப்பு!

## வீடுவீடாகப் புகுந்து படையினர் சோதனை

சாவகச்சேரி, டச்சு வீதிப் பகுதி இராணுவத்தினர் நேற்றுக்காலை சுற்றிவளைப்புத் தேடுதல் ஒன்றை நடத்தியுள்ளனர். காலை 6 மணிக்கு சாவகச்சேரி டச்சு வீதிப் பகுதியில் குவிக்கப்பட்ட பெருமளவிலான படையினர் வீடுவீடாகப் புகுந்து தேடுதல்களை நடத்தினர்.

காலை 9 மணிவரை நீடித்த இத்தேடுதலினால் டச்சு வீதிப் பகுதி நேற்று பதற்றத்துடன் காணப்பட்டது. ஆயினும் எவரும் இதன் போது கைதுசெய்யப்படவில்லை என்று அப்பகுதித் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இயல்பு நிலை மீண்டும் ஏற்படும் என்று எதிர்பார்த்த மக்களுக்கு படையினரின் இந்த சுற்றிவளைப்புத் தேடுதல் நடவடிக்கை மீண்டும் பீதியை ஏற்படுத்தியிருக்கிறது என்று மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர். (த)

# பாடல் இசைத்தட்டுகள் இன்று வெளியீடு

கிளிநொச்சி,ஜன.28

நிதர்சனம் நிறுவனத்தின் தர்மேந்திரா கலையகத்தினரின் உருவாக்கத்தில் இசைப்பிரியனின் இசையில் இரண்டு பாடல் இசைத்தட்டுக்களின் வெளியீடும் அறிமுகமும் இன்று மாலை 6.30 மணிக்கு கிளிநொச்சி மத்திய விளையாட்டு மைதானத்தில் நடைபெறவுள்ளன. இந்நிகழ்வில் 'முடிசூடும் தலைவாசல்' மற்றும் ஆழிப்பேரலை அவலம் சுமந்த தேச உறவுக ளின் நினைவு தாங்கிய 'ஈரமில்லாப் பேரலை' ஆகிய இசைத்தட்டுக்களே வெளியிடப்படவுள்ளன. நிகழ்வில் சிறப்பு நிகழ்வாக தமிழீழ இசைக்குழுவினரின் தாயகக் கானங்களும் இடம் பெறவுள்ளது. (ஐ-12)

# ஐ.தே. கட்சியின் ஆதரவைப் பெற முயற்சிக்காமல் தனிநபர் ஆதரவைப் பெற முயல்கிறார் ஜனாதிபதி

## குற்றம் சாட்டுகின்றார் அக்கட்சியின் பிரதிச் செயலாளர்

கொழும்பு, ஜன. 28

தேசியப் பிரச்சினைக்குத் தீர்வு காணும் முயற்சிகளின் போது கட்சி அடிப்படையில் ஆதரவைப் பெறாமல் தனிநபர்களின் ஆதரவைப் பெறுவதற்கு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ முயற்சிகளை எடுப்பாராயின், முக்கியமான பல தீர்மானங்களை எடுக்கவேண்டியேற்படலாமென்று ஐக்கிய தேசியக் கட்சி நேற்று அரசாங்கத்திற்கு எச்சரிக்கை விடுத்திருக்கிறது.

தற்போதைய அரசியல் நிலைவரம் தொடர்பில் நேற்று 'உதயன்'இற்குக் கருத்துத் தெரிவித்த ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதிப் பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க, அரசாங்கத்தின் அமைதி முயற்சிகளுக்கு ஒத்துழைப்பு வழங்கும் நல்லெண்ணத்தை தமது கட்சி இன்னமும் கடைப்பிடித்து வருவதாகக் கூறினார். அவர் மேலும் கூறியதாவது:-

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் அமைதி முயற்சிகளுக்கு நாம் முழுமையான ஒத்துழைப்பை வழங்குகிறோம். எதிர்காலத்திலும் வழங்கவுள்ளோம். அமைதி முயற்சிகளுக்கான ஆதரவை வாபஸ் பெறவோ அல்லது அமைதி முயற்சிகளுக்கு ஒத்துழைப்பை வழங்காமலிருக்கவோ ஐ.தே.க. முடிவுகளை எடுக்காது.

ஆனால், தேசியப் பிரச்சினைத் தீர்வில் கட்சி அடிப்படையில் எமது ஒத்துழைப்பைப் பெறாமல் தனி நபர்களின் ஆதரவைப் பெறுவதற்கு ஜனாதிபதி தீர் மானிப்பாரானால் நாமும் சில முக்கிய முடிவுகளை எடுக்க வேண்டியிருக்கும். எனவே, அவ்வாறான முயற்சிகளை நிறுத்துமாறு நாம் ஜனாதிபதியிடம் பகிரங்கமாகக் கோருகி றோம்.

அன்று நாம் முன்னெடுத்த பேச்சுகளை அதே முறையில் இப்போது இந்த அரசு முன்னெடுக்கிறது. ஜே.வி.பி. என்னதான் கூச்சலிட்டாலும், ஐ.தே.க. காட்டிய வழியிலேயே அமைதிப் பேச்சுகள் முன்னெடுக்கப்படுகின்றன.

-இவ்வாறு மேலும் கூறினார் ஐ.தே.க. பிரதிப் பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க. (ஐ-க)

# தமிழர்களின் தாயகத்தில்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

செயற்பாடு தமிழர் தாயகத்தில் இடம்பெறுவது வீண் குழப்பங்களை ஏற்படுத்தலாம் என்பது அரசுத் தலைமைக்குச் சுட்டிக்காட்டப்படிருப்பதாகத் தெரிகின்றது.

இந்நிலைமையில் -

தமிழீழ விடுதலைப் புலிகளோ அல்லது தமிழ்த் தேசியக் கூட்டமைப்போ இத்தேர்தல்களை ஒத்திவைக்கும்படி கோரினால் அதைச் சாதகமாகப் பரிசீலித்து நடவடிக்கை எடுக்க அரசுத் தலைமை தயாராக இருப்பதாகத் தெரிகின்றது.

இந்தத் தேர்தலுக்கான அறிவிப்பு அரசுத் தலைமையால் விடுக்கப்பட்டதல்ல. தேர்தல் திணைக்களம் தனக்குரிய சட்டக் கடப்பாடுகளின்படி இந்த அறிவிப்பை விடுத்திருக்கின்றது என்று சுட்டிக்காட்டும் அரசுத் தலைமை, தேவைப்பட்டால் இத்தேர்தல்களை ஒத்திவைப்பதற்கான வாய்ப்புகள், சட்ட ஒழுங்குகள் குறித்து நேற்றுத் தேர்தல் திணைக்களத்துடன் ஆலோசனை கலந்ததாகத் தெரியவருகின்றது.

தேர்தல் ஒன்று அறிவிக்கப்பட்ட நிலையில் வேட்புமனுத் தாக்கல் செய்த பின்னர், பாதுகாப்பு நிலைமையையோ அல்லது அது போன்ற வேறு முக்கிய விடயங்களையோ கவனத்தில் கொண்டு அத்தேர்தலை ஒத்திவைக்கமுடியும் எனத் தேர்தல் திணைக்களம் அரசுத் தலைமைக்குச் சுட்டிககாட்டியதாகக் கூறப்படுகின்றது.

இந்த அடிப்படையில் வடக்கு - கிழக்கில் முஸ்லிம்கள் மற்றும் சிங்களவர்களின் பிரதேசங்கள் தவிர்ந்த தமிழர் தாயகப் பகுதியில் தேவைப்பட்டால் - தமிழர் தரப்பிலிருந்து வற்புறுத்தல் வந்தால் - உள்ளூராட்சித் தேர்தல்களை ஒத்திவைக்க அரசு கொள்கை அளவில் தீர்மானித்திருக்கின்றது.

தமிழர் தாயகத்தில் ஒவ்வொரு மாநகர சபைக்கும், நகரசபைக்கும், பிரதேச சபைக்கும் ஒன்றுக்கு மேற்பட்ட வேட்பாளர் பட்டியல்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டால் அந்நிலையில் மாவட்டத் தேர்தல் தெரிவத்தாட்சி அலுவலர்களுடன் கலந்தாலோசித்துவிட்டு தேர்தல்களை ஒத்திவைக்கும் அறிவிப்பை தேர்தல் ஆணையாளர் விடுக்கமுடியும்.

ஆனால், ஏதேனும் உள்ளூராட்சி சபைக்கு ஒரேயொரு வேட்பாளர் பட்டியல் மட்டும் தாக்கலாகி ஏற்றுக்கொள்ளப்படுமாயின், தேர்தலோ, வாக்களிப்போ இன்றி அப்பட்டியலில் உள்ளோர் அந்த உள்ளூராட்சி சபைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டனர் என அறிவிக்கப்படவேண்டும் என்பதும் குறிப்பிடத்தக்கது.

எனவே, அரசுத் தலைமையின் இணக்கத்தோடு, தமிழர் தாயகத்தில் இத்தேர்தலை ஒத்திவைப்பதற்கு தமிழர் தரப்பு விரும்பினால், ஒவ்வோர் உள்ளூராட்சி சபைக்கும் ஒன்றுக்கு மேற்பட்ட - ஏற்றுக்கொள்ளப்படக் கூடிய - வேட்புமனுக்கள் தாக்கல் செய்யப்படுவதை அது உறுதிப்படுத்த வேண்டியிருக்கும் என்பது குறிப்பிடத்தக்கது.

2002ஆம் ஆண்டு முற்பகுதியில் தமிழர் தாயகத்தில் அறிவிக்கப்பட்ட உள்ளூராட்சித் தேர்தல்கள் இதே அடிப்படையிலேயே ஒத்திவைக்கப்பட்டு, பின்னர் காலத்துக்குக் காலம் ஒத்திவைப்பு நீடிப்புப் பிரகடனம் மூலம் இந்த மாதம்வரை தள்ளிவைக்கப்பட்டு வந்தது என்பது குறிப்பிடத்தக்கது.

கடந்த 18ஆம் திகதி நிறைவேற்றப்பட்ட புதிய சட்டம் ஒன்றின் மூலம் அப்போது ஏற்றுக்கொள்ளப்பட்ட வேட்புமனுக்கள் தள்ளுபடி செய்யப்பட்டதை அடுத்து, புதிய தேர்தல்களுக்கான வேட்பு மனுக்கள் நேற்று முன்தினம் உத்தியோகபூர்வமாக கோரப்பட்டிருக்கின்றன.

அத்தேர்தல்களையே மீண்டும் ஒத்திவைப்பது குறித்துத் தற்போது பரீசிலிக்கப்பட்டுவருகின்றது. (ஐ-க)

# ஜனநாயக வேருக்கு ஊற்றப்பட்ட வெந்நீர்

## இலங்கை ஆசிரியர் சங்கம் கண்டனம்

திருகோணமலை மாவட்ட 'சுடர் ஒளி' செய்தியாளர் சுகிர்தராஜனின் படுகொலை எழுத்துச் சுதந்திரம் எனும் ஜனநாயக வேருக்கு ஊற்றப்பட்ட வெந்நீராகும்.

-இவ்வாறு திருகோணமலை மாவட்ட இலங்கை ஆசிரியர் சங்கம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேற்படி அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

திருகோணமலை வாழ் தமிழ் பேசும் மக்களுக்கு எதிரான பேரினவாத, மனித உரிமை மீறல் நடவடிக்கைகளை பேனா எனும் ஆயுதம் கொண்டு எதிர்த்த போராளி சுகிர்தராஜன். அவரை இல்லா தொழிப்பதன் மூலம் அப்பட்டமான மனித உரிமை மீறல்களை சுலபமாக மக்கள் மீது அரங்கேற்றலாம் என்ற ஆர்ப்பரிப்போடு அலாவி நிற்கும் பேரினவாத சக்திகளின் எண்ணங்களும், கனவுகளும் ஒரு போதும் ஈடேறப் போவதில்லை. - இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-க)

# இந்தோனேஷியா..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வதற்கான அபாயம் உடனடியாக இல்லை என்று பசுபிக் ஆழிப்பேரலை எச்சரிக்கை மையம் தெரிவித்தது.

கடந்த 2004 டிசெம்பர் 26ஆம் திகதி இந்தோனேஷிய கடற் பிராந்தியத்தில் ஏற் பட்ட நிலநடுக்கத்தால் உருவாகிய ஆழிப் பேரலைகள் அந்தப் பிராந்தியத் திலும் இந்து சமுத்திரப் பிராந்தியத் திலும் பேரழிவை ஏற்படுத்தின.

இந்த நிலநடுக்கம் காரணமாக இந்தோனேசியாவின் கிழக்குப் பிராந்தியத்திலுள்ள அம்பொன் தீவில் மக்கள் பெரும் பீதியடைந்தனர்.

வீடுகளை விட்டு வெளியே பாதுகாப்புத் தேடி ஓடினர் என்று அறிவிக்கப்படுகிறது. (ஐ-12-190)

# ஹர்த்தாலினால்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வவுனியாவில் இயங்கும் அரச நிறுவனங்கள், அரசசார்பற்ற நிறுவனங்கள், வர்த்தக நிலையங்கள், கல்வி நிறுவனங்கள் போன்றவற்றில் கறுப்புக்கொடிகள் பறக்கவிடப்பட்டிருந்தன.

மனிதப் படுகொலைகள் மற்றும் வன்முறைகள் தொடராத வகையில் இலங்கை அரசு மற்றும் சர்வதேச சமூகத்தின் கவனத்தை ஈர்க்கும் இந்த ஹர்த்தாலும், கடையடைப்புப் போராட்டமும் முழுமையான வெற்றியைத் தந்திருக்கின்றன என வவுனியா தமிழ் மாணவர் ஒன்றியத்தினர் நேற்று மாலை தெரிவித்தனர்.

(... பக்கத்தில்) (ஐ-க)

# சேதமடைந்த...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

என்றும் - கருதப்படுகிறது.

காணாமற்போன மீனவர்கள் தொடர்பாக முல்லை மாவட்ட அரச அதிபர் மற்றும் வவுனியா, திருகோணமலை, யாழ்ப்பாணம் ஆகிய மாவட்டங்களின் போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினருக்கும் முறையிடப்பட்டுள்ளது. (ஐ-12)

# மரண அறிவித்தல்கள்

## சண்முகராஜா சண்முகலிங்கம் (அதிபர்)

உடுவில் தெற்கு, சித்திவிநாயகர் கோயிலடியைப் பிறப்பிடமாகவும், புளியடி வயிரவர் கோயிலடியை வசிப்பிடமாகவும் கொண்ட சண்முகராஜா (அப்பையா) சண்முகலிங்கம் அவர்கள் நேற்றுக் காலமாகிவிட்டார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

புளியடி வயிரவர் கோயிலடி,
உடுவில் தெற்கு, சுன்னாகம்.

(சி/47562) (33-11)

தகவல்:
குடும்பத்தினர்.

## திருமதி கதிரேசு ஆச்சிமுத்து

மந்துவில் கிழக்கைப் பிறப்பிடமாகவும் கல்வயலை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி கதிரேசு ஆச்சிமுத்து நேற்று (27.01.2006) வெள்ளிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் கதிரேசு (முன்னாள் அதிபர்) அவர்களின் அன்பு மனைவியும் இராசமோகன், சந்திரமோகன் ஆகியோரின் அன்புத் தாயுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (28.01.2006) சனிக்கிழமை பி.ப. 2 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக வேம்பிராய் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

(46098) (33-11)

தகவல்:
க.கதிரேசு (கணவர்)

ENGLISH MEDIUM
6, 7, 8 Class
A/L English Class
General English 6-11 வரை
by: R.Ruban (B.B.A.)
ஆரம்பம்: 28.01.2006 மாலை 3p.m.
இந்த வகுப்புகளுக்கு (தமிழ் மொழி) மூல ஆசிரியர்கள் தேவை. நேரில் வருகை தரவும்
திகழ் கல்வி நிறுவனம்
K.K.S. வீதி, இணுவில்

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 28.01.2006இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org